கோகுலம்


GOKULAM

நவம்பர் '95 ரூ. 5.00



INDIA'S LARGEST SELLING COMICS

DIAMOND COMICS



JOIN THE DIAMOND BOOK CLUB

AND FILL YOUR LIFE WITH FUN, THRILL & LAUGHTER

Just fill in the coupon given below and send it to us along with a Money Order or Postage Stamps worth Rs. 10/—

We shall be offering five books every month. To get a rebate of **Rs. 4/-and Free postage (approx. Rs. 7/—)** you'll have to order all the five to six books at a time in a month. In case these books are not of your choice then you are free to select any six books from the list of 'Diamond Comics' titles and we shall send you the same. But to get these benefits you'll have to order six books at a time.

We'll send you a Choice Card every month. If you like the books offered by us in the Choice Card then you need not send us the card back. In case you do not like the books then you send us the names of atleast 7 books of your choice so that we can send you 5 books of your choice available with us at that time.
Under this scheme, we shall be sending you a V.P. Packet by the 20th of every month.

Yes I would like to become a member of 'DIAMOND BOOK CLUB' and take advantage of the benefits. I have read all your rules and shall abide by these I promise to accept the V.P. every month.

NAME ____________________

ADDRESS ____________________

____

POST OFFICE ______ PIN CODE ______

I am sending Rs. 10/- by M.O./enclosing Postage Stamps worth Rs. 10/-

My Birth date ____________________

Note : We shall not enrol you as a member till we receive the membership fee.

DIAMOND COMICS PVT. LTD. X-30, OKHLA INDUSTRIAL AREA, PHASE-2, NEW DELHI-110020

DISTRIBUTORS : Madras : Sree Meenakshi News Agency, 64, Gaudiya Mutt Road • New Century Book House (P) Ltd. (Branches Madurai & Coimbatore) **Hyderabad** : • Shailendra Agencies, Bashir Bagh •Neel Kamal Book Distributors, Sultan Bazar **Bangalore** : Sapna Book Stall, Gandhi Nagar •A.K. Agencies, Rajaji Nagar •The Nav Karnataka Publications (P) Ltd., Crescent Road **Calicut** : Remami Agencies P.O. Arakinar Calicut •Amity International Book House Arfa Bldg., East Kattaparamba, Calicut



கோகுலம்

நவம்பர் 1995 மலர் : 13 இதழ் : 10

அருமைச் சிறுவர் சிறுமியரே,

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

தீபாவளி இதழைப் பாராட்டி ஏராளமான தம்பி தங்கைகள் கடிதம் எழுதியிருக்கிறார்கள். புவனா தேடிய புதையலைப் படிக்கும் போது அடுத்து புவனாவுக்கு என்ன நேருமோ என்ற பதை பதைப்பு எழுகிறது என்று பலரும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

வாண்டுமாமாவின் சித்திரத் தொடர் 'மரகதச் சிலை' திடீரென்று முடிந்து விட்டதே என்று கேட்டு வியப்புத் தெரிவித்துக் கடிதங்கள் வந்துள்ளன. இதெல்லாம் கோகுலத்தின் சிறப்பைக் காட்டுவதாகவே உள்ளன.

இது நவம்பர் மாதமாயிற்றே? குழந்தைகளுக்கு இனியவர் என்று பெயர் வாங்கிய நேருஜியின் பிறந்த நாள் 'குழந்தைகள் தினம்' இந்த மாதம்தானே? எதை மறந்தாலும் இதை மறக்க முடியுமா? உலக அமைதிக்காக அல்லும் பகலும் பாடுபட்ட நேருஜி, குழந்தைகளை எந்த அளவுக்கு விரும்பினார் என்பதை அறிந்து கொள்ள இந்த இதழில் ஒரு கட்டுரை வெளியாகிறது. இதே மாதம் பிறந்து குழந்தைகளின் உள்ளங்களைக் கொள்ளை கொண்ட குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களின் பெருமையைக் குறிக்கும் ஒரு பகுதியும் வெளியாகிறது.

எல்லா வகையான போட்டிகளையும் வைக்கிறீர்கள். குழந்தைகளுக்கான கவிதைப் போட்டி எதுவும் சமீபத்தில் வைக்கவே இல்லையே என்று சிலர் கேட்டிருக்கிறார்கள். வெகு விரைவில் கவிதைப் போட்டி ஒன்றை அறிவிக்கும் முயற்சி பரிசீலனையில் உள்ளது.

கோகுலத்தை உங்கள் நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் அறிமுகப் படுத்தி, அவர்களைக் காசு கொடுத்து வாங்கிப் படிக்கச் செய்யுங்கள்.

அனைவருக்கும் இனிய 'குழந்தைகள் தின' வாழ்த்துகள். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

அன்புடன்,

ரேவதி

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். — பாரதியார்.




கோகுலம்


1995

நவம்பர்

இந்த இதழில்....





* வெட்டுக் கிளி - பக்கம் 90



* வான்கோழி முட்டாளா? - பக்கம் 9

* கால்குலேட்டர் விடுகதை பக்கம் 4








"பிள்ளையாரப்பா! இந்த வருஷம் பாஸ் பண்ண வச்சிட்டா உனக்குக் குடிக்க ஒரு லிட்டர் பால் வாங்கித் தர்றேன்!"

– சீர்காழி. வி. ரேவதி



"பிள்ளையாரப்பா.. பால் கொண்டு வந்திருக்கேன்... ஸ்பூனால் ஊட்டி விடு றேன். சாப்புடுறாயா?"

"மோர்தான் எனக்குப் பிடிக்கும். உடனே போய் மோர் கொண்டா...!"

– நெற்குப்பை ஒ. மனோகரன்



"எதுக்கு பிள்ளையாரை முட்டுறே!"

"எனக்குக் குடிக்க பாலில்லாமல் பாலையெல்லாம் கறந்து இவருக்கே குடிக்கக் கொடுத்துடுறாங்களே!"

– நெற்குப்பை கி. மனோகரன்



கால்குலேட்டர் விடுகதை!



2



காஸ்குலேட்டர் பற்றிய விடு கதைகளை எழுதியனுப்பு மாறு வாசகர்களைக் கேட்டிருந் தோம். அடேயப்பா! நூற்றுக்கணக் கில் எழுதிக் குவித்துவிட்டனர்! சிலர் கம்ப்யூட்டருக்கும் கால் குலேட்டருக்கும் வேறுபாடு தெரியாமல் எழுதியிருந்தார்கள். இவைகளைப் பரிசிலித்து சிறப் பாக எழுதப் பட்ட சிலவற்றை இங்கே வழங்குகிறோம். வாசகர் களின் கற்பனைத் திறமைக்கு இது ஒரு எடுத்துகாட்டு. எத் தனை விதமான கோணங்களில் இதைப் படைத்திருக்கிறார்கள்! நீங்களும் படித்துப்பாருங்களேன்!

3

கையளவே உருவம்!

கையளவே உருவம்
கணக்கு எல்லாம் கச்சிதம்
அவன் யார்?

-த.சிவக்குமார்


வேலைக்காரன் அல்ல!

கூட்டுவான், பெருக்குவான்,
வேலைக்காரன் அல்ல...
-யாரவன்?

-பாளை பசும்பொன்

4





தொழிலாளி

'எண்'ணத்தைச் சொன்னாலும்
'பின்ன'த்தை சொன்னாலும்
சளைக்காமல் செய்யும்
'சரி'யான தொழிலாளி!
- யாரவன்?

-மு.முருகேசன்




கூடைக்காரி முதல்...

கூடைக்காரி முதல்
கோடீஸ்வரர் வரை
வியாபாரம் என்றவுடன்
முதலில் தேடுவது என்னையே!
- யார் நான்?

-த.வரதன்






அடித்துக் கேட்டால்தான்!

"கைக்கு அடக்கமான கணக்கு
வாத்தியார்...
அடித்து, அடித்துக் கேட்டால் தான்
சொல்லித் தருவார்?
- யாரவர்?

-டி.கே.எஸ்.பொன்னுசாமி



உலகையே காட்டிடுவான்!


உள்ளங்கைக்குள் இருந்திடுவான்
உலகையே கணக்கிடுவான்
-அவன் யார்?

-ஜெசி

குட்டிக் கணக்கன்!

தட்டுத் தடுமாறும்
நெட்டையர் நடுவில்
பட்டெனக் கூறிடும்
குட்டிக் கணக்கன்
அவன் யார்?

-ஐஸ்வர்யா ராஜதுரை



மூளையும் இல்லாமல்!

கைகளும் இல்லாமல்
மூளையும் இல்லாமல்
சட்டென்று கணக்கைத்
தந்திடுவேன்!
-நான் யார்?

-ர.க.கோவிந்தராஜ்





எங்கும் எதிலும்

நெடுங் கணக்கு நொடியில்
கடுங் கணக்கு கடிதில்
பொன்னான நேரமோ மிச்சம்.
உன்னாட்சியே இங்கு உச்சம்
என்னென்பேன் நீயே எங்கும் எதிலும்?

-ஏ.சிவப்பிரியா

பட்டன் உண்டு!

கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிய
மாயமென்ன?
காலத்தின் வேகத்தில் மூளையைக் கசக்கும்
வேலை மறைந்ததென்ன?
பட்டன் உண்டு, சட்டை அல்ல
கைக்குள் அடங்கும் கைக்குட்டையும் அல்ல
- நான் யார்?

-ஏ.நாகமணி

எண்களின் தோழன்

தட்டி விட்டால் போதும்
நொடியில் விடை தருவேன்
எண்ணி முடிக்கு முன்னே
எண்ணில் தீர்வைத் தருவேன்
பையிலும் கையிலும் அடங்கும்
எண்கள் தோழன் நானே!
-என்னைத் தெரிகிறதா?

-கி.கணேஷ்ராம்

கட்டணம் இல்லை!

கட்டணம் இல்லாமல்
கணிதத்தின் விடையை
திரையின் மூலம்
தினமும் சொல்லிவிடுவேன்
-நான் யார்?

-வி.பிரபாகர்

பாக்கெட்டில் இருப்பேன்

பாக்கெட்டில் இருப்பேன், பர்ஸ் அல்ல.
கூட்டுவேன் பெருக்குவேன் விளக்குமாறல்ல
கணக்கும் போடுவேன் கம்ப்யூட்டரல்ல
கண்டுபிடி என்பேரை என்னென்று?

-ச.ராஜஸ்ரீனா





TAMIL NADU PEOPLE'S BENEFIT FUND (PURASAWALKAM) LTD.,

79, Perambur Barracks Road, Purasawalkam, Madras - 600 007.

Central Government Approved (Reg. No. 18-21907/91) ☎ 6414536, 5323360

DEPOSIT SCHEME

	46 Days	3 Months	6 Months	1 Year	2 Years	3 Years	5 Years
FIXED DEPOSIT	15%	16%	17%	18%	19%	20%	21%

21% FOR SENIOR CITIZEN SPECIAL SCHEME

for Rs. 10,000/- and above 1 Year

21% for Rs.50,000 and above 5 Years-for all

Your Deposit Doubles in 42 months Triples in 70 months.

TNPBF HAPPY DAY MONEY BACK SCHEME	Pay Rs. 1000 on your happy day continuosly for 4 years and take Back Rs. 1250- every year on your happy day from the 5th year onwards for life long.

CASH CERTIFICATE	Rs.	1 Year	2 Year	3 Year	42 Months	70 Months	84 Months
	1,000	1,195	1,450	1,760	2,000	3,000	4,000
	5,000	5,975	7,250	8,800	10,000	15,000	20,000

"TAMIL MAHAL SELVAKALANCHIZAM" SCHEME

CASH CERTIFICATE	Rs.	10 Years	15 Years	18 Years
	1,000	6,920	18,900	30,000
	5,000	34,500	90,000	1,40,000
	10,000	69,000	1,80,000	2,80,000

"TAMIL ARASAN PORKUVIYAL" SCHEME

CASH CERTIFICATE	Rs.	15 Years
	7,500	1,30,000
	9,000	1,60,000

"SENTAMIL SELVAKUVIYAL" SCHEME

Rs.	21 Years
500	40,000
250	20,000

மங்கையர் திருமண திட்டம்

மாதம் ரூ. 100/- வீதம் 60 மாதங்கள் மட்டும் செலுத்தி 20ம் ஆண்டு முடிவில் ரூ. 1,50,000/- பெறலாம்.

கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ. 325 வழங்கப்படும். சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்.

வட்டி வீதம் ரூ . 1.85

SAVINGS DEPOSIT INTEREST RATE 10.5% P.A

கொடுக்கல் வாங்கல் ரூ.1/- செலுத்தி பங்குதாரர்களாகிறவர்களிடம் மட்டும்

WE WORK ALL DAYS

Working Hours : Week Days: 8.30 a.m. to 5.00 p.m. Sunday: 8.30 a.m. to 1.00 p.m.

V. KRISHNAMOORTHY B.A., B.L.,	A. THIAGARAJAN M.A.,	R.SUBRAMANIAN B.SC., B.L.,
Secretary	Executive Director	President



யானை

குன்று போல தோன்றும்
கன்னங் கரிய யானை
நின்று செல்லும் கால்கள்
நெடிய தூண்கள் போல.


முறத்தைப் போன்ற காது
விசிறி போல வீசும்
கரத்தில் ஒன்றைப் பெற்று
தலையில் ஆசி வழங்கும்

வானின் பிறையைப் போல
யானைக் குண்டு தந்தம்
யானை வரவை முந்தி
மணியின் ஓசை முழங்கும்

அன்று போரில் சென்று
வென்ற துண்டு யானை.
இன்று கோயில் வாசல்
நின்று மாலை சூட்டும்

பாகன் சொல்வ தெல்லாம்
பணிந்து செய்யும் யானை.
வேகங் கொண்டு திமிரும்
மதம் பிடித்து விட்டால்.

சி. விநாயக மூர்த்தி



வான்கோழி முட்டாளா?

ரேவதி

கூடத்தில் பூமாவின் பாட்டுச் சத்தம் பலமாகக் கேட்டது. மாமாவின் ஸ்கூட்டர் வந்து நின்ற சத்தம் கூட அவள் காதில் கேட்கவில்லை! ஆடலிலும் பாடலிலும் அந்த அளவுக்கு மூழ்கியிருந்தாள்.

மாமா மெதுவாக ஓசையின்றி உள்ளே வந்து, கூடத்தில் எட்டிப் பார்த்தார்.

"துருக்கி நாட்டுக் கோழி இது!
தோகை உள்ள கோழி இது!
அறிவே இல்லாக் கோழி இது!
அழகு வண்ணக் கோழி இது!"

கூடத்தில் இருந்த மேசை மேல் கையால் வரைந்து, வண்ணமிடப்பட்ட வான் கோழியின் படம் ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதன் எதிரே தான் பூமா. தன்னை மறந்து பாடி ஆடிக் கொண்டிருந்தாள்.

"பரிசு வாங்கிய கோழி இது!
பெருமை மிக்க கோழி இது!"

பாட்டு தொடர்ந்து, ஒருவழியாக முடிந்தது. மாமா உள்ளே வந்து கை தட்டியதும் தான் பூமா நன் நிலைக்கு வந்தாள். மாமாவைப் பார்த்ததும் மகிழ்ச்சி தாங்கவில்லை.

"எப்போ மாமா வந்தீங்க?"

"நீ பாடும் போதே வந்துட்டேம்மா. பாட்டும், நடனமும் நல்லா இருந்தது. சரி, அதையும் கொஞ்சம் கேட்போமேன்னு இப்படி ஓரமா ஒளிஞ்சுக் கிட்டேன்."

"அப்படின்னா, என் பாட்டும் நடனமும்தான் நல்லா இருந்ததா? நான் வரைந்திருக்கும் இந்த வான்கோழியின் படம் நல்லாவே இல்லையா?"

"அடே! நீயேவா வரைஞ்சே! நல்லா இருக்கே!" என்று மாமா பாராட்டியதும், பூமா குளிர்ந்து போனாள்.

"மாமா, வனவிலங்கு வாரம் வந்தது இல்லையா? அதை ஒட்டி எங்க பள்ளியில ஓவியப் போட்டி வைச்சாங்க. எல்லாரும் சிங்கம், புலி, மான்னு தெரிஞ்சதா எழுதினாங்க. நான் தான் கொஞ்சம் வித்தியாசமா இருக்கட்டுமேன்னு இந்த

வான்கோழியை வரைஞ்சு கலர் பண்ணி வைத்தேன். முதல் பரிசு கிடைச்சது மாமா."

மாமா, பரிசு வாங்கிய அந்த வான் கோழியின் படத்தைக் கையில் வாங்கிப் பார்த்தார். மிக அழகாகவே அதை பூமா வரைந்திருந்தாள். பரிசு பெற முற்றிலும் ஏற்றதே அது!

"பரிசு தரும் போது, எங்க தலைமை ஆசிரியர் என்ன சொன்னார் தெரியுமா மாமா? நீ வரைஞ்ச வான்கோழிக்குப் பரிசு கிடைச்சிருக்கு. அதுனால, பரிசு வாங்க மேடைக்கு வரும் போது, வான் கோழியைப் பத்தி ஒரு அருமையான பாட்டை எழுதி, பாடி, ஆடிக்காட்டு பார்க்கலாம். உனக்குத்தான் இது எல்லாம் தெரியுமே என்று சொல்லி விட்டார். எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியலே. கடைசியில் எப்படியோ யோசிச்சு, படிச்சது கேட்டது எல்லாத்தையும் நினைவுபடுத்தி இந்தப் பாடலை எழுதி, பாடி ஆடினேன். ஒரே கை தட்டல். ஓவியம் மிக அழகு. அதைவிட அழகு உன் பாட்டு, நடனம் எல்லாம் அழகு என்றார் தலைமைவகித்த பெரிய மனிதர்!"



"என்னைத் தலைமை வகிக்கச் சொல்லியிருந்தா பாட்டுக்காக நான் உன்னைப் பாராட்டியிருக்க மாட்டேன்!"

"என்ன மாமா! என் பாட்டு நல்லா இல்லையா?"

"பாட்டு, எளிமையா, அழகான சந்தத்தோட, கேட்க அருமையாத் தாம்மா இருந்தது. ஆனால், அதுல ஒரு கருத்துப் பிழை இருக்கும்மா."

பூமா, திகைப்புடன் மாமாவைப் பார்த்தாள்.

"ஆமாம்மா. ஒவ்வொரு அடியா பாடிக்கிட்டு வா."

"துருக்கி நாட்டுக் கோழி இது."

"எப்படி இதைத் துருக்கி நாட்டுக் கோழின்னு சொல்றே?"

"இதுக்குப் பெயரே டர்கி தானே மாமா? டர்கி என்பதற்கு துருக்கி என்று தானே பொருள்? துருக்கி நாட்டைத்தானே ஆங்கிலத்தில் டர்கி என்கிறார்கள்?"

"ஆமாம்மா. சந்தேகமே இல்லை. ஆனால், அந்தத் துருக்கி நாட்டுக்கும், இந்த டர்கிக்கும் சம்பந்தமே இல்லேம்மா."

"அப்போ டர்கி கோழின்னு பேர் வைச்சதே தப்புன்னு சொல்றீங்களா மாமா?"

"நான் அப்படிச் சொல்லலே. இந்த கோழி "டர்க்" "டர்க்"ன்னு சத்தம் போடும். அதனால இதுக்கு "டர்க் கோழி"ன்னு பெயர் வைச்சாங்க. அந்தப் பெயரை அப்புறமா என்ன பண்ணிட்டோம்னா, "டர்க்கி கோழி"ன்னு சொல்லிச் சொல்லி, டர்க்கின்னா துருக்கி நாடு. அதனால இது துருக்கிக் கோழின்னு தப்பா சொல்லிக் கிட்டிருக்கோம்."

"அப்படியா! அப்போ இதுக்கும் துருக்கிக்கும் சம்பந்தமே இல்லையா? இது துருக்கி நாட்டில் தோன்றிய கோழி இனம் இல்லையா?"

"இல்லேம்மா. இதன் தாயகம் வட அமெரிக்கா. அங்கே குடியேறிய ஸ்பானியர்கள் இதைத் தங்கள் நாட்டுக்குக் கொண்டு போனார்கள். ஸ்பெயின் நாட்டில் இருந்துதான் இது உலகத்தின் மற்ற நாடுகளுக்கும் பரவியது. அதனால, இந்த வான்கோழியின் தாயகம் வட அமெரிக்கா. துருக்கிக்கும் இதுக்கும் சம்பந்தமே இல்லே."

"சரி மாமா. முதல் அடி கருத்துப் பிழை. அடுத்த அடிகள்...?"

"கோழிக் குடும்பத்தில் அதிக அளவுக்குத் தோகை உள்ள பறவை வான் கோழிதாம்மா. அதனால் இரண்டாவது அடி சரிதான். மூன்றாவது அடி என்ன சொல்லு?"

"அறிவே இல்லாக் கோழி இது."

"இந்த வான்கோழி இனத்தில், பெண் கோழிக்கு அடைகாக்கும் ஆற்றல் சிறப்பாக இல்ல. அதாவது பெட்டைக் கோழியின் அளவுக்கு இது தனது முட்டைகளை ஒழுங்காக அடைகாக்காது. பாதிக்கு மேல் சேதமாகி விடும். அதனால் இது இடும் முட்டைகளை, பெட்டைக் கோழிகளிடம் அடைக்காக்க வைப்பார்


கள். தான் இடும் முட்டைகளை மற்றவர்கள் எடுத்துக் கொண்டால் தாய்க்கோழி ஏதாவது எதிர்ப்புக் காட்ட வேண்டும் அல்லவா? கத்தவாவது கத்த வேண்டும் அல்லவா? ஆனால், இது அப்படியெல்லாம் எதுவும் எதிர்ப்புக் காட்டாது. அம்மாக் கோழி முட்டை இட்டுதா, அடைகாத்ததா என்பதையெல்லாம் கவனிக்கவே கவனிக்காது அப்பாக் கோழி. இன்னும் கேட்டால் காட்டில் வளரும் வான்கோழி முட்டைகளோ இல்லை குஞ்சுகளோ கண்ணில் பட்டால் அவைகளை இரையாக்கிக் கொண்டு விடும். இதையெல்லாம் முட்டாள்தனம் என்று சொல்லாது என்ன சொல்வது? அதனால் இதை அறிவே இல்லாக் கோழி என்பது பொருத்தமானதே."

"மீதி இரண்டு அடிகளும் சரிதானா மாமா?"

"எது? பரிசு வாங்கிய கோழி இது, பெருமைமிக்க கோழி இதுவா? சரிதாம்மா."

இதையெல்லாம் கேட்டுக் கொண்டே வந்த பாபு, "மாமா, வான்கோழியின் தாயகம் வட அமெரிக்கா என்று சொன்னீர்களே! அப்போ எங்க பாடப் புத்தகத்தில் ஔவையார் பாடினதா வாக்குண்டாம் தலைப்பில், "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழின்னு" ஒரு பாடல் இருக்கே! அப்போ சங்க காலத்திலேயே இந்த வான்கோழி தமிழ்நாட்டில் இருந்ததாகத் தானே ஆகிறது?" என்று கேட்டான்.

"சரியான கேள்வி பாபு" என்று பாராட்டிய மாமா, "ஔவையார் சங்க காலத்தவர் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால், சங்க கால ஔவைக்குப் பிறகு எத்தனையோ ஔவையார்கள் தோன்றி, பாடல்களையும் பாடியிருக்கிறார்கள். அதனால், கானமயிலாட பாடலைப் பாடிய ஔவையார், சங்ககால ஔவை அல்ல. பிற்காலத்தில், அதாவது ஸ்பெயின் நாட்டில் இருந்து வான்கோழி நம்ம நாட்டுக்கு அறிமுகமானபின் தோன்றிய ஔவை



அறிவியல் உண்மைகள்

• வான் கோழிகளின் தாயகம் வட அமெரிக்கா. நீரை விரும்பாத கோழி இனம் இது. இதன் ஆங்கிலப் பெயரான டர்கிக்கும் துருக்கி நாட்டுக்கும் தொடர்பே இல்லை.

• இறைச்சிக்காகவே இது பெருமளவில் பண்ணைகளில் வளர்க்கப்படுகிறது.

• ஆண் கோழி குடும்பப் பாசம் இல்லாதது. ஏமாந்தால் முட்டைகளையும் குஞ்சுகளையும் கூடத் தின்று விடும்.

• பொன் வண்ணச் சிறகுகளும், பச்சை ஊதா புள்ளிகளும் காண மிகவும் அழகானது.

• முழுக்க முழுக்க வெள்ளை வண்ண வான்கோழிகளும் உண்டு.

• ஆண் கோழிக்கு மார்பில் சிறிய வண்ணக் குஞ்சமும், வண்ணமிக்க வாலும் உண்டு. பரபரப்படையும் போதும், பெண் கோழியைக் கவரவும் போதும் இது தோகையை விசிறி போல் விரிக்கும்.

• காய், கனி, கொட்டை, தானிய வகைகள், புழு, பூச்சி எல்லாம் தின்னும்.

• ஆண்டுக்கு 50 முதல் 60 முட்டை இடும். அடைகாக்கும் காலம் 28 நாட்கள். பண்ணைகளில் பெட்டைக் கோழிகளே வான்கோழி முட்டைகளை அடைகாக்கின்றன.

• இதன் புகழ்பெற்ற வகைகள் கேம்பிரிட்ஜ், நார்ஃபோக் (NORFOLK)

• ஏமாறும் குணம் காரணமாக இது "FOOL TURK" என்று குறிப்பிடப்படுகிறது.

• சங்க கால ஔவையார் இந்த வான்கோழியைப் பார்த்தே இருக்க முடியாது!

யாரால் பாடியது என்று வைத்துக் கொள்" என்றார்.

"மாமா, ஆண் மயிலுக்குத் தோகை இருப்பது மாதிரி ஆண் வான்கோழிக்கும் தோகை இருக்கே மாமா. மயில் மாதிரியே இதுவும் ஆடுமா?" என்று கேட்டான் பாபு.

"மயில் மகிழ்ச்சியாக இருக்கும் போதும், சூழ்நிலை குளிர்ந்திருக்கும் போதும், பெண் மயிலைக் கவர நினைக் கும் போதும் தோகை விரிக்கும். வான் கோழி பரபரப் படையும் போதும், பெண் கோழியைக் கவர எண்ணும்போதும் தோகையை விரிக்கும். மார்பில் ஒரு சிறிய குஞ்சம் தொங்கும்."

"இது மயில் மாதிரி அகவுமா மாமா?"

"இல்லை" "டர்க்" டர்க்"ன்னு சத்தம் எழுப்பும். இரவில் ஆண் கோழி மட்டும் "கிளிக்" என்ற ஓசையை எழுப்பி, தான் இருப்பதை மற்ற பெண் கோழிகளுக்கு அறிவிக்கும்."

"மாமா, அப்போ பாட்டின் முதல் அடியை மட்டும் மாற்றி விடுகிறேன்" என்று உள்ளே போனாள் பூமா.

பாடலின் அடி என்ன? – போட்டி முடிவு

பாரதியாரின் புகழ்பெற்ற குழந்தைப் பாடல்களின் தொடக்கத்தைக் குறிக்கும் பத்துப் படங்களைக் கொடுத்து, அந்தப் பத்து அடிகளை மட்டும் எழுதியனுப்பும்படி கேட்டிருந்தோம். இவர்களில் பெரும்பாலானவர்கள் இவை குழந்தைப் பாடல்களின் (தொடக்க) வரிகள் என்பதையே மறந்து விட்டார்கள். இதன் காரணமாகச் சரியான பத்து அடிகளையும் யாருமே எழுதவில்லை. இரண்டு தவறு, மூன்று தவறு செய்தவர்களே அதிகம் இருந்தனர். எனவே பரிசை இவர்களுக்குள் பகிர்ந்தளிக்க குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தோம் :

ரூபாய் இருபத்தைந்து பரிசு பெறுவோர் :

(இரண்டு தவறு செய்தவர்கள்)

1. எஸ். நிவேதன், சூலக்கரை, விருதுநகர்.
2. வ. ரூபியாபேகம், சித்தார்கோட்டை.
3. அ. சேதுபதி, சேலம் – 3.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

(மூன்று தவறு செய்தவர்கள்)

1. டி. குணசங்கரன், நன்செய் இடையார் போஸ்ட்.
2. எஸ். சிந்துஜா, தஞ்சை – 4.

சரியான விடை :

1. தீ – தீராத விளையாட்டுப் பிள்ளை அல்லது தீங்கு வர மாட்டாது பாப்பா
2. காலைப் பொழுது – காலை எழுந்தவுடன் படிப்பு அல்லது உதய ஞாயிறொப்பவே வா வா.
3. பழம் - கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
4. மாலை - மாலை முழுதும் விளையாட்டு
5. ஆடு - ஆடுவோமே பள்ளு பாடுவோமே
6. சங்கு - சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே
7. கண் - கண்டதோர் வையை பொருனை நதி.
8. குடை - குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
9. தேன்கூடு - தேன்வந்து பாயுது காதினிலே
10. பசு - பசு மிக நல்லதடி பாப்பா

பரிசு பெற்றவர்களுக்குப் பாராட்டு. கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கு நன்றி.

ஒரே நாளில் முடியுமா?

ஆசிரியர் தேர்வுத்தாள் கட்டுகளோடு வகுப்பில் நுழைந்ததும் சோமு திகைத்துப் போனான். இன்று வகுப்பு இப்படித் தொடங்கும் என அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. மனம் படபடவென அடித்துக் கொண்டது.

போன வாரம்தான் அரை ஆண்டுத் தேர்வுகள் முடிந்திருந்தன. மேலும் ஒரு வாரம் கழித்த பிறகுதான் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு கைக்கு வரும் என நினைத்திருந்தான். ஆனால் இப்படி சனி, ஞாயிறு விடுமுறைக்குப் பின் பள்ளி திறந்ததும் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு மதிப்பெண்கள் வெளியாகி விடும் என்று சோமு எதிர்பார்க்கவில்லை. தன் நிலையை எண்ணிக் கலங்கிப் போனான்.

ஆசிரியர் ஒவ்வொருவராகப் பெயர் சொல்லி அழைத்து விடைத்தாள்களைத் தந்து கொண்டிருந்தார். கூடவே அவர்கள் எழுதிய தேர்வின் நிறைகுறைகளையும் சொல்லிக் கொண்டிருந்தார். தான் எப்போது அழைக்கப்படுவோமோ என்று மனதுக்குள் சோமு நடுங்கிக் கொண்டிருந்தான்.



முதலில் நல்ல மதிப்பெண் வாங்கிய மாணவர்களை ஆசிரியர், பாடம் நடத்தும் மேடையருகே அழைத்துப் பாராட்டினார். பிறகு சராசரி மதிப்பெண் வாங்கியவர்களைக் கூப்பிட்டு அவர்கள் மேலும் மார்க்குகள் பெறத் தேவையான அணுகுமுறைகளை விளக்கினார். கடைசியாக பெயிலனாவர்களை அழைத்து கடிந்தும் கனிவாகவும் அறிவுரை கூற ஆரம்பித்தார்.

அடுத்து எப்போது வேண்டுமானாலும் தன் பெயரைஆசிரியர் அழைக்கக் கூடும்! அனைவரும் பெயிலான மதிப்பெண்களைக் காது கொடுத்துக் கேட்பார்கள்;

மகாதேவன்

தன்னை ஓர் அற்பப் புழுப் போல ஏளனப் பார்வையோடு நோக்குவார்கள் என்பதை நினைக்க நினைக்க சோமு கூசிப் போனான்.

ஆசிரியர், "சோமு" என அழைத்தார்.

சோமு எழுந்து நின்றான். அவன் மனம் படபடத்தது. கால்களும் கரங்களும் மெல்ல நடுங்கின. நகர முடியாமல் பசை போட்டு ஒட்டியது போல் பாதங்கள் விலக மறுத்தன. கண்கள் கலங்கி நீர்த் துளிகள் திரண்டன.

"உன் மதிப்பெண்ணைச் சொல்ல எனக்கே வெட்கமாக இருக்கிறது"- பெருமூச்சோடு சோமுவின் கைகளில் விடைத் தாள்களைத் திணித்தார் ஆசிரியர்.

எல்லாப் பாடங்களிலுமே அவன் பெயில். மதிப்பெண்களோ நூற்றுக்கு எட்டு, பத்து, பதினாறு என்று இருந்தன. தாய்மொழியான தமிழில் கூட இருபதைத் தாண்டவில்லை!

சோமு ஐந்தாம் வகுப்பில் படித்து வந்தான். புரிந்து கொள்ளும் ஆற்றல் இருந்தும் அவன் நல்ல மதிப்பெண் வாங்குவதில்லை. காரணம், சோம்பேறித்தனம்.

வகுப்பில் அன்றன்று நடக்கும் பாடங்களை வீட்டுக்கு வந்து படிக்க மாட்டான். வீட்டுப் பாடங்களையும் ஒழுங்காக எழுத மாட்டான். ஆசிரியர் கண்டிக்கும்வரை அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டான்.

தேர்வுகள் நடக்கும் சமயம் மட்டும் விழுந்து அடித்துக் கொண்டு படிப்பான். இரவு வெகு நேரம் கண்விழித்துப் படிக்கத் திட்டம் போடுவான். ஆனால், சோர்ந்து தூங்கி விடுவான். இதனால், அவனால் நல்ல மதிப்பெண் பெற முடியவில்லை. எப்படி முடியும்?

பள்ளியில் இருந்து வீடு திரும்பிய மகன் இரவு சாப்பிடாமலேயே சோர்ந்து படுத்து விட்டதை சோமுவின் தந்தை கவனித்தார். அம்மாவிடம் காரணம் கேட்டார். அம்மா, சோமுவின் புத்தகப் பையில் இருந்த விடைத்தாள்களை எடுத்து வந்து அப்பாவிடம். கொடுத்தாள். அப்பா மிகவும் வருந்தினார். மகன் சரியாகப் படிப்பதில்லை என்ற மனக்குறை பாரமாக நெஞ்சை அழுத்த இருவரும் உறக்கம் வராமல் தவித்தனர்.

சோமுவின் அப்பாவுக்கு வீடு கட்டும் கொத்தனார் தொழில். ஏழ்மை நிலையிலும் கஷ்டப்பட்டு சோமுவைப் படிக்க வைத்தார். அவனுக்கு எந்தக் குறையும் வராமல் வேண்டிய துணிமணி, பேனா, நோட்டு, புத்தகங்கள் வாங்கித் தந்து குறையின்றிப் பார்த்துக் கொண்டார். இருந்தும் அவன் பெயிலாகி வருவது அவருக்கு மிகவும் மனவருத்தமாக இருந்தது.

மறுநாள் காலை வேலைக்குப் புறப்படும் முன் மகனை அழைத்தார் அப்பா.

"சோமு, இன்று நீ பள்ளிக்கு லீவு



போட்டு விட்டு என்னோடு வா. வெளியே கொஞ்சம் போய் வரலாம்'' என்றார்.

காலைச் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு சோமு, அப்பாவோடு கிளம்பினான்.

''சோமு, நீயோ சரியாகப் படிப்பதில்லை. உன்னைப் பள்ளியிலிருந்து நிறுத்தி என்னோடு வேலைக்கு அழைத்துச் செல்லலாமா என்று நினைக்கிறேன்'' என்றார் அப்பா வழியில்.

சோமு திடுக்கிட்டான். பள்ளியில் இருந்து நிற்பது மனதுக்குக் கஷ்டமாக இருந்தது. ஆனால், அவன் ஒன்றும் பதில் பேசாமல் அப்பாவோடு மௌனமாக நடந்தான்.

அப்பா வேலை செய்யும் இடம் வந்தது. அது ஒருபுறநகர்ப் பகுதி. வெட்ட வெளியாகக் கிடந்த இடத்தில் புதிய காலனி ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது.

மாடியிலிருந்து அந்தப் புதிய காலனியைப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அங்கே பெரிய பெரிய கட்டடங்கள் புதிது புதிதாய் எழுந்து கொண்டிருந்தன. கடைக்கால் தோண்டப்பட்டு, சுவர்கள் எழுப்பப்பட்டு, சாரம் கட்டப்பட்டு, வெளிப்பூச்சு பூசப்படாமல், வண்ணம் அடிக்காமல், அரைகுறையாய் பல உருவில் எதிரே கட்டடங்கள் தோன்றின.






"இந்தப் பாலை நீ குடிக்கிறாயா? இல்லே பிள்ளையாருக்குக் கொடுத்து விடட்டுமா?"

"வேண்டாம் வேண்டாம்! நானே குடிக்கிறேன்!"


— என். ஸ்ரீகிருபா.



"கையில ஏன் கிளவுஸ் (கையுறை) போட்டுக்கிட்டு பேப்பரைப் படிக்கிறே?"

"இது சுடச்சுட செய்திகளைத் தரும் பேப்பராமே!"

- தேனி முருகேசன்



"எதுக்குப்பா கோணிப் பை நிறைய சில்லரையைத் தூக்க முடியாமல் தூக்கிக்கிட்டு வர்றீங்க?"

"ஆயிரம் ரூபாய் கடனை என் நண்பன் நாணயமா தந்திருக்கான்!"

— தக்கோலம் அ. முஸ்தபா.

அப்பா சோமுவை அழைத்து அவற்றைக் காட்டினார். பிறகு முழுமையாய்க் கட்டி முடிக்கப்பட்ட பெரிய கட்டடங்களையும் சுட்டிக்காட்டினார்.

"இந்தப் பெரிய கட்டடங்களை எப்படிக் கட்டியிருப்பார்கள் சோமு?" என்று கேட்டார்.

கொத்தனாரான தந்தை, இப்படி சிறு பிள்ளைத்தனமாகக் கேள்வி கேட்டது சோமுவுக்கு வியப்பாக இருந்தது.

"கடைக்கால் எடுத்து, ஒவ்வொரு கல்லாக அடுக்கி, சிமெண்டும் மண்ணும் நீரும் கலந்த கலவையைப் பூசி, சுவர் எழுப்பித்தான் இந்தக் கட்டடங்களைக் கட்டியிருக்க முடியும்" என்றான் சோமு.

"திடீரென்று ஒரே நாளில் இந்தக் கட்டடங்களைக் கட்ட முடியுமா சோமு?"

"அது எப்படி முடியும்? எப்படிப்பட்ட கட்டடம் வேண்டும் என்று வரைபடம் மூலம் முதலில் திட்டம் தீட்டிக் கொள்ள வேண்டும். பிறகு ஒரு கால எல்லையை வகுத்துக் கொண்டு வேண்டிய பொருள்களை வாங்கித் தயார் செய்து கொள்ள வேண்டும்! பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத் தினமும் கட்டுமான வேலையைச் செய்ய வேண்டும். நாளடைவில் முழுக் கட்டடமும் உருவாகும்" என்றான் சோமு.

"கட்டடம் மாதிரித்தானே சோமு படிப்பும்? ஒரே நாளில் எல்லாவற்றையும் படித்து மனதில் ஏற்றுக் கொள்ள முடியுமா? தினமும் நடத்தும் பாடங்களை உடனுக்குடன் படித்து மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அப்படித்தான் அது உறுதியாக இருக்கும். தேர்வுக்கு முன் தினம் இரவு முழுக்கக் கண் விழித்து எல்லாப் பாடங்களையும் படித்தால் மனத்தில் பதியவைத்துக் கொள்ள முடியுமா? அது ஒரே நாளில் எழுப்பப்படும் கட்டடம் போலத்தான் வலுவின்றி இருக்கும்."

அப்பா என்ன கூற வருகிறார் என்பது அவனுக்குப் புரிந்து விட்டது!

"அப்பா, என்னை மன்னித்து விடுங்கள். நிறுத்தி விடாமல் தொடர்ந்து பள்ளிக்கு அனுப்புங்கள். இனி தினமும் நடக்கும் பாடங்களை அன்றே படித்து, நல்ல மதிப்பெண்கள் பெறுவேன்" என்றான்.

அப்பாவின் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா?

மாலை மணி ஐந்து.

ஜெயராஜ் காப்பி குடித்து முடிக்கவும், அவனுடைய நண்பர்களான ரஜினி, சுந்தர், ரமேஷ், ஆனந்த், முரளி ஆகியோர் அவனைத் தேடி வரவும் சரியாய் இருந்தது. ஒவ்வொருவர் கையிலும் ஒரு பூப்பந்தும், மட்டையும் இருந்தன.

ஜெயராஜ் நண்பர்களைத் திண்ணையில் உட்கார வைத்துவிட்டு உள்ளே போனான். தன்னுடைய மட்டையையும், பூப்பந்தையும் எடுத்துக் கொண்டு வெளியே வந்தான்.

"வாங்க, போகலாம்!"

அழைத்த ஜெயராஜைத் தொடர்ந்து, அனைவரும் அவனது வீட்டுத் தோட்டத்தை அடைந்தனர்.


அங்கே, சுற்றிலும் காம்பவுண்டுச் சுவர்கள் சூழ, விரிவாக அமைந்த திடலில், இரண்டு இரும்புக் குழாய்க் கம்பங்களுக்கு இடையில் நீண்ட நெட் கட்டித் தொங்க விடப்பட்டிருந்தது. 'ஒற்றையராக எதிர் எதிரே நின்று, மூன்று செட் ஆட்டக்காரர்கள் விளையாடும் அளவு அகலமாய் அமைந்திருந்த பாட்மின்டன் கோர்ட் அது.


நண்பர்கள் அணி பிரிந்து விளையாடலானார்கள். வெகு விரைவில் ஆட்டம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

அப்போது, அந்தப் பக்கமாக வந்து நின்றான் இன்னாசி. இன்னாசிக்கு உடம்பு, அடிப்பானை மாதிரி அட்டைக் கறுப்பாக இருந்தது. எண்ணெய்ப் பிசுக்கு சிறிதுமின்றி வறண்டு கிடந்த செம்பட்டைத் தலைமுடி. கண்கள் உள்வாங்கி இருந்தன. அணிந்திருந்த சட்டையும், டிரவுசரும் பொத்தல் பொத்தலாகக் காட்சியளித்தன. உடம்பின் அழுக்கும், உடையின் அழுக்கும் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டன. பார்க்கப் பரிதாபமான கோலம்! ஒட்டி உலர்ந்து போயிருந்த அவன், வயிறு நிரம்ப சோறு கண்டு எத்தனை நாளாயிற்றோ?

இன்னாசி தெருவில் கிடக்கும் காகிதங்களைப் பொறுக்கி விற்றுப் பிழைப்பு நடத்தும் ஏழை சன்னாசியின் ஒரே மகன்! இன்னாசி பரம தரித்திரன் என்றாலும், அவனுக்கு ஏனோ வெள்ளையும் சள்ளையுமாய் உடையணிந்து நிற்கும் வசதியான வீட்டுப் பிள்ளைகளைப் பார்ப்பது என்றால் கொள்ளை ஆசை! இந்த ஆறு நண்பர்களும் ஒன்றாகப் பள்ளிக்குப் போவதையும், வீடு திரும்புவதையும், விளையாடுவதையும் தொலைவில் இருந்தபடியே கண்டு ரசிப்பான். பொறாமை கிடையாது அவனுக்கு!

இன்று இன்னாசிக்கு





“விளையாட்டா வரக்கூடிய வியாதி எது...?”
“தெரியலையே...! நீ சொல்லு?”
“ப்ளே (PLAY) க்...!”
– சீகாழி. வி. ரேவதி

என்ன தோன்றியதோ தெரியவில்லை; அவர்களுக்கு மிக அருகில் நெருங்கி வந்து நின்று விட்டான், அபாரத் துணிச்சலோடு!

“டேய், யார்டா நீ? உனக்கு இங்கே என்னடா வேலை? உன்னைப் பார்த்தாலே குமட்டிக்கிட்டு வருது. ஓடிப் போடா இங்கேயிருந்து!” – ஆத்திரத்துடன் வெறுப்பைக் கக்கினான் ஜெயராஜ்.

“அவன் ஒரு பக்கமா ஒதுங்கினாப் போல இருக்கட்டும். தூரப் போய் விழற பந்துகளை எடுத்து வந்து கொடுப்பான். நமக்கும் உதவியாய் இருக்கும்” என்றான் ரமேஷ். மற்றவர்களும் அதை ஆதரித்தனர்.

“எப்படியோ போங்கடா! எனக்கு என்னமோ அவனைப் பிடிக்கலை” என்றான் ஜெயராஜ் அலுப்புடன்.

நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன.

இன்னாசி இப்போது தினம் தவறாமல் வந்து விளையாட்டைக் கவனிப்பதற்குத் தடையில்லாமல் போயிற்று. எல்லை தாண்டிப் போய் விழும் பந்துகளைப் பொறுக்கிக் கொடுக்கவும், ஜெயராஜைத் தவிர மற்றவர்களால் அவன் அனுமதிக்கப்பட்டான். ஆனால், ஜெயராஜுக்கு மட்டும், அவன் மீது உள்ளுக்குள் குரோதம் நெருப்பு மாதிரி அளவில்லாமல் பெருகிக் கொண்டுதான் இருந்தது.

அன்று மாலை....

பள்ளி முடிவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாகவே ஆசிரியரிடம் அனுமதி பெற்றுக் கொண்டு வீட்டிற்குப் புறப்பட்டான் ஜெயராஜ். பக்கத்து ஊரில் திருமணமாகிச் சென்றிருக்கும் அவன் அக்காவுக்குப் பொங்கல் வரிசை கொண்டு போய்க் கொடுப்பதற்காக அவனைச் சீக்கிரமே வரச் சொல்லியிருந்தாள், அவன் அம்மா.

அக்காவைக் காணப் போகும் ஆனந்தம் உள்ளத்தில் குமிழியிட, சினிமாப் பாட்டு ஒன்றைச் சீழ்க்கைக் குரலில் முழக்கியபடியே, சாலையில் தன்னை மறந்து நடந்து கொண்டிருந்தான் ஜெயராஜ்.

அப்போது, கண் மண் தெரியாமல் கன வேகமாகப் பின்னால் வந்து கொண்டிருந்தது ஒரு டாக்ஸி. ஒன்று மிக அருகில் வந்த பிறகுதான் திடீரென்று பிரேக் போட்டார் டிரைவர்.

ஆனாலும், ஜெயராஜ் மீது மோதி, அவனைக் கீழே தள்ளிவிட்டுத்தான் நின்றது டாக்ஸி. அந்த நேரத்தில் சாலை ஓரம் தகப்பனோடு சேர்ந்து, தானும் காகிதம் பொறுக்கிக் கொண்டிருந்தான் இன்னாசி.

அருகில் கிடந்த கருங்கல் மோதி, தலையில் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது ஜெயராஜுக்கு. வெள்ளம் மாதிரி இரத்தம் குபு குபுவென்று வெளியேறியது. நினைவு இழந்து, மயக்கம் அடைந்தான் ஜெயராஜ்.

இன்னாசியும், அவன் அப்பா சன்னாசியும் அரக்கப் பரக்க அவன் அருகே ஓடோடி வந்தனர். சன்னாசியின் உதவியோடு அவனைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்தார், டிரைவர். இன்னாசி, ஜெயராஜின் பெற்றோருக்குச் செய்தி சொல்லப் பறந்தான்!

படுக்கையில் கட்டை மாதிரிக் கிடந்தான் ஜெயராஜ். சிரமப்பட்டு அவன் விட்ட சுவாசத்தில், மார்பு மேலும் கீழும் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது.

டாக்டர் ஜெயராஜுக்கு ஊசி போட்டார். குளுகோஸ் உடம்பில் ஏறிக் கொண்டிருந்தது. அவனது விழிகள் மூடியிருந்தன. மூர்ச்சை இன்னும் தெளியவில்லை.

“பையனுக்கு ரத்த சேதம் அதிகமாயிருக்கு. உடனே புது ரத்தம் ஏற்றியாக

வேண்டும். இவனுடையது ஏ-ஒன் பாஸிட்டிவ் குரூப். அந்த குரூப் ரத்தம், ஆஸ்பத்திரியில் தற்சமயம் ஸ்டாக் இல்லை. உங்களில் யாருக்காவது அந்த குரூப் இருக்கிறதா என்று பார்த்து அவனுக்கு ஏற்றலாம்" என்றார் டாக்டர்.

அப்பாவின் இரத்தமும், அம்மாவின் இரத்தமும் வேறாக இருந்தன. சிநேகிதர்களின் உடம்பிலிருந்தும் இரத்தம் எடுத்துப் பரிசோதிக்கப்பட்டது. துரதிர்ஷ்டவசமாக அந்த இரத்த குரூப்புகளும் ஒத்துப் போகவில்லை!

"டாக்டர் ஐயா! என்னோட ரத்தத்தைப் பரீட்சை பண்ணிப் பாருங்க. அது சரியாய் இருந்தா, அந்த அண்ணனுக்கு நான் கொடுக்கிறேன்" என்றான், இதுவரையில் நடந்ததை எல்லாம் அமைதியாகக் கவனித்து வந்த இன்னாசி.

டாக்டர் இன்னாசியின் இரத்தத்தை எடுத்து பரிசோதனைக்கு அனுப்பினார். ஏ.ஒன். பாஸிட்டிவ்தான் என்பது உறுதியானது! எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி!

உடனே, இன்னாசியிடமிருந்து தேவையான அளவு இரத்தம் எடுக்கப்பட்டு,



சோதனை, பக்குவத்திற்குப் பின் ஜெய ராஜின் உடலில் செலுத்தப்பட்டது.

கண் விழித்த ஜெயராஜ், தன்னைச் சுற்றிலும் உள்ளவர்களைப் பார்த்தான். அப்பா, அம்மா, ஆனந்த், முரளி, சந்தர், ரமேஷ், ரஜினி... அப்புறம் அவர்களுடைய தோற்றத்திற்குச் சற்றும் பொருந்தாமல் இன்னாசி! ஜெயராஜுக்கு முகம் சுருங்கி யது. அவனை உறுத்துப் பார்த்தான்.

"என்ன ஜெயராஜ் அப்பிடிப் பார்க் கிறே! அந்த இன்னாசிதான் உன்னை உயிர் பிழைக்க வைத்தவன். அவனோட ரத்தம்தான் உன்னைக் காப்பாற்றியது!" என்றான் ரஜினி.

ரஜினி சொன்னதை உறுதிப்படுத்தி னாள் அம்மா.

இன்னாசியின் உடம்பில் இருந்த அழுக்கை அவனது உள்ளத் தூய்மை வென்று விட்டதை உணர்ந்தான் ஜெயராஜ்.

ஜெயராஜ் மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி, வீட்டிற்கு வந்து ஒரு வாரம் ஓடி விட்டது. அவன் பூரண குணம் அடைந்து விட்டான்.

அன்று -

"அப்பா! அம்மா! என்னை உயிர் பிழைக்க வைத்த இன்னாசியோட அப்பா வுக்கு நம் வீட்டிலேயே ஒரு வேலை போட்டுக் கொடுத்து விடுவோமா?" உருக்கமுடன் பெற்றோரைப் பார்த்துக் கேட்டான் ஜெயராஜ்.

"நிச்சயமாய்ச் செய்து விடுவோம், ஜெயராஜ்! நம் வீட்டுத் தோட்டத்தைப் பார்த்துக்க ஒரு ஆள் தேவைப்படுதுன்னு அப்பா ரொம்ப நாளா சொல்லிக்கிட்டு இருக்கார்; அந்தச் சன்னாசிக்கு அந்த வேலையைக் கொடுத்துடுவோம்" என்ற அம்மா, அப்பாவைப் பார்த்தாள். அவரும் ஆமோதித்தார்.

ஊரை விட்டு ஒதுக்குப்புறமாக அமைந் திருந்த குடிசைகளுக்குள் ஒன்றில்தான் இன்னாசியின் குடும்பம் வசித்து வந்தது. ஓட்டமும் நடையுமாக அங்கு ஓடினான் ஜெயராஜ்.

குடிசையின் கதவு பூட்டாமல் வெறு மனே சாத்தப்பட்டிருந்தது.

"தம்பி, யாரைத் தேடறே? சன்னாசி வீட்டாரையா?" என்று ஜெயராஜைக் கேட்டார், அடுத்த குடிசையிலிருந்து வெளிப்பட்ட பெரியவர் ஒருவர்.

"ஆமாங்க, ஐயா!" - ஜெயராஜின் குர லில் ஆவல் ததும்பியது.

"எல்லாரும் காலி பண்ணிட்டுப் போயிட்டாங்களே! அவங்க ஊரை விட் டுப் போய் மூணு நாள் ஆயிடுச்சே!"

"என்ன சொல்றீங்க நீங்க? அவங்க இந்த ஊர்க்காரங்க இல்லியா?" - அதிர்ச் சியுடன் கேட்டான் ஜெயராஜ்.

"இல்லை, தம்பி! சன்னாசிக்கு அறந் தாங்கிப் பக்கம் ஒரு சின்ன கிராமமாம். அங்கே ஒரு பண்ணையிலே கார்வாரியா (நிலம் பார்த்துக் கொள்பவர்) இருந்தா ராம். ஆனா, மழை பெய்யாம, வயல் காடெல்லாம் வறண்டு, பூமி பாளம் பாளமா வெடிச்சு, மனுஷாளுக்கும், மாடு, ஆடுங்களுக்கும் கூட வயித்துப் பாட்டுக்கு வழியில்லாமப் போயிடுச்சு. அதனால பஞ் சம் பொழைக்க ரெண்டு வருசத்துக்கு முன்னாடி பொஞ்சாதி புள்ளையோட இங்க வந்தாரு. பேப்பர் பொறுக்கி வித்து கஷ்டஜீவனம் பண்ணிக்கிட்டுக் கிடந்தாரு. சமீபத்துல நல்லா மழை பெய்ஞ்சு, ஊரு வளமையா ஆயிட்டதா, அங்க இருந்து நல்ல சேதி வந்திச்சா... உடனே, எல்லாரும் சொந்த ஊருக்கே போய்ச் சேர்ந்துட்டாங்க."

பெரியவர் சொல்லி முடித்தார்.


துக்கம் பந்து போல் திரண்டு வந்து நெஞ்சை அடைக்க, கண்களில் விழிநீர் பெருகிக் கன்னங்களில் வழிந்தோட, ஏமாற்றத்துடன் தன் வீடு நோக்கித் தளர் நடை நடந்தான் ஜெயராஜ்.

"கன்னம் ஏன் ஜில்லுனு இருக்கு சொல்லு?"

"தெரியலையே."

"அதுக்கு மேல Ice (Eyes) இருக்கே அத னாலதான்.

- ஏ. பைரவி





அப்படியா!

முரளி அப்படி அழுவான் என்று பரத் எதிர்பார்க்கவே இல்லை.

"முரளி... அழாதே. முதல்ல அழுகையை நிறுத்து. நீ என்ன சின்னப் பையனா? இப்பப் பத்தாவது படிக்கிறே? உனக்கு என்ன பிரச்னை? முதல்ல அதைச் சொல்லு."

கண்களைத் துடைத்துக் கொண்ட முரளி, வகுப்பை ஒரு தடவை சுற்றிப் பார்த்தான்.

முதல் மணி அடிக்காததால், மாணவர்கள் அங்கும் இங்கும் திரிந்து கொண்டிருந்தார்கள். சில மாணவர்கள் மட்டும் பெஞ்சுகளில் அமர்ந்து அன்றைய வீட்டுக் கணக்குகளை அவசர அவசரமாக போட்டுக் கொண்டிருந்தார்கள்.

"பரத்... என் அப்பா குடிச்சிட்டு பண்ற அட்டகாசம் தாங்க முடியலை. சம்பாதிக்கிற பணத்தில பாதியைக் குடிக்கே செலவு பண்றார். வீட்டுக்கு சரியா பணம் தர்றதில்லை. தினமும் என்னையும் என் அம்மாவையும் அடிக்கிறார். ஸ்பெஷல் பீஸ் கட்றதுக்கு பணம் வேணும்ன்னு ஒரு வாரமா கேக்கறேன். இதுவரைக்கும் ஒரு பைசா கூடக் கொடுக்கலை. எல்லாருமே அவருக்கு எவ்வளவோ புத்தி சொல்லிப் பாத்துட்டாங்க. ஆனா அவர் திருந்தற மாதிரியே தெரியலை."

பரத் எந்தப் பதிலும் சொல்லவில்லை. மௌனமாக யோசிக்க ஆரம்பித்தான்.

முரளிக்கு பரத்தைப் பற்றி நன்றாகத் தெரியும். வகுப்பிலேயே நன்றாகப் படிப்பவன். நல்ல மாணவன். மற்றவர்களுக்குத் தன்னால் முடிந்த உதவியைச் செய்ய வேண்டும் என்ற நல்ல கொள்கையைப் பின்பற்றுபவன் பரத். எனவே பரத் என்ன சொல்லப் போகிறான் என்பதை அறிய மௌனத்தோடு காத்திருக்க ஆரம்பித்தான்.

ஐந்து நிமிடங்கள் கரைய....

"முரளி... எனக்கொரு ஐடியா தோணுது. ஆனா, அந்த ஐடியாவை நீ இன்னைக்கே செயல்படுத்த முடியாது. ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பம் வர்றப்பதான் அதைப் பயன்படுத்த முடியும். அதனால முதல்ல அந்த சந்தர்ப்பம் வர்ற வரைக்கும் நீ பொறுமையா காத்துக்கிட்டு இருக்கணும். அடுத்தது, நான்

இரா. வசந்தராசன்

சொல்ற திட்டம் ஜெயிச்சாலும் ஜெயிக்கும். தோற்றாலும் தோற்றுடும். என் திட்டம் ஜெயிச்சா, உன் அப்பா கண்டிப்பா திருந்திடுவார். தவறி என்னுடைய திட்டம் தோக்குதுன்னு வச்சுக்கோ, உனக்கு நிறைய அடி, உதை கிடைக்கும். சம்மதம்னா சொல்லு. என்னுடைய பிளானைச் சொல்றேன். இல்லன்னா அமைதியா இருந்திடறேன்."

"பரத்... உன் திட்டம் என்னன்னு சொல்லு. நான் அதுப்படி நடக்கறேன். எப்படியாவது என் அப்பா திருந்தணும்கறதுதான் என் ஆசை. தவறி உன்னுடைய பிளான் தோத்துப் போனாலும் அதுக்காகக் கவலைப்பட மாட்டேன். என் அப்பா கொடுக்கிற அடியை நான் சந்தோஷமா வாங்கிக்கிறேன். சொல்லு... உன் திட்டம் என்ன?"

மெதுவான குரலில் தன்னுடைய திட்டத்தைச் சொல்ல ஆரம்பித்தான் பரத். பயத்தில் கொஞ்சம் கொஞ்சமாக உறைய ஆரம்பித்தான் முரளி.

ஒரு வாரம் ஓடி விட்டது.

வகுப்பறை.

"முரளி... அன்னைக்கு நான் சொன்ன சந்தர்ப்பம் இன்னைக்கு வந்திருக்கு இன்னைக்கு சாயந்திரம் ஐந்து மணிக்கு..."

முரளியின் காதுகளில் மெதுவாக கிசுகிசுக்க ஆரம்பித்தான் பரத்.

நேரம் கரைய ஆரம்பித்தது.

மாலை ஐந்தேகால் மணி.

"சார்"

பரத்தின் குரலைக் கேட்டு முரளியின் அப்பா திரும்பினார்.

"என்ன விஷயம்?"

"உங்களுக்குத் தெரியுமா? முரளியைப் பத்தி ஒரு விஷயம் சொல்லணும்."

"என்ன விஷயம்?"

ஏற்கெனவே மனப்பாடம் செய்து வைத்திருந்த வசனத்தைக் கடகட வென்று சொல்ல ஆரம்பித்தான் பரத்.

"அப்படியா! என் முரளியா! அப்படிச் செய்யறான்!"– என்று அப்பா கேட்டுக் கொண்டே விம்மினார். கீழே கிடந்த துண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு வேகமாக ஓட ஆரம்பித்தார் அப்பா. ஐந்து நிமிட ஓட்டத்துக்குப் பின்... பரத் சொன்ன



இடத்தில்...

அப்பாவின் கண்களுக்கு அந்தக் காட்சி தெளிவாகத் தெரிய ஆரம்பித்தது. தன்னையும் மீறி விம்மி விம்மி அழ ஆரம்பித்தார் அவர்.

மறுநாள்.

"முரளி எங்கே?"

அம்மாவின் முகத்தில் நிறைய ஆச்சர்ய ரேகைகள்!

என்றும் இல்லாத திருநாளாக இன்று, அப்பா முரளியைப் பற்றிக் கேட்கிறாரே!

"வெளில இருப்பான். இருங்க அழைச்சிக்கிட்டு வரேன்."

மூன்று நிமிட இடைவெளிக்குப் பின் அம்மா முரளியுடன் திரும்பினாள்.

"முரளி... இந்தா நூறு ரூபாய். இந்தப் பணத்தில உன் ஸ்பெஷல் பீஸைக் கட்டிடு. மீதிப் பணத்துக்கு உனக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிக்கோ. இனி குடிப்பதை நான் மனதுல கூட



நினைக்க மாட்டேன். நான் திருந்தி விட்டேன்."

அப்பாவின் திடீர் மாற்றம் அம்மாவுக்கு நிறையக் குழப்பத்தைக் கொடுத்தது. கணவனையும் மகனையும் திகைப்போடு மாறி மாறிப் பார்க்க ஆரம்பித்தாள்.

"அப்பா... உங்க மனம் மாறினது எனக்கு ரொம்ப மகிழ்ச்சியைக் கொடுக்குது. ஆனா, இந்தச் சமயத்தில உங்ககிட்ட நான் ஒரு உண்மையைச் சொல்லணும். நேத்து சாயந்திரம் ஐந்தரை மணிக்கு என்னுடைய உயிர் நண்பன் பரத் உங்ககிட்ட ஒரு விஷயத்தைச் சொல்லியிருப்பான். 'அடுத்த தெரு புண்ணியகோடி இறந்துட்டார். அவருடைய இறந்த உடம்பை எடுக்கறப்போ நம்ப ஊர் வழக்கப்படி அந்த இறந்த உடம்பு மேல நிறையப் பேர் காசு வீசுவாங்க. புத்தகம் வாங்கறதுக்காகவும், ஸ்பெஷல் பீஸ் கட்றதுக்காகவும் நான் அந்தக் காசை பொறுக்கிக்கிட்டு இருக்கிறதா' உங்ககிட்ட பரத் சொல்லி இருப்பான். அவன் சொன்னது பொய்ப்பா. இறைச்ச காசை பொறுக்கின மாதிரி நான் நடிச்சேனே தவிர, உண்மைல ஒரு காசைக் கூட எடுக்கலை. உங்களுக்கு அவமானத்தைத் தரக்கூடிய எந்தக் காரியத்தையும் நான் செய்ய மாட்டேம்பா. உங்களைத் திருத்துவதுக்காக பரத் சொல்லிக் கொடுத்த நாடகம்பா இது. நாங்க செஞ்சது தப்புன்னா எங்களை மன்னிச்சிடுங்க,'' என்று சொல்லிக் கொண்டே முரளி அப்பாவின் கால்களில் விழுந்து அழ...

அப்பா முரளியை எழுப்பி அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார். அவர் கண்களில் இருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது.

அந்த கண்ணீர்த் துளிகள் அவர் முற்றிலும் திருந்தி விட்டார் என்ற உண்மையைப் பறைசாற்றின!

எங்கள் ஊரில் நடந்தது!

விதையே இல்லாத பழம்!

எங்கள் வகுப்பில் மூன்றாவது பாட வேளை. அறிவியல் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் அறிவியலில் கேள்விகள் கேட்டுக் கொண்டு வந்தார். 'விதையே இல்லாத கனி எது?' என்று கேட்டார். ஒரு மாணவன் 'திராட்சை' என்றான். ஆசிரியர் "மற்றொரு கனி சொல்?" எனக் கேட்டார். வேறு ஒரு மாணவன் எழுந்து 'ஞானப்பழம்' என்றதும் வகுப்பே சிரிப்பொலியில் ஆழ்ந்தது.

விருத்தாசலம் வி.பாரபாகர்

தண்டனை கிடைக்குமா?


எங்கள் வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டு இருந்தார். எதிரில் இருந்த கடிகாரம் மணி அடித்து ஓய்ந்தது. "இப்போது இந்த கடிகாரத்தை ஒரு கத்தியால் உடைத்தால் எனக்குத் தண்டனை கிடைக்குமா?" என்று ஆசிரியர் விளையாட்டாகக் கேட்டார்.

ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, "கிடைக்காது சார்..." என்றான்.

"எப்படிச் சொல்கிறாய்...? கடிகாரத்தை உடைப்பது குற்றம் தானே!"

"அது குற்றம்தான் என்றாலும் முதலில் அடித்தது கடிகாரம் தானே? பிறகுதானே நீங்கள் அடித்தீர்கள்? அதனால் தான்" என மாணவன் கூறவும் ஆசிரியர் உட்பட அனைவரும் சிரித்து விட்டோம்..!

இரா.திலிப்திருச்சி-14.





மெட்ராஸ் எங்கே?

எங்கள் வீட்டில் அனைவரும் சென்னைக்கு சுற்றுலா வந்தோம். வழிநெடுகிலும் மைல் கல்லில் சென்னை 100 கி.மீ. என்று ஒவ்வொரு கிமீட்டரிலும் போட்டிருந்தது. அதைப் பார்த்த தம்பி என்னிடம் "அண்ணா! எல்லாத்திலேயும் சென்னை. சென்னைன்னே போட்டிருக்கே! அப்படின்னா மெட்ராஸ் எங்கண்ணா இருக்கு?" என்று கேட்டானே பார்க்கலாம்! ஒரே பயங்கரச் சிரிப்பு வெடிதான்.

கவின் மோகன், சேலம்.

கவி தா

எங்கள் தமிழாசிரியர் முதலில் பெயரைப் படித்து, பிறகுதான் இன்ஷியலைக் கூறுவார். ஒருநாள் தா.கவி என்னும் மாணவன் புது அயல்நாட்டுப் பேனா வாங்கியிருந்தான். அனைவரும் அதைவாங்கிப் பார்த்தனர். எங்கள் வகுப்பு தமிழாசிரியர் வருகைப் பதிவேட்டை எடுத்தார். 'கவி'யின் முறை வந்தது. "கவி.தா" என்றார். கவி தமிழாசிரியரிடம் சென்றான். தமிழாசாரியர் "ஏன், பெயரைக் கூப்பிட்டதும் வருகிறாய்?" என்று கேட்டதும் அவன், "நீங்கள் தானே "கவி தா" என்று கேட்டீர்கள். அதனால் தான் பேனாவைக் கொண்டு வந்தேன்" என்றானே பார்க்கலாம்.

க.ஜெகன்நாதன், அனந்தபுரம்.

எங்கள் ஊரில் நடந்தது!

என்ன டீ!

எங்கள் ஊர் டீக்கடைகளில் இன்றும் வெல்லம் டீ, சீனி டீ என்று இரண்டு டீ விற்கிறார்கள். விருந்துக்கு வந்திருந்த என் உறவுக்காரப் பெண்ணை டீ வாங்கி வரக் கடைக்கு அனுப்பினேன். கொஞ்ச நேரத்தில் அப்பெண் அழுது கொண்டே வந்தாள். என்ன நடந்தது என்று கேட்ட போது "கடைக்காரன் என்னை என்னடி" என்று பேசினான் என்றாள். நான் விபரம் கேட்பதற்குள் எங்கள் பாட்டி கடைக்காரரிடம் சண்டைக்குப் போய் விட்டார்கள். நீண்டநேர வாக்கு வாதத்திற்குப் பிறகு தான் "கடைக்காரர் வெல்லம் டீ இருக்கு, சீனி டீ இருக்கு உனக்கு என்ன டீ வேண்டும்" என்று கேட்டிருப்பது தெரிந்து சமாதானம் அடைந்தோம்!

வசந்தா காந்த், கருப்பம்புலம்.

நேராக...

எங்கள் உடற்கல்வி ஆசிரியர் நகைச்சுவையாகக் கேள்விகளைக் கேட்பார். அப்படித் தான் ஒருநாள், "யார் யார் சொர்க்கத்துக்குப் போக ஆசைப்படுகிறீர்கள்?" என்று கேட்டார். ஒரே ஒரு சிறுமியைத் தவிர மற்ற எல்லோரும் கை தூக்கினார்கள். "உனக்கு ஆசையில்லையா?" என்று அந்தச் சிறுமியிடம் ஆசிரியர் கேட்டார். அதற்கு அந்தப்பெண், "எங்கம்மா பள்ளிக்கூடம் விட்டதும் நேராக வீட்டுக்கு வரச் சொன்னாங்க" என்று கூற, நாங்கள் எல்லோரும் சிரித்துவிட்டோம்.

சு.தமிழ்ச்செல்வி, சோழன் மாளிகை.

கலவை இருக்கா?

என் மாமா தமிழ் ஆசிரியர் என்பதால்



எப்போதும் தூய தமிழில்தான் பேசுவார். 'ஸ்பெஷல் தோசை'யை 'சிறப்பு தோசை' என்றும், பேனா என்பதைக்கூட 'தூவல்' என்றும் தான் கூறுவார். ஒரு நாள் நாங்கள் இருவரும் மிக்சர் வாங்குவதற்காக, வீட்டிற்கு அருகில் இருந்த இனிப்புக் கடைக்குச் சென்றோம். மிக்சர் என்பது ஆங்கிலம் என்பதால் அதை என் மாமா தமிழ்ப்படுத்தி, "அரை கிலோ கலவை இருந்தால் கொடுங்கள்..." என்றார். உடனே கடைக்காரர், அருகில் கட்டட வேலை நடந்து கொண்டிருந்த வீட்டைக் காட்டி, "அங்கே போய்க் கேளுங்க, கொஞ்சம் (சிமெண்டுக்) கலவை தருவாங்க" என்றார். என் மாமா முகத்தைப் பார்க்க வேண்டுமே..! அன்று முதல் தூய தமிழில் பேசுவதை விட்டு விட்டார்.

இ.சிவா, சென்னை-116.

புண் வரும்

எங்கள் வீட்டில் அனைவருமே தண்ணீர் குடிக்கும் போது டம்ளரைத் தூக்கித்தான் குடிப்போம். ஆனால், சின்னப் பையன் மட்டும் எவ்வளவு சொல்லியும் கேட்காமல் உறிஞ்சித் தான் குடிப்பான். ஒரு சமயம் அவனுக்குமேல் உதட்டில் புண் வந்து தண்ணீர் குடிக்கவும் சாப்பிடவும் மிகவும் சிரமப்பட்டான். அப்போது எங்களுக்குத் தோன்றிய யோசனைப்படி இது

எங்கள் ஊரில் நடந்தது!

தான் சமயம் என்று சாப்பாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக உதட்டில் படாமலும், தண்ணீரை உதட்டில் படாமலும் தூக்கியபடி குடிக்கச் சொன்னோம். புண் ஆறிவிட்டது. தண்ணீரை உறிஞ்சி மீண்டும் குடித்தால் பழையபடி புண் வந்துவிடும் என்று பயப்படுத்தியதால் அன்று முதல் தண்ணீரைத் தூக்கியே குடிக்கிறான் சின்னப் பையன்.

மு.தனகோபாலன், திருவாரூர்.

மேய்ந்தான்!

வகுப்பில் ஒரு நாள் தமிழ் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். ஒரு மாண வியை எழுந்து பாடத்தை உரக்க வாசிக்கச் சொன் னார். அந்த மாணவியும் எழுந்து வாசித்தாள்.

"ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தான்" என்பதற்குப் பதிலாக "ஆடுகளை மேய்ந்து கொண்டிருந்தான்" என்று அவள் வாசித்தது தான் தாமதம், ஆசிரியர் உட்பட வகுப்பே சிரிப்பொலியில் ஆழ்ந்தது.

மு.பாலாம்பாள், காரைக்குடி.

உஜாலா போடு!

என் தம்பிக்கு 6 வயதாகிறது. ஏதாவது ஒரு பிரபலமான விளம்பரம் என்றால் அதையே எந்நேரமும் பாடிக் கொண்டே இருப்பான்.





சினிமா பாடலும் அதே மாதிரிதான். சாப் பாட்டைக் கூட மறந்து விடுவான். குறிப்பாக உஜாலா விளம்பரத்தைத்தான் பாடுவான். "வெள்ளைத் துணியை வெளுத்துக்கட்டு என்று ஆரம்பித்து உஜாலா... உஜாலா வரை பாடி முடிப்பான். அவன் இரவு 7 மணிக்கே சாப்பிடாமல் படுத்துத் தூங்கிவிடுவான். அம்மாதான் அவனை எழுப்பி சாப்பாடு போடுவார். ஒரு நாள் இரவு அப்படித்தான் தூக்கத்தில் இருந்தவனை எழுப்பி "டேய் உனக்கு சாம்பார் போடட்டா? ரசம் போடட்டா?" என்று கேட்டார். உடனே தம்பி "உஜாலா போடு" என்றானே பார்க்கலாம். அனைவரும் 'கொல்'லென்று சிரித்துவிட்டோம். பிறகு அவனைத் தூக்கி முகம் கழுவிவிட்டு சாப்பாடு போட்டார் அம்மா. விடிந்து எழுந்ததும் இதை அவனிடம் சொல்லிச் சிரித்தோம். இப்பொழுது அவனுக்கு உஜாலா என்றால் போதும். கோபம் வரும்.

கோ.குப்புசாமி, சங்கராபுரம்.

சூப்பர் குட்

எனது தம்பி தனது நோட்டில் ஆசிரியர் குட் போட்டார் என்பதை தினமும் பெருமை யாக எல்லாரிடமும் கூறுவான். ஒரேயடியாகப் பீற்றிக் கொள்வான். எனக்குப் பொறுக்க வில்லை. நோட்டை வாங்கிப் பார்த்தேன்.

"என்னடா S.G. ன்னுல போட்டிருக்கு?" என்று கேட்டேன்.

"அதுக்கு Super Good ன்னு அர்த்தம்" என்றான் தம்பி அசறாமல்.

"Very Good தான் பெரியவங்க போடு வாங்க. இது என்ன வித்தியாசமா இருக்கே!" என்று நானே கூறிக் கொண்டேன்.

ஒரு நாள் தம்பியின் வகுப்பு ஆசிரியரை

எங்கள் ஊரில் நடந்தது!

நானே சந்திக்கும்படி இருந்தது அவரிடம் கேட்டேன். அப்பத்தான் ஆசிரியரின் இன்ஷியல் 'S' என்றும் - அவர் பெயர் கணேசன் என்றும் தெரிய வந்தது. பாவம் தம்பி!

சு.காந்தி ராக, திருவல்லிக்கேணி.

எட்டும்!

நான் வீட்டில் உட்கார்ந்து படித்துக் கொண்டு இருந்தேன். வீட்டில் புதிதாக ஒரு நாற்காலி வாங்கியிருந்தார்கள். என் நான்கு வயதுத் தம்பி அலமாரியின் மேல் இருக்கும் ஒரு பொருளை எடுப்பதற்காக புது நாற்காலியை எடுத்துப் போட்டான் அப்போது என் அம்மா நாற்காலி அழுக்கடையாமல் இருக்க, "நாற்காலியின் மேல் ஒரு காகிதத்தைப் போட்டு அதன் மேல் ஏறு" என்றார். உடனே என் தம்பி குறும்பாக, "தான் போடாமலேயே எனக்கு எட்டும்" என்றானே பார்க்கலாம். ஒரே சிரிப்புத்தான்.

கு.கருணாநிதி,சோழன் மாளிகை

வாய் வலிக்கும்!

நான் ஈரோட்டிலிருந்து சேலத்திற்குப் பயணம் செய்து கொண்டிருந்தேன். நான் அமர்ந்திருக்கும் முன் சீட்டில் ஐந்துவயதுச் சிறுவனும் அவரது தந்தையும் அமர்ந்திருந்தனர். சங்கரி வந்ததும், சிறுவன் பலூன், விசில் விற்பவரைப் பார்த்து, அப்பா விசில் வாங்கிக் கொடுங்கப்பா!" என்றான். அவரும் விசில் வாங்கிக் கொடுத்தார். சங்கரியைவிட்டு பஸ் சிறிது தூரம் சென்றதும், சிறுவன் விசிலை சப்தமாக ஊதினான். விசில் சப்தம் கேட்டவுடன் டிரைவர் வண்டியை நிறுத்திவிட்டார். தனது மகன்தான் விசிலை ஊதியிருக்கிறான் என்பதை அறிந்த அச்சிறுவனின் தந்தை.



"ஏண்டா பஸ் போயிட்டு இருக்கும் போது விசில் ஊதின?" என்று கேட்டதுக்கு, அச்சிறுவன் "அப்பா நாம ஏறினதிலிருந்து கண்டெக்டர் மாமாவே விசிலடிச்சுக்கிட்டு இருந்தாரு. அவருக்கு 'வாய் வலிக்கும்' னு சொல்லிட்டுத் தான் நான் விசிலடிச்சேன்" என்று வெகுளித்தனமாகக் கூறினான். அவன் கூறியதைக் கேட்டு பஸ் முழுக்க சிரிப்புதான் போங்கள்!


ச.சிவக்குமார், ஈரோடு.

கிழித்து விடும்!

எங்கள் வீட்டில் நான் எனது தங்கை, தம்பி பக்கத்துவீட்டுக் குழந்தைகள் அனைவரும் படித்து கொண்டிருந்தோம் என் தங்கை தேவி எப்பொழுதும் சத்தமாகத்தான் படிப்பாள் அன்று திருக்குறள் படித்து கொண்டிருந்தாள் "அடக்கம் அமருள் உய்த்து விடும், அடக்கம் அமருள் உய்த்து விடும்" என்று சத்தமாகப் படித்துக் கொண்டிருந்தாள். என் தம்பி "மெதுவாகப் படி. மற்றெல்லாரும் படிக்க வேண்டும்" என்று சொன்னான். அவள் கேட்காமல் மறுபடியும் "அடக்கம் அமருள் உய்க்கும்" என்று சத்தமாப் படித்தாள் உடனே என் தம்பி "அடங்காமை உன் வாயைக் கிழித்து விடும்" என்று சத்தமாகச் சொன்னான். வீட்டில் உள்ள சின்னக் குழந்தைகள் பெரியவர்கள் உட்பட அனைவரும் சிரித்துவாட்டோம்.

ம.வைஜயந்திமாலா, பட்டீஸ்வரம்.

சின்ன தப்பு தானே!



பாபு எட்டாம் வகுப்பில் படிக்கிறான். அன்று ஞாயிற்றுக் கிழமை. அம்மாவுடன் மாமா வீட்டுக்குக் கிளம்பினான். மாமா பிள்ளைகளுடன் பொழுதைக் கழித்துவிட்டு மாலையில் அம்மாவுடன் வீட்டுக்குக் கிளம்பத் தயாரானான்.

தலையை வாரிக் கொள்ள சீப்பை எடுத்த போது, அது புதுமையாக இருந்ததைக் கவனித்தான் பாபு. பிடியும் சரி, சீப்பின் வண்ணமும் சரி, சாதாரணச் சீப்புகளைப் போல் இல்லாமல் வித்தியாசமாக இருந்தது. யாரும் கவனிக்கவில்லை என்று தெரிந்ததும், சீப்பை எடுத்து சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு கிளம்பி விட்டான்.

மறுநாள் வாரிக் கொள்ளும் போது அம்மா கவனித்து விட்டாள்.

"என்னடா அது மாமா வீட்டுச் சீப்பு மாதிரி இருக்கே? திருடிட்டு வந்துட்டியா?"

"திருடலேம்மா. எடுத்திட்டு வந்திட்டேன்!"

"அதுக்குப் பேர் என்ன? யார் கிட்டயாவது சொல்லிட்டு வந்தியா?"

பாபு முழித்தான்.

"அடப்பாவி! மாமா வீட்டுல என்ன நினைப்பாங்க! இப்பவே போய் சொல்லிட்டு மன்னிப்புக் கேட்டிட்டு வந்துடுடா கண்ணா!"

"என்னம்மா நீ! இந்தச் சின்னச் சீப்பு காணாம போனதுக்காக அவங்க நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் தப்பா நினைக்க மாட்டாங்க. நான் அடுத்த வாரம் போய்ச் சொல்லிக்கிறேன்."

"சின்ன தப்புதான் நாளைக்கு பெரிசா வளரும். அதனால இப்பவே போய்ச் சொல்லிட்டு வந்திருப்பா."

"என்னம்மா நீ! இந்தச் சின்ன தப்பு ஒரு வாரத்தில எவ்வளவும்மா வளரப் போகுது?" என்று அலட்சியமாகக் கூறிவிட்டுப் போய் விட்டான் பாபு.

அடுத்த வாரம் ஞாயிற்றுக் கிழமை. அம்மாவும், மகனும் மாமா வீட்டுக்குக் கிளம்பினர் அங்கு வீடே சோகமயமாக இருந்தது! மாமாவின் பிள்ளை விஜி கட்டிலில் படுத்திருந்தான். "என்ன மாமா ஆச்சு?" என்று பாபு கேட்டான். மாமாவால் பேச முடியவில்லை. அத்தைதான் பேசினாள்.

"போன வாரம் சிங்கப்பூர் போயிட்டு வந்த நண்பன் ஒருத்தன் உங்கமாமாவுக்கு ஒரு அழகான சீப்பை அன்பளிப்பாகத் தந்திருக்கிறார். அதை இந்த விஜி ஒரே நாள்ல எங்கேயோ தொலைச்சுபுட்டா. கேட்டா, நான் எடுக்கவே இல்லைன்னு பொய் சொன்னான். கோபத்தில் நான்தான் ரெண்டு அடி அடிச்சிட்டேன். அந்தப் பயத்துல அவனுக்குக் காய்ச்சல் வந்திருச்சி. டாக்டர் கிட்ட காட்டி, ஊசி போட்டிருக்கோம். காய்ச்சல் இன்னும் குறையல. இன்னிக்கிக்குள் குறையாவிட்டால், ஆஸ்பத்திரில சேர்க்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கார். என்ன பண்றதுன்னே தெரியல" என்று அத்தை அழுதாள்.

பாபுவுக்கு 'திக்'கென்றது. அம்மாவைப் பார்த்தான். கண்கள் கலங்கின. அவன் செய்த சாதாரணமான சின்னத் தவறு எத்தனை பெரிதாக வளர்ந்து இங்கே எல்லோரையும் கலங்க வைத்து விட்டது!

"என்னை மன்னிச்சிருங்க அத்தை. நான்தான் அந்த சீப்பை எடுத்தேன். உங்ககிட்ட சொல்லாம எடுத்துக் கொண்டு போனது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்ப நான் உணர்ந்துட்டேன். இனிமே இப்படிச் செய்ய மாட்டேன்" என்று அழுதான் பாபு.

— கே.சி. கோகுலன்

வே. சபாநாயகம்

மாலனுக்கு இன்னும் இரண்டு நாட்களில் பிறந்த நாள் வருகிறது. அவன் ஒரே பிள்ளை என்பதால் அவனுடைய அப்பாவும், அம்மாவும் அவனது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுவார்கள். அவனுக்குப் பிடித்தமானதை என்ன விலை இருந்தாலும் வாங்கித் தருவார்கள். அவனது விருப்பத்தைத் தட்ட மாட்டார்கள்.

இந்த ஆண்டும், 'உனக்கு என்ன வேண்டும்? கேள்' என்று அப்பா கேட்டார். இந்த ஆண்டு தனது பிறந்தநாளில் ஏதாவது வித்தியாசமானதாகச் செய்ய வேண்டும் என்று மாலன் முடிவு செய்திருந்தான்.

என்ன வாங்கலாம்? ஆடை, ஆணிகலன்கள் எல்லாம் ஏற்கெனவே வேண்டிய அளவுக்கு முந்திய ஆண்டுகளில் வாங்கி அணிந்தாயிற்று. தின்பண்டங்கள் மீதும் அவனுக்கு அப்படி ஒன்றும் ஆசையில்லை. விளையாட்டுச் சாமான்கள் மீதும் ஆசை குறைகிற வயது ஆகி விட்டது. வேறு என்னதான் கேட்பது?

வெகுநேரம் யோசனை செய்தான் மாலன். தன் பிறந்தநாளைக் கொண்டாடுவதில் யாருக்கு மகிழ்ச்சி? அப்பா அம்மாவுக்கு மகிழ்ச்சி. அது இயற்கைதான். ஆனால், தன் பிறந்தநாளன்று மற்றவர்களும் மகிழ்ச்சியடைய வேண்டும்; அவர்கள் மனதார வாழ்த்த வேண்டும். பெற்றவர்கள் வாழ்த்துவது என்ன அதிசயம்? வசதி இல்லாதவர்கள் தன் பிறந்த நாளை எதிர்பார்க்கிற மாதிரி ஏதாவது செய்ய வேண்டும். என்ன செய்யலாம்?





மாலன் தெருவிற்கு வந்தான். எதிர்வீட்டுத் திண்ணை மீது அமர்ந்திருந்த ராமு அவன் கண்ணில் பட்டான். மேலே சட்டையில்லாமல், இடுப்பில் பொத்தான் இல்லாத கால் சட்டையை முடிந்து கொண்டிருந்தான். உடல் மெலிந்து எலும்பும் தோலுமாய் இருந்த அவனுக்கு மாலனின் வயது தான். அவனது வகுப்பில்தான் படிக்கிறான். அம்மா இல்லை. அப்பாவுக்கு ஏதோ ஒரு அலுவலகத்தில் சின்ன உத்தியோகம். அவரே சமையல் செய்து அவனுக்குப் போட்டு அனுப்புவார். அதனால் சுவையான உணவு வகைகளை ராமு ருசித்ததில்லை.

மாலன் தன் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து ஏதாவது தின்பண்டம் கொறித்துக் கொண்டிருந்தால், ராமு தயங்கித் தயங்கி அவன் அருகில் வருவான். சோகமாக அவனைப் பார்ப்பான். பிறகு ஏக்கத்துடன் அவன் தின்கிற தின்பண்டங்களே நோக்குவான். அவனையறியாமலே அவனது கை நீளும். பாவம்! அவனுக்கும் அம்மா இருந்தால் தின்பண்டங்கள் செய்து தருவாளே! மாலன் இரக்கப்பட்டு அவனுக்குக் கொஞ்சம் கொடுப்பான்.

அம்மா பார்த்து விட்டால் திட்டுவாள். "கையிலே ஒண்ணைப் பாத்துடப்படாதே! கழுகு மாதிரி காத்துக்கிட்டு இருப்பானே தட்டிக்கிட்டுப் போக! போடா போ, போ!" என்று ராமுவை விரட்டுவாள்.

ஆனால் மாலன் ராமுவுக்காகப் பரிந்து பேசுவான்.

"பாவம்மா அவன். அவனுக்கும் அம்மா இருந்தா உன்னை மாதிரி விதம் விதமா பலகாரம் பண்ணிக் கொடுப்பாள் இல்லியா? அதான் வரான். அவனைத் திட்டாதே!" என்பான் மாலன்.

"போதுண்டா உன் தாராளம். போ உள்ளே!" என்று ஈவு இரக்கம் எதுவும் இல்லாது அதட்டுவாள் அம்மா. ராமு முகம் சுண்டிப் போய்த் திரும்புவான்.

இப்போது ராமுவைப் பார்த்ததும் மாலனுக்கு ஒரு யோசனை தோன்றியது. பிறந்த நாளுக்குப் பெற்றோரிடம் என்ன பரிசு கேட்பது என்று அவனுக்குத் தோன்றி விட்டது. இப்போதே கேட்டால், ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி எண்ணத்தை மாற்றி விடுவார்கள். அதனால் கடைசி நேரத்தில்தான் அவர்களிடம் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தது கொண்டான்.

பிறந்த நாளும் நெருங்கியது. நாளைக்குப் பிறந்த நாள். "மாலா, பிறந்த நாள் பரிசா என்ன வேணும்னு இன்னமும் சொல்லலையே!" என்றார் அப்பா.

"என்ன கேட்டாலும் மறுக்க மாட்டீர்கள்தானே?" என்று கேட்டான் மாலன்.

"நீ எது கேட்டாலும் கிடைக்கும். நீ எங்களுக்கு ஒரே செல்ல மகன் இல்லையா?" என்றாள் அம்மா.

"அம்மாவுக்குப் பிடிக்காத பரிசாக இருந்தாலுமா?" என்றான் மாலன்.

"உன் பிறந்த நாளில் நீ மகிழ்ச்சியாக இருப்பதுதானே முக்கியம்? எனக்குப் பிடிக்காவிட்டால் என்ன?" என்றாள் அம்மா.

"அப்புறம் இட்டக் கூடாது!" என்று உறுதிப்படுத்திக் கொண்டான் மாலன்.

"சரி, நாளைக்குப் பிறந்த நாள் கொண்டாடும் போது கேட்கிறேன்" என்றான் மாலன் அப்பொழுதும் வெளியிடாமல்.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் அவன் பேச்சு புதிராக இருந்தது. "நாளைக்குச் சொன்னால் எப்படி? இப்போது சொன்னால்தானே வாங்கி வர முடியும்?" என்றார் அப்பா.

"இது வாங்குகிற பொருள் இல்லை.



நாளைக்குத் தெரியும்" என்று மர்மமாகச் சிரித்தான் மாலன். "ஒரே ஒரு வேண்டுகோள், இப்போதைக்கு எதிர் வீட்டு ராமுவையும் பிறந்த நாளுக்கு அழைத்துக் கொண்டாட வேண்டும்."

"ஐய! அந்தப் பஞ்சக் கோலத்தையா?" என்று முகம் சுளித்தாள் அம்மா.

"பாவம்மா! அவனுக்குத்தான் தன் பிறந்த நாளைக் கொண்டாட வசதி இல்லை. என் பிறந்த நாள் கொண்டாட்டத்திலாவது கலந்து கொள்ளட்டுமே!"

"சரி! உன் விருப்பம் போல நடக்கட்டும்" என்றார் அப்பா.

மறுநாள் மகிழ்ச்சியோடு மாலன் எதிர் வீட்டு ராமுவையும் அழைத்து வந்தான். அதே பித்தான் இல்லாத அரை நிஜாருடனேயே ராமு வந்தான். பிறந்த நாள் கேக் வெட்டி முதலில் ராமுவுக்குக் கொடுத்தான் மாலன். பிறகு தான் அப்பா அம்மாவுக்கு.

அப்பாவும் அம்மாவும் வழக்கம் போல, ஆளுக்கு ஒரு செட், விலை அதிகமான புதிய டிரஸ், பிறந்த நாளுக்காக வழங்கினார்கள். "சரி! பிறந்த நாள் பரிசாக ஏதோ கேட்பதாகச் சொன்னாயே! என்ன அது?" என்றாள் அம்மா.

"ஆமாம். அதைப் பற்றி நேற்றுக் கேட்டதற்கு இன்றைக்குச் சொல்வதாகக் கூறியிருக்கிறாயே! என்ன அது?" என்று கேட்டார் அப்பாவும் ஆவலுடன்.

"இதோ இந்த இரண்டு செட் உடையில் ஒரு செட் உடையை ராமுக்கு எனது பிறந்த நாள் பரிசாகக் கொடுக்கப் போகிறேன். அதை நீங்கள் அனுமதிப்பதுதான் எனக்கு நீங்கள் தரும் பிறந்த நாள் பரிசு!" என்றான் மாலன் உற்சாகமாக.

அம்மாவுக்கு முகம் கோணியது. "என்ன



மாலு இது! நீ இந்த மாதிரி கேட்கப் போகிறாய் என்பதை நேற்றே சொல்லியிருந்தால், கொஞ்சம் விலை குறைச்சலல ஒரு சட்டை வாங்கிக் கொண்டு வந்திருப்பேனில்லே? ஏன்டா இப்படிப் பழிஎடுக்கறே?" என்று இறங்கிய குரலில் கேட்டாள்.

"இப்படி முரண்டு பண்ணுவீர்கள் என்றுதான் நான் முன்பாகவே உறுதி வாங்கிக் கொண்டேன். எனக்கு உங்கள் விலை உயர்ந்த பரிசு வேண்டவே வேண்டாம்" என்று பதிலுக்கு இறங்கிய குரலில் கூறினான் மாலன்.

ராமு பாவம், இரண்டாவது கேக் துண்டை சுவைத்து சுவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மாலன் அப்பாவைப் பார்த்தான். "மாலு, நீ எடுத்த முடிவு பொருத்தமானதுப்பா. தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்காது, மற்றவர்களைப் பற்றியும் நினைக்கிற மனம் எல்லோருக்கும் வந்துவிட்டால் உலகில் பாதிப் பிரச்னை தீர்ந்து விடும். அந்த மன வளர்ச்சி உனக்கு உள்ளதைப் பார்த்து நான் மிகவும் பெருமைப் படுகிறேன் மாலு."

அப்பா அவனைத் தட்டிக் கொடுத்தார்.

"இதுதான் உண்மையான பிறந்த நாள் பரிசு. பிறந்த நாளில் நீ பரிசு பெறுவதை விட, வசதியற்ற மற்றவர்களுக்குப் பரிசு கொடுப்பதுதான் உயர்வானது" என்றார்.

அதற்கு மேல் அம்மா மறுக்கவில்லை. "ஆமாம் மாலா! இந்த ஆண்டு போலவே அடுத்த ஆண்டும் உன் பிறந்த நாள் வர வேண்டும் என்று ராமு வாழ்த்துவானே, அதுதான் உண்மையான மகிழ்ச்சி எங்களுக்கு" என்றாள்.

மாலன் குதூகலத்துடன தன் புதிய இரண்டு செட் உடைகளையும் ராமுவிடம் நீட்டி, "ராமு! இதில் உனக்கு எது பிடிக்குமோ அதை எடுத்துக் கொள்" என்றான்.

ராமுவிற்குப் பிரமிப்பாக இருந்தது. தயக்கத்துடன மாலனின் அம்மாவைப் பார்த்தான்.

"தயக்கம் வேண்டாம் ராமு. மாலனின் விருப்பம்தான் எங்கள் விருப்பமும். உனக்குப் பிடித்ததை எடுத்துப் போட்டுக் கொண்டு வா. பிறந்த நாள் விருந்தைச் சுவைக்கலாம்" என்று ஆதரவோடு சொன்னாள் அம்மா.


ஹைடர் ஜக்கு பூமிக்கு வந்த கதை!


கதை: உதயலால்   படம்: ஏ.டி.தியாகராஜன்


ஹைடர் ஜக்கு, மாற்று கிரகத்தைச் சேர்ந்த நல்லவன். அசாதாரணமான சக்தி பெற்ற மாயச் சிறுவன். தவறு செய்பவர்களைத் தண்டித்து, நல்லவர்களுக்கு உதவும் ஜக்குவின் அருமைத் தோழன் ராமு. ஒரு நாள்...






இந்த பால்மண்டலத்தின் (GALAXY) பெயர் என்ன ராமு?
ஆகாச கங்கை!
இதுல எத்தனை நட்சத்திரம் இருக்கு?
ஒரு லட்சம் கோடிக்கு மேல்!
சூரியன் நிலை?
பூமியைப் போல் சூரியனும் ஒரு கோள். அதை பூமி சுத்துது. தானும் சுத்துது.
வானத்தில் ஆகாச கங்கை மாதிரி ஆயிரம் கோடி கேலாக்ஸி இருக்கு அதுல ஆண்டிரா மீடியான்னு ஒன்னு.
நினைத்துக் கூடப் பார்க்க முடியாத தொலைவில். சுமார் 220 லட்சம் ஒளியாண்டுத் தொலைவில்.
நீ அங்கேயா இருக்கே?
ஆண்டிரோ மீடியா கேலாக்ஸில 4000 கோடி நட்சத்திரம்! சூரியன் மாதிரி ஆல்பாட்டு ஒன்னு. பூமி மாதிரி இயங்கும் ஒரு கோள். அது தான் என் சொந்தக் கோள்!
அந்தக் கோளின் பெயர்?
ஜீவா
அதுல இருந்துதான் வரியா?
ஆமா! 5 லட்சம் ஆண்டுகளுக்கு முன் கிளம்பினேன்
அப்படின்னா உன் வயசு என்ன?
உங்க மாதிரி வயசுக் கணக்கு எங்களுக்கு இல்லே!
பிரமிப்பா இருக்கு! மேலே சொல்லு!



ஜீவா கோள்ல இருந்தப்போ என் பெற்றோர்...
நம்ம பையன் ஜக்குவை நினைச்சா கவலையா இருக்குங்க.
பிறந்து 3 வருஷமாகியும் போதிய அறிவு வளரலைன்னு தானே? எனக்கும் அந்த கவலை தான். ஆனா...
போகப் போக அறிவு வளர்ச்சி வந்திடும் கவலையை விடு!
அவன் எதிர்காலத்தை அறிய குருஜியிடம் கேட்கலாமா?
குருவின் குடும்பம் இருந்த இடத்திற்குப் பறந்து போனார்கள்.
வணக்கம் குருஜி!
ஜக்குவின் எதிர்காலம் எப்படி இருக்கும்?
குரு, ஒளி யந்திரத்தை வரவழைத்து பிரகாசிக்க வைத்தார். அதில் கவனமாகப் பார்த்தார். முகத்தில் கவலை நிறைந்தது.
ஜீவாவில் அவன் இருக்க மாட்டான். ஆகாய கங்கையில் உள்ள பூமியில் தான் அவன் பத்திரமாக இருப்பான்.
அப்போ, எங்களை விட்டுப் போய்டுவானா?
அவன் மட்டும் அல்ல, நாம் எல்லோருமே ஜீவாவை விட்டுக் கிளம்பலாம். பெரிய ஆபத்து நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கு. இனிமே இங்கே இருப்பது அழிவை நாமே தேடிக்கொள்வதாகும்.


ஷீவா கோளுக்கு மாற்று கிரக ஆபத்து வரப்போவதை குரு விளக்கினார்...
இதை ராஜாவுக்கும் சொன்னேன். யாருமே நம்பல. என்ன செய்வது?
நாங்க நம்பறோம் குருஜி!
குருவின் எச்சரிக்கையை பெற்றோர் ஏற்றுக் கொண்டனர்.
உங்க ராஜா நல்லவர் இல்லையா?
முட்டாள் ராஜா. சிந்தனை, திறமை, உடல் பலம், செயலாக்கம் இல்லாதவர். நல்லவர் எச்சரிக்கையைக் கூட மதித்து ஆபத்தை விலக்கிக் கொள்ள முயற்சிக்காத சண்டி ராஜா.
இப்படி இங்கேயும் இருக்காங்க!
குருவின் எச்சரிக்கையை அறிந்த பெற்றோர்...
குரு சொன்னால் பொய்க்காது. ஆனா ராஜா கேட்கலையே! மாற்று கிரக தாக்குதல் நடந்தால் எதிர்க்கக் கூட நாம் தயாரில்லையே எப்படி இதைத் தாங்கப் போகிறோம்?
மாற்று கிரகத்தார் இதை வெடித்து சிதற வைப்பாங்களாமே!
நாமாவது தப்பிப் போக தனி வாகனம் செய்துக்கறது நல்லது.
குருவின் எச்சரிக்கைப் படி ரோபாட், கம்ப்யூட்டர் உதவியுடன் என்னை யாவது தப்பி அனுப்பு அப்பா சின்ன பறக்கும் தட்டு தயாரித்தார்.
அதற்குள் ஷீவா கிரகம் தாக்கப்பட்டது.
பெரிய பறக்கும் தட்டு பண்ணி மூவரும் தப்ப நேரமில்லை. அதனால் என்னை சின்னதில் வைத்து—
செல்லக் கண்ணா பிரியப் போறியா?
பெரிதாகப் பண்ணியிருந்தால் நாம கூடக் கிளம்பியிருக்கலாம். இவனாவது தப்பிப் போகட்டும்.


கொஞ்சம் இடம் இருக்கே! நீ போறியா?
வேண்டாம், நீங்க போங்க
நீ போனால் ஆத்தாவுக்குத் துணை இல்லையா?
உங்களை விட்டு பிரிய மாட்டேன். எதையும் இருவருமா சந்திப்போம்.
பறக்கும் தட்டு கிளம்பியது.
பிரபஞ்சத்தில் எங்கேயாவது வாழ்ந்து கொள்
செல்லக் குட்டி ஜக்கு! டாட்டா!
பிரபஞ்ச வெளியில் நுழைந்திட்டது இனி ஆபத்து இல்லை!
நல்லதே நடக்கட்டும், பை!
தாக்குதலால் ஷீவா கோள் வெடித்துச் சிதறியது.
என் பறக்கும் தட்டு தப்பிச்சாலும் பகைவர்களான மாற்று கிரகவாசிகள் நான் போவதைப் பார்த்து விட்டார்கள்.
ஒரு அணி என்னைத் துரத்தி அழிக்க வந்தது!
ஹஹ்ஹா! தப்பிச்சிட்டதா நினைப்பா? நடக்காது!
நான் செல்ல, அது துரத்த அதனை லட்சம் ஒளி ஆண்டுகள் கழிந்தன. எனக்கு வயது ஏறியது புத்திசாலித்தனமும் வளர்ந்தது.
வேகத்தைக் கூட்டலாம்!
அதன் வேகமும் கூடியது!


கறுப்புப் புள்ளி ஆபத்தானது பூகம்பப் பிளவு மாதிரி அதில் நுழையும் எதுவுமே மீளாது அழிவுதான்!
இன்னும் வேகத்தை அதிகரிக்கலாம்!
ராக்கெட்டின் வேகமும் கூடியது!
அந்த வெறியில் கறுப்புப் புள்ளி நெருங்குவதைக் கவனிக்கத் தவறியது!
தப்ப சரியான நேரம். இப்பாதையை மாற்றிக் கொள்ளலாம்!
ஜக்குவின் பறக்கும் தட்டிலேயே குறியாக இருந்த ராக்கெட் கறுப்புப் புள்ளியை நோக்கி விரைந்தது!
!!?
ஐயோ! தப்பி விட்டானே! கறுப் புள்ளிக்குள்ளா நுழையப் போகிறோம்
எனக்கு அழிவு நிச்சயம்.


பகைவனின் ஏவுகணை பறக்கும் தட்டை நோக்கி வந்தது.
துரத்தி வந்த பகைவன் ராக்கெட்டோடு கருப் புப் புள்ளிக்குள் நுழைந்து அழிந்தான்!
ஆ! ஐயோ!
ஒரு வழியாகத் தப்பினோம்--
மகிழ்ச்சி நீடிக்க வில்லை. ஏவுகணை மோதி அழிக்க வந்தது.
ரோபோட் கம்ப்யூட்டர் ஆணையால் உருவாக்கப் பட்ட பறக்கும் தட்டில் ஏவு கணை மோதியது.
ஐயோ!
பூமியை நோக்கி விழுந்தது...
இப்படியும் நடக்குமா? இதை என்னால் நம்பவே முடியலை யே ஐக்கு! நீ விடுற மாதிரி இருக்கே!
இதை நம்பும் அளவுக்கு மனித மூளை வளர்ச்சி அடையவில்லை ராமு
என்னை மன்னித்து விடு ஐக்கு. நம்புறேன். அப்போ என்னை மாதிரியே நீயும் அநாதையா!
அப்படி இல்லே. என் பெற் றோர் தூள் தூளாகி அண்ட வெளியில் பறந்து கொண்டிருக்க லாம். என்றைக்காவது ஒருநாள் தூள்களெல்லாம் ஒன்றாக இணைந்து மறு படி அவங்களுக்கு உருவம் கிடைக் கலாம்.
அப்படியா! அவங்க எப்போ வரக்கூடும்?
மயங்கி விடாதே ராமு. 220 லட்சம் ஒளி ஆண்டுகளுக்குப் பிறகு!
© Udaylal L.



யானை கொடுத்த பூச்செண்டு!

உலகநாடுகள் பலவற்றிற்கும் நேரு சென்று வந்திருக்கிறார். இந்தியாவின் முன்னேற்ற திட்டங்கள் குறித்தும், உலக அமைதியைக் காக்கவும் அவர் பல நாட்டுத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதில் அளவில்லாத ஆர்வம் காட்டி வந்தார். இதே அளவிலான ஈடுபாடு நேருஜிக்குக் குழந்தைகளிடமும் இருந்தது.

போர் இல்லாத ஓர் உலகத்தைக் குழந்தைகளால் மட்டுமே வருங்காலத்தில் உருவாக்க முடியும். அதற்கு ஏற்றபடி அவர்கள் மனத்தைப் பக்குவப்படுத்துவது பெரியவர்களின் கடமை என்று அவர் எண்ணினார். இதன் காரணமாகவே எந்த நாட்டுக்குச் சென்றாலும், அந்த நாட்டுக் குழந்தைகளுடன் சிறிது நேரத்தையாவது கழிக்க அவர் விரும்பினார். அவரது திட்டத்தில் குழந்தைகளைச் சந்திக்கும் நிகழ்ச்சி கட்டாயம் இருக்கும். விமான நிலையத்தில் அவர் இறங்கியதும் அவரைக் கொடியசைத்து வரவேற்பவர்கள் அந்த நாட்டுத் தலைவர்களுடன் நூற்றுக்கணக்கான குழந்தைகளும்தான்!

1960-ஆம் ஆண்டுகளில் நேருஜி ரஷ்யா சென்றிருந்தார். மாஸ்கோ விமான நிலையத்தில் ஆயிரக்கணக்கான குழந்தைகள் பாரத, சோவியத் கொடிகளை அசைத்து அவரை வரவேற்றனர். நேருஜி தன்னை மறந்து போனார். காரைப் பலமுறை வலம் வர வைத்துக் கையசைத்தார். பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை மீறி காரிலிருந்து கீழே இறங்கி குழந்தைகளை நோக்கி நடந்தார். அவர்களுடன் கை குலுக்கினார். கன்னத்தைக் கிள்ளிக் கொஞ்சினார். ஒரு இடத்தில் ஊனமுற்ற ஒரு சிறுவன், கையில் ஏதோ காகிதத்தை வைத்துக் கொண்டு கையசைத்தான். நேருஜி அவனை நெருங்கி காகிதத்தை வாங்கிப் பார்த்தார். அதற்குக் கீழே கையெழுத்துப் போட்டுத் தருமாறு தனது வண்ணப் பென்சிலை சிறுவன் நீட்டினான். நேருஜி அதை ஆவலுடன் தானே




வாங்கிப் பார்த்தார். அது அந்த ஊனமுற்ற சிறுவன் வரைந்த ஓவியம். யானை ஒன்று துதிக்கையை உயர்த்தி துப்பாக்கியால் சுடுவது போல் வரையப்பட்டிருந்தது! நேருஜி குழப்பத்துடன் அதிகாரிகளைப் பார்த்தார்.

''சமீபத்தில் இங்கே சர்க்கஸ் முகாமிட்டிருந்தது. அதில் இந்திய யானை ஒன்று துப்பாக்கியால் சுடும் காட்சி இருந்தது. அதைத் தான் இவன் ஓவியமாக வரைந்திருக்கிறான்'' என்று அருகிலிருந்த சோவியத் அதிகாரி விளக்கினார்.

சிறுவனின் கையிலிருந்த வண்ணப் பென்சிலை வாங்கிய நேருஜி, யானையின் துதிக்கையில் இருந்த துப்பாக்கியை நொடியில் மலர்ச் செண்டாக மாற்றி வரைந்தார்! கீழே தனது கையெழுத்தை இட்டார். சிறுவனின் கன்னத்தைக் கிள்ளி, அவனிடம் ஓவியத்தைக் கொடுத்தார்.

குழந்தைகள் வரையும் ஓவியங்களில் கூட வன்முறை இருப்பதை விரும்பாத நேருஜியின் உன்னதமான இலட்சியத்தை உலகமே வியந்தது.

நேரு மீண்டும் பிறப்பாரா?





சதம் போடும் ஆசிரியரின் சாதனை மகுடம்

ஆனைமலைக் காட்டிலே, டாக்டர். பூவண்ணன், பக். 124 ரூ. 22/- வானதி பதிப்பகம், தீனதயாளு தெரு, தி.நகர், சென்னை – 17.

கோகுலம் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான ஆசிரியரது மூன்று குறுநாவல்கள் இதில் உள்ளன. இந்த நூல் பல வகைகளில் சிறப்புடையது. சிறுவர்க்கான குறுநாவல் என்பது எப்படி இருக்க வேண்டும் என்பதை இது விளக்குகிறது. மரங்களைப் பாதுகாக்கவும், மரங்களை வளர்க்கவும் ஒரு பேரியக்கம் நடத்தினால் அதன் விளைவுகள் எப்படி இருக்குமோ அத்தகைய ஓர் அற்புதமான விளைவை இதில் உள்ள 'அதிசயப் பரிசு' குறுநாவல் சாதிக்கவல்லது. மற்ற இரு குறுநாவல்களும் திருக்குறள் சதாவதானத்தின் அருமை பெருமை, காட்டு வாழ்க்கை ஆகியவைகளைச் சுற்றி ஓடுகின்றன. ஆசிரியரின் நூறாவது சிறுவர் நூல் இது. இந்த சதம் போடும் ஆசிரியரின் சாதனைக்கு மகுடம் இந்த நூல். தமிழ் தெரிந்த ஒவ்வொரு சிறுவனும் படிக்க வேண்டிய நூல்.

சிரிக்கும் மழலை, குழ. கதிரேசன், பக். 20, ரூ. 18.50, யாழ் வெளியீடு, விற்பனை இடம் ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, சென்னை – 5.

குழந்தைக் கவிஞரால் ஈர்க்கப்பட்டு சிறுவர்க்கான பாடல்களைச் சிறப்பாகப் படைத்து வரும் கவிஞரின் பெருமைமிக்க படைப்பு இது. பெரிய அளவான பக்கங்களில், பெரிய எழுத்தில் எட்டு அடிக்கு மிகாத பாடல்கள். மீதிப் பக்கத்தில் கண்கவர் வண்ணப் படங்கள். பாடல்கள் எல்லாமே தாளம் போட்டுப் பாடவைக்கின்றன. இந்த நூற்றாண்டில் உலகை அடிமைப்படுத்தியுள்ள கம்ப்யூட்டர் என்ற கணிப்பொறியைப் பற்றிக் கூட ஒரு துள்ளும் சந்தப் பாடல்:

கணிப்பொறி! எங்கும் கணிப்பொறி,
கணக்கிடு வதிலே புலிப்பொறி!
படமும் வரைந்து காட்டுமாம்!
பாட்டுக்கு இசையைக் கூட்டுமாம்!

ஏவுகணை வானத்தில்
இருக்குமிடம் சொல்லுமாம்
மறக்காமல் நாம் சொல்வதை
மனத்தில் வாங்கிக் கொள்ளுமாம்!

எதைக் கேட்டாலும் கச்சிதமாய்
எழுத்து வடிவில் சொல்லுமாம்!
உதவி செய்யும் கணிப்பொறிக்கு
உலகம் வாழ்த்துச் சொல்லுமாம்!

கணிப்பொறி தோற்றுவிக்கப்பட்ட காரணம், அதன் பயன்கள் பரவி வரும் துறைகள் எல்லாம் வந்து விட்டதே! இதை விடவா அறிமுகம் தேவை! நல்ல காகிதம், கனத்த அட்டை, கண்கவர் படங்கள், சந்தம் மிக்க பாடல்கள் எல்லாம் நிறைந்தது. பரிசளிக்க ஏற்ற நூல்.

புதிரான நோய்களுக்கு டாக்டரின் பதில்கள் டாக்டர். முத்துச் செல்லக்குமார், பக். 142, ரூ. 27/- மணிமேகலைப் பிரசுரம், தணிகாசலம் சாலை, தி.நகர்., சென்னை – 17.


மருத்துவரின் பதில்கள் என்றாலே பெரியவர்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற எண்ணம் தவறானது. சந்தேகம் என்பது எல்லோருக்கும் எழக்கூடியது. பெரியவர்களால் எளிதில் பதில் கூற முடியாத சுவையான பல வினாக்கள் இதில் எழுப்பப்பட்டு, விடைகளும் தரப்பட்டுள்ளன. உதாரணம் : 13 வயதான தம்பிக்கு இன்னும் தலையில் முடியே முளைக்கவில்லையே? (பக்.132) உள்ளங்கை, உள்ளங்கால்களில் வியர்ப்பது நோயா? (பக்.69) காக்கா வலிப்புக்கு சாவி கொடுப்பது சரியான சிகிச்சையா? (பக். 39), ஒன்னரைக் கண்ணுக்கு என்ன சிகிச்சை? (பக்.17). எல்லோருக்கும் பயன்படும் நூல்.

காற்று சிரித்தது, சாமகோடாங்கி சங்கரலிங்கம், பக். 80 ரூ. 15/- சீடா அறக்கட்டளை, 98ஏ கூட்டுறவு நகர், திண்டுக்கல் – 624 004.

தான் இரையாகப் பிடித்துக் கொண்ட மான் குட்டியை எந்த மலைப் பாம்பாவது தப்ப விடுமா? தப்ப விட்டது மட்டும் இல்லை. வணங்கவும் செய்கிறது மலைப் பாம்பு! ஆமாம்; அந்த அளவுக்கு அம்மாவிடம் அன்பும், சொன்ன சொல் தவறாததுமாக மான் குட்டி நடந்து காட்டுகிறது. பாம்பு பாராட்டிவிட்டுப் போய்விடுகிறது! இப்படி அருமையான பன்னிரண்டு கதைகள் இதில் உள்ளன. ஒவ்வொரு கதையும் ஒரு குணத்தை வலியுறுத்துகிறது. சிறுவர் இலக்கியத்தில் ஐந்து வயது முதல் ஒன்பது வயதுக்கு உட்பட்ட சிறுவர்க்குக் கதைகள் அதிகம் இல்லை என்ற குறையை இது தீர்க்கும்.

வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டியில் வெளியிடத் தேர்ந்தெடுக்கப்பட்ட போட்டிக் கதை - 2

இதற்கெல்லாம்!



அதிகாலை ஐந்து மணி.

ஆதவன் தன் கதிர்களை எப்பொழுது நீல வானில் பரவ விடலாம் என்று யோசிக்க ஆரம்பித்துக் கொண்டிருந்த வேளை. சேவல்கள் குரலெடுத்துக் கூவ ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. புவனகிரியில் செல்வந்தர் வசித்த குடியிருப்புப் பகுதியில் பெரிய பங்களாவில் அம்மா சரவணனுக்கு சுப்ரபாதம் பாடிக் கொண்டிருந்தாள்.

"எழுந்திருடா சரவணா! எத்தனை நேரம்தான் எழுப்பறது? தேர்வு நெருங்கிடிச்சே? படிக்க வேண்டாமா? ரேங்க் வாங்கிக் காட்டறேன்னு அப்பாவிடம் சவால் மட்டும் விடுகிறாயே? வெட்கமா இல்லையா உனக்கு? சவாலை நிறைவேத்திக் காட்ட முயற்சி எடுக்க வேண்டாமா? எழுந்திருடா சரவணா, எழுந்திரு!"

சரவணன் எதற்கும் அசையவில்லை. தூக்கத்தில் உள்ள சுகம், ரேங்க் வாங்குவதில் இருக்குமா என்று எண்ணிக் கொண்டான்.

அம்மாவின் பொறுமையும் போய் விட்டது.

"டேய்! எழுந்திரிச்சுத்தான் தொலையேன். அக்கம் பக்கத்துல இருக்கிறவங்க உங்க சரவணன் எத்தனை மணி நேரம் படிக்கிறான்னு கேட்கும் போது வெட்கமாக இருக்கே."

"போம்மா. உன் தொணதொணப்புத் தாங்காம பத்து மணி வரை படிச்சேனில்ல? இன்னும் அரை மணி நேரம் கழிச்சு எழுப்பும்மா. நல்ல அம்மா இல்லே?" என்று கெஞ்சிக் கொஞ்சி விட்டுப் புரண்டு படுத்தான்.

அம்மா தெய்வத்தை நொந்து கொண்டு அவனை விட்டு விட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள்.



எஸ். சுசீலாதேவி

அதே நேரத்தில் காவாய் கரையோர குடிசையில் சுகுமார் படித்துக் கொண்டிருந்தான். அவன் ஏழைக் குடும்பத்தை சேர்ந்தவன். நன்கு படித்து உயர்ந்தால் தான் வருங்காலம் சிறப்பாக இருக்கும் என்ற நினைப் போடு அக்கறையாகப் படித்துக் கொண்டிருந்தான்.

இவர்கள் இருவரும் யாரென்று இன்னும் கூறவில் லையே? சரவணன். சுகுமார் இருவருமே ஒரே பள்ளி யில் பத்தாம் வகுப்புப் படிப்பவர்கள். ஒரே பிரிவும் கூட. சரவணனின் தந்தை சக்கரவர்த்தி பெரிய தொழி லதிபர். அவரது ஒரே வாரிசுதான் சரவணன். ஆடம் பர விரும்பி. சரவணனுக்குப் படிப்பதில் விருப்பமே இல்லை. இத்தனை செல்வம் இருக்கையில் எதற்காகப் படிப்பது என்பது அவனது நினைப்பு.

சுகுமார், தந்தையில்லாதவன். அவனுடைய அம்மா கறிகாய் விற்றுத் தானும் வாழ்ந்து மகனையும் படிக்க வைத்து வந்தாள். குடும்பத்தின் எதிர்காலம் நமது படிப்பில்தான் இருக்கிறது என்ற பொறுப்பான நினைப்போடு சுகுமார் கவனமாகப் படித்து பள்ளியில் ஊக்கத் தொகை பெற்று வந்தான்.

ஒவ்வொரு முறை பிராக்கிரஸ் ரிப்போர்ட் வரும் போதும் சரவணனின் வீட்டில் போராட்டம் நடக்கும். அப்பா அவனுடைய குறைந்த மதிப்பெண்களைப் பார்த்து கையெழுத்துப் போட மறுப்பார். சரவணன், அம்மாவிடம் கெஞ்சிக் கொஞ்சி எப்படியோ கையெழுத்தை வாங்கிக் கொண்டு வருவான். ரேங்க் வாங் கினால் காமிரா வாங்கித் தருவதாக அப்பா ஆசை காட்டுவார். அந்த நிமிஷத்தில் சவால் விடுவான்! அத்தோடு சரி! பிறகு எதற்கும் அசைய மாட்டான்.

தேர்வுகள் நெருங்கிக் கொண்டிருந்தன. தேர்வு பற்றிய கவலை சிறிதும் இல்லாமல் நண்பர்களுடன் சந்தோஷமாக ஊர் சுற்றிக் கொண்டிருந்தானே தவிர சரவணன் படிக்கவே இல்லை. படித்தால் என்ன? படிக்கா விட்டால் என்ன? நம்மிடம் பணம் இருக் கிறது என்ற தெம்பு அவனுக்கு உறுதியாக இருந்தது.

நாளை தேர்வுகள் ஆரம்பம். பத்தாம் வகுப்பு மாணவர்கள் அனைவரும், முதன் முதலில் அரசாங்கத் தேர்வு எழுதுகிறோமே என்ற பயத்துடனும் டென்ஷ னுடனும் தேர்வுக்கு ஆயத்தமானார்கள். சரவணனு டைய நண்பர்கள் கூட ஊர் சுற்றுவதை விட்டு விட்டு பயம் மேலோங்கப் படிக்க ஆரம்பித்து விட்டனர். அதற் குப் பிறகுதான் சரவணனுக்கும் நாம் படிக்கவேயில் லையே! தேர்வை எப்படிச் சந்திப்பது என்ற பயம் எழுந் தது. அதனால் வேறு வழியின்றி அவசர அவசரமாக ஏதோ படித்தான்.



அனைவரும் முதல் தேர்வு எழுதினர். விரைவில் எல்லாத் தேர்வுகளும் முடிவடைந் தன. சுகுமார் தேர்வு எல்லாவற்றையும் மிகவும் நன்றாக எழுதியிருந்தான். மாவட்ட அளவில் முதலாக வருவோம் என்ற நம்பிக்கை உறுதியாக அவனுக்கு இருந்தது.

சரவணன்தான் படிக்கவே இல்லையே. அதனால் ஏதோ பேருக்கு எழுதியிருந்தான்.

நாட்கள் ஓடின. தேர்வு முடிவுகள் வரும் நாளும் நெருங்க ஆரம்பித்தது. சரவண னுக்கு ஒரு வாரமாகவே ஒரே படபடப்பு.

"நீ மட்டும் இந்தத் தேர்வில் தேறவில்லை என்றால், அந்த சுகுமாரை வளர்த்து மேல் படிப்புப் படிக்கும் பொறுப்பை நானே ஏற்கப் போகிறேன். அவனையே நமது



தொழிற்சாலைக்கு மேனேஜராக ஆக்கப் போகிறேன். நீ அவனிடம் கை கட்டி வேலை பண்ணும்படி இருக்கும்" என்று கூறியிருந்தார் அவன் அப்பா. அவர், கூறியபடி செய்து விடக்கூடியவர். அதனால் சரவணன் பயந்தான்.

"ஏய் குடிசை!" என்று தன்னாலும் தனது நண்பர்களாலும் கேலி செய்யப்பட்ட வக்கற்ற சுகுமார் நன்கு படித்துத் தனது தந்தையின் தொழிற்சாலைக்கே மேனேஜராக வந்து, நாம் அவனிடம் வேலை பார்க்க வேண்டிய நிலை ஏற்பட்டால் எத்தனை பெரிய அவமானம்? அதை நினைக்க நினைக்க சரவணனுக்கு ஒரே கலக்கமாக இருந் தது. இந்த எச்சரிக்கையை அப்பா தேர்வுக்கு முன்பே விடுத்திருந்தால் அவன் கொஞ்சம் கவனமாகவாவது படித்திருப்பான். அப்படிச் செய்யாது, தேர்வுகள் முடிந்த பிறகு, முடிவு வரும் நிலையில் இந்த எச்சரிக்கையை விடுக்கிறாரே!

யாருக்காகவும் காத்திருக்காது தேர்வு முடிவுகள் குறிப்பிட்ட நாளில் செய்தித்தாள்களில் வெளியாயின.

முதல் பக்கத்திலேயே சுகுமார் மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறியிருக்கும் அறிவிப்பு வெளியாகியிருந்தது. சுகுமாருக்கு ஒரே ஆனந்தம். உழைப்புக்கு தந்த அறுவடையல்லவா கிடைத்திருக்கிறது?

சரவணனும் பதட்டத்துடன் தன் எண்ணைத் தேடினான். தேர்ச்சி பெறும் அளவுக்குப் படித்திருந்தால்தானே எண் இருக்கும்? தான் பெயில் என்பது உறுதியாகி விட்டது. அதோடு, மாநிலத்திலேயே முதலாவதாக சுகுமார் தேறி விட்டான். இனி அடுத்து நடக்கப் போவது என்ன?

இப்படி அவமானமடைவதை விடத் தற்கொலை செய்து கொள்வது மேல் என்ற முடிவுக்கு வந்தான் சரவணன். சுகுமார் அவனைத் தேடி வந்தான்.

"சரவணா? நீ என்ன செய்வதாக இருக்கிறாய்? மனதைத் தளர விடாதே. அடுத்த தேர்வுக்குப் பணம் கட்டு. தெரியாததை நான் சொல்லித் தருகிறேன் சரவணா. திட்டம் போட்டுப் படித்தால், வெற்றிக் கனியை நம் கையில் வந்து விழச் செய்யலாம்" என்று நம்பிக்கை ஊட்டினான் சுகுமார்.

"நான் மறுபடி படிக்கிறதா இருந்தா உங்கிட்டே அறிவுரை கேட்கிறேன்" என்று முகத்திலடித்தது போல் கூறி விட்டு விரைந்தான் சரவணன்.


கடற்கரை வந்தது. இருட்டும் வரை படகுக்குப் பின்னால் காத்திருந்து விட்டு அலைகளுக்கு நடுவே தாவினான் சரவணன். நீருக்குள் திக்குமுக்காடினான். நினைவு தப்பியது. அவனுக்கு மறுபடி நினைப்பு வந்த போது கடற்கரை மணலில் கிடந்தான். அருகே சுகுமார்!

"என்ன காரியம் செய்யத் துணிந்து விட்டாய் சரவணா? முயற்சி செய்யாமல் தோல்வியை சந்திக்கத் துணிவில்லாது இப்படித் தற்கொலை செய்து கொள்வது எத்தனை கோழைத்தனம்? இதற்கெல்லாம் தற்கொலை செய்து கொள்வது என்றால் கடலில் விழக்கூட இடமே இருக்காது. இந்த முடிவை மாற்றிக் கொள் சரவணா. நீ மறு படி திட்டம் போட்டுப் படி. தேர்ச்சி பெற்று அப்பாவின் தொழிற்சாலையை விரிவாக்கு. எத்தனையோ நூற்றுக்கணக்கானவர்களுக்கு நீ வேலை தந்து அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்றலாம். இந்த அரிய வாய்ப்பை இழந்து விடாதே!" என்றான் சுகுமார்.

புதிய மனிதனாக நம்பிக்கையுடன் எழுந்தான் சரவணன்.

எல்லாம் தெரியணும்!

குழந்தை எழுத்தாளர் சங்கம், மாநாடு நடத்த ஏற்பாடு செய்திருந்த நேரம். தலைவர் பொறுப்பில் இருந்த குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்கள், மாநாடு தொடர்பாக அலைந்து



கொண்டிருந்தார் சென்னை தேனாம்பேட்டை எல்டாம்ஸ் சாலையில், கவிஞரின் நண்பர் (கவிஞருக்கு உறவினரும் கூட) ஓர் அச்சகம் வைத்திருந்தார். அவரைக் காண்பதற்காகச் சென்றிருந்தோம். நாங்கள் சென்ற போது அச்சக நண்பர் குளித்துக் கொண்டிருந்ததால், வரவேற்பு அறையில் காத்திருந்தோம்.

நண்பரின் எட்டு வயது மகன் வந்து வணக்கம் சொன்னான். பதில் வணக்கம் கூறிய கவிஞர், அவன் பெயர், படிக்கும் வகுப்பு, பாடங்கள், புத்தகங்கள், வாங்கும் ரேங்க் என்று எல்லாவற்றையும் கேட்டு கூச்சம் நிறைந்த அந்தச் சிறுவனை கலகலக்க வைத்துக் கொண்டிருந்தார். கவிஞரின் இரண்டொரு பாடல்களைப் பாடிக் காட்டும் அளவுக்கு அவன் வந்து விட்டான்.

நண்பர் வந்தார். காப்பியும் வந்தது.

"சட்டினி அரைக்க உடைச்சகடலை இல்லே. பையனைப் போய் வாங்கிக்கிட்டு வரச் சொல்லுங்க" - நண்பரின் மனைவி உள்ளே இருந்தபடி கேட்டது காதில் விழுந்தது.

"அவனை அனுப்பாதே. அவனுக்கு இதெல்லாம் எதுவுமே தெரியாது. நானே போறேன்" - நண்பர் பதிலளித்து விட்டு வெளியே வந்தார். "இருங்க. இதோ வந்திடறேன்" என்று எங்களிடம் சொல்லிக் கிளம்பிப் போனார்.

"இருங்க" என்று நண்பரைத் தடுத்த கவிஞர், "கடை எங்கே இருக்கு?" என்று கேட்டார்.

"இங்கே பக்கத்தில்தான். ரெண்டே எட்டில்!"

"ரோடைக் கடக்கணுமா?"

"அதெல்லாம் இல்லே. இப்படியே பிளாட்பாரத்தோட போய் இடது பக்கம் திரும்பினா முக்கில கடை. இதோ வந்திடறேன். இட்லி சாப்பிட்டுப் போகலாம்" - நண்பர் பறக்கத் துடித்தார்!

"கண்டிப்பா இருந்து, இட்லி சாப்பிட்டுப் போறோம். நீங்க இருங்க. பையனை வாங்கிட்டு வரச் சொல்லுங்க."

விருப்பமில்லாமல், அரை மனதுடன்

பையனிடம் காசைக் கொடுத்து அனுப்பினார் நண்பர். பையனை அனுப்பி விட்டு ஏதோ முக்கிய விஷயம் பேசப் போகிறார் கவிஞர் என்று அவர் எண்ணி விட்டார்!

"பையன் போயிட்டாங்க. அவன் கேட்கக் கூடாத சமாச்சாரம் ஏதும் இருக்கா?" - நண்பர் கவலையுடன் கேட்டார்.

கவிஞர் சிரித்தார்.

"என்னங்க! பையனுக்கு எட்டு வயசாச்சு. உடைச்ச கடலை வாங்கக் கூட அவனுக்குத் தெரியாதுன்னு நீங்களே முடிவு பண்ணிக்கிட்டிருந்தால், பையன் கதி என்ன ஆகிறது? ரோடைக் கடந்து கடைக்குப் போகணும்னாலும் யோசிக்கணும். அது கூட இல்லே. பேசினவரை பையன் புத்திசாலிதான். நீங்கள்தான் அவனைக் குறைவா மதிப்புப் போடறீங்க. அவன் படிப்பைத் தவிர ஒன்றுமே தெரியாத கிணற்றுத் தவளையா ஆயிட்டா, அதுக்குக் காரணம் நீங்கதான். குழந்தைகளுக்கு எல்லாம் தெரியணுங்க. அப்பத்தான் அவங்க வருங்காலம் சிறப்பா இருக்கும். பெரியவனானதும் அவன் அச்சகத்தை நிர்வகிக்க வேண்டாமா? திடீர்னு அனுபவமும் திறமையும் வந்திடுமா என்ன? மார்க்கெட்டுக்குப் போகும் போது, கூடவே கூட்டிக்கிட்டுப் போங்க. எல்லாத்தையும் வாங்கத் தெரிஞ்சுக்கணும்."

நண்பர் அசந்து நின்றது தெரிந்தது. "இந்தக் கோணத்தில் இதுவரை பார்த்ததே இல்லீங்க. இப்படி யாருமே சொன்னது கூட இல்லே!" என்றார்.

அடுத்த நாளே நண்பரின் மனமாற்றம் தெரிந்தது. சாதாரணமாக புருப்பை அச்சகப் பையன்தான் எடுத்து வருவான். அன்று நண்பரின் பையனே எடுத்து வந்திருந்தான்!

குழந்தைகளிடம் வேண்டிய திறமை உறங்கிக் கிடக்கிறது. பெரியவர்கள்தான் அதை உணருவதில்லை. அதைப் பயன்படுத்தி அவர்களது திறமையை வளர்க்க முன்வருவதில்லை. படிப்பு மட்டும் போதாது. குடும்பப் பொறுப்புகளிலும் சரி, வெளி நிர்வாக வேலைகளிலும் சரி, குழந்தைகளைப் பழக்குவித்து, அனுபவப்படவைத்துத் திறமைசாலிகளாக்க வேண்டும் என்பது குழந்தைக் கவிஞரின் அசைக்க முடியாத கருத்து. தானே தனது குடும்பத்தில் அதைச் செய்தும் காட்டியிருந்தார்.

- ரே



ஈடில்லாதவர்!

செல்வ மரபில் பிறந்த போதும்
செருக்குச் சிறிதும் அற்றவர்.
நல்ல உள்ளம் தன்னில் நாளும்
நாட்டின் மேன்மை வைத்தவர்.

அடிமைப் பட்டுக் கிடந்த மண்ணின்
விடுத லைக்கே உழைத்தவர்.
குடிகள் மீது அன்பு கூட்டும்
குணத்தைக் கொண்ட உத்தமர்.

இதயத் துள்ளே மனித நட்பை
என்றும் வைத்த அன்னவர்,
முதலில் இந்த நாட்டை ஆண்ட
முடிசூ டாத மன்னவர்.

காந்தி ஜிக்கு வாரி சாகக்
கடமை நாளும் ஆற்றினார்.
சாந்தி பெற்று மனிதர் வாழத்
தக்க வழியைக் காட்டினார்.


எங்கள் நாடு பாரதத்தை
ஏற்ற மோடு மாற்றினார்.
தங்கத் தலைவர் அவரின் பேரைத்
தரணி யோரும் போற்றினார்.

எழுபத் தைந்து வயது வரையில்
இந்த உலகில் இருந்தவர்.
குழந்தை யோடு குழந்தை யாகக்
கூடி யாடி மகிழ்ந்தவர்.

நேரு இந்த நாட்டின் மீது
நேசம் கொண்டு வாழ்ந்தவர்.
யாரும் அவர்க்கு ஈடு இல்லை
என்று சொல்ல வாழ்ந்தவர்.

— கி. கிருஷ்ணமூர்த்தி

சிரிப்...


"ஏண்டா, காய்கறி வாங்க பை எடுத்துக்கிட்டு போகலியா?"
"நீங்க கொடுத்த ஐம்பது ரூபாய்க்கு தக்காளியை மேல் சட்டைப் பையிலயும், உருளையை பேண்ட்டோட வலது பாக்கெட்லயும், கத்திரிக்காயை இடது பாக் கெட்லயும் பச்சை மிளகாயை இரண்டு காதுலயும் செருகிக்கிட்டு வந்துடலாமே!"
— மு. தனகோபாலன்
"தலையில ஒரே மண்ணா இருக்குடா."
"உள்ளேயா, வெளியேவா....?"
— சீர்காழி வி. ரேவதி
"மனிதனா பிறந்ததுக்கு சிவனேன்னு பறவையா பிறந்திருக்கலாம்டா."
"ஜாலியா பறக்கலாம்னா....?"
"ஊஹூம்; பறவைகளுக்கெல்லாம் ஸ்கூல் கிடையாதே!"
— சீர்காழி வி. ரேவதி
"ஏன் நீ இப்பவெல்லாம் புற்றிலேயே தங்கறதில்லே?"
"'புற்று நோய்' வந்திடுமோன்னு பயமாயிருக்கு... அதான்!"
— கே.எல். குமணன்

புவனா தேடிய புதையல்



4. ரவியின் முயற்சி!

டாக்டரை அவருடைய கிளினிக்கில் இறக்கி விட்டு மாமா ரவி, விடைபெற முயன்றார். கிளினிக்கிலேயே மாடியில் டாக்டருடைய வீடு இருந்தது.

"ரவி, அவசரமான வேலை எதுவும் இல்லையென்றால் உள்ளே வாயேன். இருவரும் சாப்பிடலாம். இல்லே, நீ ஏற்கெனவே சாப்பிட்டிருந்தால் என்னோடு பேசிக் கொண்டிரு. புவனா விஷயமாக உனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் எனக்குச் சொல்," என்றார் டாக்டர்.

ரவி மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார். மோட்டார் சைக்கிளை நிறுத்திப் பூட்டி விட்டு டாக்டருடன் மாடிக்குப் போனார்.

புவனாவின் மாமா ரவி துருதுருப்பான இளைஞன். கல்லூரியில் எம்.ஏ. வரலாறு படித்து வந்தார். இது இறுதி ஆண்டு. பண்டைய வரலாறு, நாகரீகம் போன்றவற்றில் இயற்கையாகவே ஆழ்ந்து ஈடுபாடு கொண்ட அவர், புதைபொருள் ஆராய்ச்சியிலும் அளவில்லாத ஆர்வம் கொண்டவர். புவனாவின் அப்பாவுக்கு அலுவலகப் பணிகளே சரியாக இருக்கும். அதனால் வீடு தொடர்பான வெளி வேலைகளை எல்லாம் ரகுதான் கவனித்து வந்தார்.

புவனாவுக்கு மாமாதான் எல்லாம். அப்பா அம்மாவைப் பார்க்காமல் கூட புவனா இருந்து விடுவாள். ஆனால் மாமா ரவியைப் பார்க்காமல் ஒருநாள் கூட அவளால் இருக்க முடியாது. ரவி ஆராய்ச்சி தொடர்பாக வெளியூர் போனால், ஒருநாளைக்கு ஒருமுறையாவது எஸ்டிடி போட்டு அவளுடன் பேசுவார். இல்லாவிட்டால் புவனா அன்று இரவு சாப்பிட மாட்டாள்.

அந்த அளவுக்கு மாமாவின் செல்லமாக இருந்த அவள் இப்படி திடீரென்று மனநோயாளியைப் போல் மாறுவது ரவிக்குத் திகைப்பாக இருந்தது. அதனால் புவனாவின் உடல்நிலை பற்றி டாக்டரிடம் மனம் விட்டுப் பேசி விவாதிக்க அவரே விரும்பினார். எனவே டாக்டரே அழைத்ததும் அந்த அழைப்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார்.

டாக்டர் சாப்பாட்டு மேசையில் உட்கார்ந்து சாப்பிட, அவருக்கு எதிரே குளிர் பானத்தை ருசித்தபடி ரவி உட்கார்ந்து கொண்டார்.

"ஏற்கெனவே புவனாவின் போக்கைப் பற்றி என்னிடம் கூறியிருக்கிறாய். நான் இதெல்லாம் மிகவும் சாதாரணம் என்று

மதிஒளி

எண்ணிக் கொண்டதால் அதையெல்லாம் மனத்தில் ஆழமாக வாங்கிக் கொள்ள வில்லை. இப்போதுதான் அதன் தீவிரம் புரிகிறது. அதனால், புவனாவுக்கு இந்த மயக்கம் எப்படி ஆரம்பித்தது, எப்பொழு தெல்லாம் மயங்குகிறாள் என்பதையெல் லாம் விவரமாக உனக்குத் தெரிந்தவரை எனக்குக் கூறு" என்றார் டாக்டர்.

பிறந்த நாள் கொண்டாட்டத்தில் இருந்து தொடங்கிய ரவி, இப்பொழுது மயக்கமானது வரை தெளிவாகக் கூறினார். அதோடு தனது கண்டு பிடிப்புகளையும் மறைக்கவில்லை.

அவர்கள் பேசிக் கொண்டதையெல் லாம் மறைந்து நின்றபடி இருவர் கேட்டுக் கொண்டிருந்ததை அவர்கள் அறிய வில்லை.

எல்லாவற்றையும் கேட்டு விட்டு யோசித்தபடி சிறிது நேரம் இருந்த டாக்டர், "ரவி, அந்த வீடியோ கேசட்டை நான் பார்க்க வேண்டுமே?" என்று கேட் டார்.

"டாக்டர், எப்பொழுது நீங்கள் நேரம் கிடைத்து அதைப் பார்க்க விரும்புகிறீர் களோ சொல்லுங்கள்; போன் பண்ணுங் கள். நானே கொண்டு வந்து போட்டுக் காட்டுகிறேன்" என்றார் ரவி.

"அதைவிட, அந்த வீடியோ டேப்பை, அப்படியே இன்னொரு பிரதி எடுத்து என் னிடம் கொடுத்து விடேன். எனக்கு எப்போ நேரம் இருக்கிறதோ அப்போ அதை நானே போட்டுப் பார்த்துக் கொள் கிறேன். எதற்காக உன்னைத் தொந்தரவு செய்வது? நீ இதுவரை சொன்னவைகளில் இருந்து புவனாவின் வாழ்க்கையில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. அது என்ன? அதற்கு எப் படி முடிவு காண்பது என்பதையெல் லாம் பற்றி யோசிக்க வேண்டும். அந்த கேசட் டைப் பார்த்த பிறகுதான் உங்களோடு இதைப் பற்றிப் பேச முடியும்."

"நாளை மாலைக்குள் உங்களுக்குக் கேசட் வந்து விடும் டாக்டர்" என்று விடைபெற்றார் ரவி.


அடுத்த ஒரு மணி நேரம் பொறுத்து ரவியே தொலைபேசியில் டாக்டரை அழைத்தார்.

"டாக்டர், ஒரு பிரதி எடுக்கச் சொல்லி இங்கே பார்க் சாலையில் உள்ள விநாயகா வீடியோ சர்வீஸில் கொடுத்திருக்கிறேன். இரண்டு மணி நேரம் பொறுத்துத் தருவ தாகக் கூறியிருக்கிறார்கள்."

"ஓ! விநாயகா வீடியோவா! என் னுடைய வாடிக்கைக்காரர் ஆயிற்றே. நன் றாகத் தெரியும். டேப் வரட்டும். பார்த்து விட்டு உன்னோடு பேசுகிறேன்" என்றார் டாக்டர்.

இரண்டு நாட்கள் ஓடின. டாக்ட ருக்கு இருந்த வேலைத் தொந்தரவில் அவர் இந்த கேசட் விஷயத்தை மறந்தே போய் விட்டார். ரவியிடம் இருந்தும் அழைப்பு வரவில்லை. அதனால், புவனாவுக்கு உடம்பு சரியாக இருக்கிறது. கவலைப்படும் படி ஏதும் நடக்கவில்லை என்பதை அவர் உணர்ந்து கொண்டார். இருந்தாலும் ரவி கேசட்டைக் கொண்டு வந்து கொடுக்காததும், அதைப் பற்றி அவரிடம் போனில் ஒரு முறை கூடக் கேட்காததும் அவருக்கு கண்ணியக் குறைவாகத் தோன்றியது. போன் பண் ணாததற்கு என்ன காரணம் இருக்கும்? ஒருவேளை இன் னொரு பிரதி எடுக்க முடி யாத அளவுக்கு அந்த கேசட் மோசமாக இருக் கிறதோ என்னமோ?

அன்று மாலை விநா யகா வீடியோவின் முத லாளியே வயிற்றை வலிக்கிறது என்று அவ ரிடம் வந்தார். அவ



"கைத்தடியை மறந்துட்டு வந்துட் டேன் சார்!"

"ஸ்கூலுக்கு வர்றப்ப தேவையானதை யெல்லாம் ஒழுங்கா எடுத்திட்டு வர்ற தில்லையா....? நாளைக்கு வரும் போது அப்பாவை அழைச் சிட்டு வாங்க!"

— சீர்காழி வி. ரேவதி



ரைப் பரிசோதித்து விட்டு மருந்தை எழுதிய டாக்டர், "என்ன சார்! ரவி கொடுத்த அந்த கேசட் என்னவாச்சு? பிரதி எடுத்தாச்சா?" என்று கேட்டார்.

விநாயகா அதிர்ந்து போனார்.

"என்ன டாக்டர் இப்படிக் கேட்கிறீர்கள்! அந்த கேசட் ஒரு படுநிராசையான கரைஞ்சு போன கேசட். அதைக் காப்பி பண்ணினா, வீடியோ காப்பியரே பழுதாகி விடும்னு நான்தான் முதல்ல கண்டிச்சு சொன்னேன். பிறகு ரவி, உங்களுக்காகத் தான் அதுன்னு கேட்டார். சரி உங்க சமாசாரம்னா மறுக்க முடியாதேன்னு செய்து தர ஒப்புக்கிட்டேன். அப்புறமா நானே பக்கத்தில் இருந்து ஒரு பிரதி எடுத்தேன். அறுந்து அறுந்து போச்சு. இருந்தாலும் வந்த வரை வரட்டும்னு ஒட்டி ஒட்டிப் போட்டேன். அன்னிக்கு மாலையே உங்க ஆளு ஒருத்தன் வந்து ரெண்டையும் வாங்கிக்கிட்டு வந்திட்டானே?"

"என்னது! என் ஆளா? நான் யாரையும் அனுப்பலையே!"

"என்ன டாக்டர் இது!"

"ஒருவேளை ரவியின் ஆள் உங்க பேரைச் சொல்லி வாங்கிக் கொண்டு போயிருப்பானோ?"

"இருக்கவே வாய்ப்பு இல்லே. ஏன்னா ரவி அடுத்த நாள் போன் பண்ணிக் கேட்டார். நீங்க ஆளை அனுப்பி வாங்கிக்கிட்டுங்கன்னு ரவிகிட்டே சொல்லிட்டேன். நீங்கள்னா, யாரையுமே அனுப்பலேன்னு சொல்றீங்களே?"

"உண்மைதாங்க. நான் யாரையும் அனுப்பலே."

விநாயகா அதிர்ந்து போனார். டாக்டர் திகைத்துப் போனார். உடனே ரவிக்கு போன் பண்ணினார்.

எடுத்ததுமே, "கேசட்டைப் பார்த்தீங்களா டாக்டர்? ஒரிஜினல் ஜாக்கிரதை" என்றார் ரவி.

"என்ன ரவி இது! கேசட் என்னிடம் வரவே இல்லே. என் பேரைச் சொல்லி யாரோ ஏமாத்தி வாங்கிக்கிட்டுப் போயிருக்காங்க. எல்லாமே மர்மத்தின் மேல் மர்மமாக இருக்கே!"

அடுத்த கால் மணியில் ரவி பதை பதைப்புடன் வந்து விட்டார். ஒரிஜினலும் போய் விட்டது என்பதை அறிந்ததும் அவ



ருடைய துக்கம் அதிகமா னது.

"ரவி. புவனாவைச் சுற்றி என்னமோ நடக்கிறது. மிகவும் கவனமாக இருக்க வேண்டும். உடனே போலீசில் புகார் தரு வோம்" என்றார் டாக்டர்.

"கொடுத்து வைப்போம். ஆனால் அத னால் பயன் ஏதும் இருக்கும் என்று சொல்ல முடியாது. அந்தத் தேய்ந்த கேசட் டில் ஏதோ மர்மம் இருக்கு. இல்லா விட்டால் அதை இப்படி வாங்கிக் கொண்டு போயிருப்பார்களா?"


"நமக்கு அவர்களை யாரென்று தெரி யாது. ஆனால் அவர்களுக்கு நமது நட வடிக்கை எல்லாம் தெரிந்திருக்கிறது."

"ஆமாம். இனிமேல் புவனாவின் உடம் பைப் பற்றியோ இந்த கேசட்டைப் பற்றிய நடவடிக்கை களையோ நாம் இரகசியமா வைத்துக் கொள்ள வேண்டும்."

"கேசட்டை ஒருமுறை பார்க்கக் கூட முடியாமல் போய் விட்டதே!" என்று வருந் திய டாக்டர், "அதைப் பார்த்திருந்தால் அது எந்த ஊரில் இருக்கும் மாளிகை என் பதைக் கண்டுபிடித்திருப்பேன். நான் வடக்கே படித்தவன். பல நகரங்களுக்கும் போனவன்" என்றார்.

"டாக்டர், முதலில் கேசட்டைப் பிரதி எடுத்துப் போட்ட போது, டேப்புகள் அறுந்து துண்டு துண்டாக விழுந்தன. அறுந்த துண்டுகள் எல்லாம் பத்திரமாக இருக்கலாம். இருந்தால் அவைகளை ஒட்டித் தருகிறேன்" என்று எழுந்தார் விநா யகா.

ஒரு மணி நேரத்தில் விநாயகாவிடம்



இருந்து பதில் வந்து விட்டது. இருந்தவரை துண்டுகளை ஒட்டி டேப்பை தயார் பண்ணியிருப்பதாகவும், எப்பொழுது வேண்டுமானாலும் வந்து பார்க்கலாம் என்றும் கூறினார்.


இருவரும் விரைந்தனர். கம்பெனி வி.சி. ஆரிலேயே டேப்பைப் போட்டார்கள். ஒரிஜினல் கேசட்டே சரியாக இல்லை. இதுவோ அதிலிருந்து பிரதி எடுத்த துண்டுகளின் ஒட்டல். எப்படி இருக்கும்? இருந்தாலும் ரவி ஏற்கெனவே பலமுறை பார்த்து விட்டிருந்ததால் புரிந்தது. டாக்டருக்கு விளக்கிக் கொண்டே வந்தார்.

"ரவி, பாண்டிய மன்னர்களுக்குக் கயல், சோழர்களுக்குப் புலி, சேரர்களுக்கு வில் என்று சின்னங்கள் இருந்த மாதிரி, எல்லா மன்னர்களுக்கும், ஜமீன்தார்களுக்கும் சின்னங்கள் உண்டு. அதை அவர்களுடைய மாளிகைத் தூண்கள், அலங்காரப் பொருள்களில் பொறித்திருப்பார்கள். அந்த மாதிரி எங்கேயாவது இதில் ஏதாவது சின்னம் தெரிகிறதா என்று பார்?" என்றார் டாக்டர். டேப்பை நிறுத்தி நிறுத்தி, ஸ்டில்லாக நிற்க வைத்து கூர்ந்து இருவரும் கவனித்தார்கள்.

எதுவுமே கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்குள் டாக்டருக்கு இரண்டு முறை அவசர தொலைபேசி அழைப்பு வந்து விட்டது.

நம்பிக்கை இழந்து சோர்வடைந்த நிலையில் வீடியோ திரையில் ரவியின் கண்களில் ஒரு பெரிய தட்டுபட்டது. அதன் நடுவில் ஏதோ பறவை போலத் தெரிந்தது. பரபரப்புடன் ஸ்டில்லில் போட்டுப் பார்த்தார். அன்னப் பறவைச் சின்னம் அதன் நடுவில் இலேசாகப் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டுபிடித்தார். டாக்டருக்கு ஒரே மகிழ்ச்சி. மறுபடி கேசட்டைப் போட்டுப் போட்டுப் பார்த்தார்! அதே சின்னம் பல இடங்களில் இருப்பதை இருவரும் கண்டுபிடித்தனர். உருவம் சிதைந்து இருந்தாலும், அவை எல்லாமே அன்னப் பறவைதான் என்பதை உறுதியாக முடிவு செய்ய முடிந்தது. பூக் கூடை, குடம், தொங்கும் விளக்குகள், ஊஞ்சல் பலகை, தூண்டா விளக்கின் கைப்பிடி போன்ற பலவற்றிலும் அன்னம் இருப்பதை இருவராலும் காண முடிந்தது.

"ரவி, நமது கண்டுபிடிப்பை யாரிடமும் தெரிவிக்க வேண்டாம். கேசட்டை என்னிடம் தந்திருப்பதாக புவனாவின் பெற்றோரிடம் சொல்லிக் கொள்" என்றார்



பெட்ரோல் மரம்

எகிப்து நாட்டிலுள்ள ஒரு சமுரி சில மாதங்களுக்கு முன், பாலைவனத்தின் மத்தியில் ஒரு அதிசய மரத்தைக் கண்டு பிடித்தார். மரத்தின் உயரம் 3.5 மீட்டர் தான். இருந்தாலும் அம்மரத்தின் வித்தில் 40 சதவீதம் கிரோசின் எண்ணெய் இருந்தது! அது மட்டுமல்லாமல் 20 சதவீதம் கொழுப்புக் கலந்த அமிலமும் காணப்பட்டது. எனவே, இது ஒரு சிறந்த எரிபொருள் என்பதில் சந்தேகமில்லை.

எகிப்திய அரசு பெரும் அளவில் இந்த மரத்தைப் பயிர் செய்யத் திட்டம் போட்டிருப்பது கொஞ்சமும் ஆச்சரியமில்லை. கிரோசின் எண்ணெயையும், கொழுப்பையும் தவிர இந்த மரத்தில் ஒரு வகைத திரவச் சத்தும் உள்ளது. இதை சமையலுக்குப் பயன்படுத்த முடியாது. ஆனால், இது பெட்ரோலுக்கும், நிலக்கரிக்கும் பதிலாக எரிபொருளாகப் பயன்படக் கூடியது!

உடனடியாக; ஆயிரம் ஏக்கர் நிலத்தில், இம்மரத்தைப் பயிர் செய்யும் படி, எகிப்து அரசு தனது பணியாளிகளுக்கு உத்தரவு இட்டிருக்கிறது!

ஜா.ராஜ்

டாக்டர்.

டாக்டர் தந்த அறிவுரைப்படியே அடுத்த நாள் ரவி பழைய புராதனக் கலைப் பொருள்கள் விற்கும் கடைகளைத் தேடிச் சென்றார். ஏதோ குருட்டுத்தனமாக எந்த இலக்கும் இல்லாமல் எல்லாப் பழைய பொருள்களையும் கூர்ந்து கூர்ந்து பார்த்தார். ரவி தேடி வந்த அன்னப்பறவைச் சின்னம் எந்தப் பொருளிலும் இருக்கவில்லை.

அலுத்துச் சோர்ந்து நம்பிக்கை இழந்த நிலையில், அவனது தவிப்பைக் கண்ட கடை மேனேஜர், "ஏதாவது குறிப்பிட்ட பொருள் இருக்கான்னு தேடறீங்களா? ரொம்ப நேரமா பார்க்கிறேன். நீங்க தேடறது கிடைக்கலியா?" என்று பரிவுடன் விசாரித்தார்.

உண்மையைக் கூறி விரும்பாததால், "அன்னம் சின்னமாகப் பொறித்த பண்டைய கலைப்பொருள்களை நான் சேர்த்து வருகிறேன் சார். இங்கே அந்த மாதிரி உங்ககிட்ட எதுவுமே இல்லையா?" என்று கேட்டார் ரவி.

"எங்கிட்ட இல்லேன்னா என்ன? நான் ஒரு முகவரி தரேன். ராஜாக்கள் காலத்துக் கலைப்பொருள்கள் எல்லாம் அங்கே கிடைக்கும். ஆனால் வெளியூர். அங்கே நீங்க தேடும் பொருள் கிடைக்கலேன்னா இந்தியாவில் வேற எங்கேயுமே கிடைக்க வாய்ப்பில்லே" என்று ஒரு முகவரியைக் கொடுத்தார் கடை மேனேஜர். அது புதுக்கோட்டை முகவரி. அவருக்கு நன்றி கூறி விட்டு டாக்டரிடம் கூறி யோசனை கேட்டார் ரவி.

"அந்தச் சின்னம் பொறித்த ஒரு பொருள் நம்ம கைக்கு வந்து விட்டால் கூடப் போதும். அதை ஆராய்ச்சியாளர்களிடம் காட்டி அது எந்த மாநிலம், எந்த மாவட்டத்தைச் சேர்ந்தது என்று கண்டு பிடித்து, புவனாவை அங்கே அழைத்துக் கொண்டு போகலாம்" என்று கூறிய டாக்டர், ரவியைப் புதுக்கோட்டைக்குக் கிளம்பும்படி ஆலோசனை கூறினார்.

ரவி அன்று இரவே பஸ் பிடித்து புதுக் கோட்டைக்குக் கிளம்பினார்.

புதுக்கோட்டையில் அந்த முகவரியில் யாருமே இல்லை. வேறு ஏதோ இடத்திற்கு மாற்றிக் கொண்டு போய் விட்டதாகக் கூறி விட்டார்கள். சரியான முகவரி கிடைக்க

எழு தம்பி!


சாய்ந்து... சரிந்து... அமராதே
சலுகை கேட்டுப் பழகாதே
ஓய்ந்து கிடக்க நினையாதே
உதவி கேட்டே குனியாதே!

முடியாதென்று முடங்காதே
முயற்சி செய்யத் தயங்காதே
கெட்டோம் என்று துடிக்காதே
கெடுத்தார் என்று வெடிக்காதே!

மலையும் வளையும் உழைப்பாலே
மனமே எல்லாம் மறக்காதே
அலைபோல் தொடர்ந்து சிந்திப்பாய்
அறிவே துணையாய் முந்திப் போ!

உன்னால் முடியும் எழு, தம்பி!
உலகே இருக்கு உனை நம்பி!
மின்னல் கீற்றோ? நீயில்லை!
மேலெழு சூரிய ஒளிப்பிள்ளை!

- அரிமதி தென்னகன்




வில்லை. கீழ ராஜவீதி, மேல ராஜவீதி என்று அலைந்து விசாரித்துப் பார்த்தார். பயனில்லை. கடைசியாக சாந்தரம்மன் கோவில் அருகில் வந்து சேர்ந்தார். மனம் களைத்துப் போயிற்று. பல்லவன் குளத்தில் இறங்கி கை, கால் கழுவி, முகத்தில் நீரை வாரி இறைத்துக் கொண்டார். கொஞ்சம் புத்துணர்வு வந்தது போல் உணர்ந்தார். சாமியைத் தரிசித்து விட்டுத் திரும்பும் போது, சட்டென்று ஏதோ தோன்றியது. கோவில் குருக்களிடம் முகவரியைக் காட்டி விஷயத்தைக் கூறிக் கேட்டுப் பார்த்தார்.

"இதோ... இந்தப் பக்கத்துச் சந்துதான். இரா. வே. லட்சுமணன் என்று பழைய புராதனக் கலைப் பொருள் கடை.. அவர் கிட்ட இல்லாத புராதன கலைப் பொருள்களே இருக்காது" என்று கைகாட்டி உற்சாகப்படுத்தினார் குருக்கள்.

எளிதில் கடையைக் கண்டுபிடிக்க முடிந்தது. அது கடை மாதிரியே இல்லை. பெரிய மாளிகைதான். நெற்றியில் விபூதி பட்டையோடு கடையின் உரிமையாளர் லட்சுமணனே கம்பீரமாக சோபாவில் அமர்ந்திருந்தார். வரவேற்றார். அவர் அனுமதியுடன் கடையில் ரவி வெகு நேரம் அங்கே இருந்து பொருள்களைப் பார்த்து வியந்தார். அதிகமாக அயல்நாட்டினர் கூட்டம்தான். ஒரு மணி நேரத்துக்கு மேலாக முயன்றும் அவர் தேடி வந்த பொருள் கிடைக்கவில்லை.

"தம்பி... ரொம்ப நேரமா தேடறீங்களே! உங்களுக்கு என்னவிதமான பொருள் வேணும்னு சொல்லுங்களேன்?" என்றார் லட்சுமணன். அவர் கேட்கவும், ரவியின் கண்களில் அன்னப்பறவை சின்னம் சிக்கவும் சரியாக இருந்தது. பாசி ஏறிய இரண்டு பாவை விளக்குகளில் அந்த அன்ன சின்னம் இருந்தது.

"சார்... அந்தப் பாவை விளக்குகளைப் பார்க்கலாமா?" என்று கேட்டார் ரவி அடக்க முடியாத ஆவலுடன். விளக்குகளில் ஒன்றை நகர்த்திக் காண்பித்த லட்சுமணன், "தம்பி... இந்த விளக்குகளைப் பாருங்க. நான் தடுக்கலே. ஆனா, இவைகளை விலைக்கு மட்டும் கேட்டுடாதீங்க. இதே போல வேற பாவை விளக்கு வேணுமானா தரேன். ஏன்னா இந்த விளக்குகள்



"பிள்ளையாரப்பா.. எப்படியாவது பாஸ் பண்ண வைச்சிடு. 108 ஸ்பூன் பால் தரேன்!"

— மேலப்பாதிநாகராஜன்

"இந்த பிள்ளையாருக்கு மட்டும் தொந்தி ரொம்ப பெரிசா இருக்கே, ஏன்டா?"

"பாலை அதிகமா குடிச்சிருப்பார்!"

— சீர்காழி வி. ரேவதி



"ஏன்டா! பிள்ளையாருக்கு கூடம் ஏத்தாம போறே?"

"அட போடா... எனக்கு கொடுக்குற பாலையெல்லாம் எங்க அம்மா பிள்ளையாருக்கே கொடுத்துடுறாங்க... அதுதான் அவர் மேல கோபம்!"

— நெத்குப்பை கி. மனோகரன்



எங்க தாத்தா காலத்துலேயிருந்து எங்களிடம் இருக்கும் கலைப் பொருள். இது மட்டும் விலைக்கு இல்லை. காட்சிக்குத் தான். எங்க தாத்தா இதை ரொம்பப் பிரியமா வைத்திருந்தார். எங்க அப்பாவும் இதை விற்க விரும்பலே. நானும் இதை விற்கப் பிரியப்படலே தம்பி" என்றார்.

அதை வாங்கிதான் ஆக வேண்டும் என்று ரவியும் எண்ணவில்லை.

எந்த ஊர் கலைப் பொருள் அது என்பதுதானே அவருக்குத் தெரிய வேண்டும்? லட்சுமணனிடமே பேசினால் அதைத் தெரிந்து கொள்ளலாம்.

"பரவாயில்லை சார்... விலைக்கு இல்லைன்னா, உங்களை வற்புறுத்த மாட்டேன். இந்த அழகான விளக்குகள் எந்த ஊரைச் சேர்ந்தவை? அங்கே போனா இந்த மாதிரி விளக்குகளைப் புதிதாகவே வாங்கலாம் அல்லவா?" என்று கேட்டார்.

சற்று நேரம் யோசித்தார் லட்சுமணன். "ராஜஸ்தான் மாநிலத்தில் ராம்தம்பூர்ங்கிற ஊர்லேருந்துதான் இந்த விளக்குகளை எங்க தாத்தா வாங்கிட்டு வந்ததா அப்பா கூறியிருக்கிறார். தம்பி... ஆனால் இப்போ அங்கே போனா இது போல விளக்கு கிடைக்குமாங்கறது சந்தேகம்தான்... இது ஏதோ ஒரு அரண்மனையைச் சேர்ந்த விளக்குன்னு நினைக்கிறேன்..."

அப்பாடி! எந்தச் செய்தியைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ரவி வந்தாரோ அந்தச் செய்தி ஒரு வழியாகக் கிடைத்தே விட்டது! அலைந்தாலும், திரிந்தாலும், முடிவில் முயற்சிக்குப் பலன் கிடைத்து விடும் போது அதில் கிடைக்கும் மகிழ்ச்சி இருக்கிறதே அது, அனுபவித்தவர்களுக்கே தெரியும்.

லட்சுமணனுக்கு நன்றி கூறிவிட்டு ரவி அடுத்த பஸ்ஸிலேயே கிளம்பிச் சென்னை வந்து சேர்ந்தார். புவனாவின் பெற்றோரிடம் தனது கண்டுபிடிப்பைப் பற்றி ரவி ஏதும் கூறவில்லை. கிளினிக் மூடும் நேரம் வரை காத்திருந்து டாக்டரிடம் பேசினார். இருவரும் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அவர்கள் பேசி முடிவெடுத்ததை 'அந்த இருவரும்' கண்காணித்துக் கொண்டிருந்தனர்!

(தொடரும்)

நமது தேசம்!

தேசப் படத்தைப் பிரித்திடுவாய்!
தெளிந்த அறிவைப் பெற்றிடுவாய்!
பேசும் மொழியில் பிரிந்தாலும்
பிரிவினை உண்டோ இந்நிலத்தில்!


குமரித் தாயின் பாதம் முதல்
குளிரும் காஷ்மீர் உச்சிவரை
நமது தேசம் விரிந்திருக்கும்
நதியும் மலையும் பலஇருக்கும்!

வான்வழி தரைவழி கடல்வழியில்
வரவும் போகவும் தடையில்லை!
உணவும் உடையும் மாறிடினும்
ஒன்றே நாடென்று உணர்ந்திடுவோம்!

-கு.சரவணன், ஆட்டையாம்பட்டி.



சப்பரம்



பாரு தம்பி அங்கே
பக்தர் சுமக்கும் சப்பரம்
ஊரு கூடித் தூக்கியே
அம்மன் வரும் ஊர்வலம்

ஒற்று மையின் வலிமையை
உணர வைக்கும் சப்பரம்
சுற்றம் சூழ நண்பர்கள்
சேர்ந்து இழுக்கும் சப்பரம்

பாட்டும் கூத்தும் வாடிக்கை
பார்க்க வாண வேடிக்கை
கேட்டுப் பார்த்து மகிழுங்க
கிளம்பி வந்து பாருங்கள்!

கு.காளிமுத்து வல்லம்


உடற் பயிற்சி

உடற் பயிற்சி செய்திட்டால்
உடலும் உறுதி யாகிடுமே
உடலும் உறுதி யானாலே
உலகில் நெடுநாள் வாழ்ந்திடலாம்

காலை மாலை தவறாமல்
கவனத்துடனே உடற் பயிற்சி
காலமெல்லாம் பழகிட்டால்
கனிப்பாய் நாமும் வாழ்ந்திடலாம்

இளமையான வயது முதல்
இனிதாய் பயிற்சி செய்துவரின்
வலிமையான உடலோடு
வாழ்ந்து சாதனை புரிந்திடலாம்!

- பாத்திமா மின்சா மன்சீர், கொழும்பு-10



சாத்பீட்கீத்!


இதென்னது! சாட்பூட் த்ரீ போட்டு விளையாட்டை ஆரம்பிக்கிற மாதிரி இருக்கே என்கிறீர்களா? இதற்கும் விளையாட்டுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. சாதீக் அலி, பீட்டர், கீதா – இந்த மூவரும் ஒரே பள்ளியில், அதுவும் ஒரே வகுப்பில் படிப்பவர்கள். அது மட்டுமல்ல. மூவருமே மணிக்கூண்டுத் தெருவில் வசிப்பவர்கள். வகுப்பில் எல்லாப் பாடங்களிலும் முதல் மூன்று ரேங்க் இவர்களுக்குள்தான் இருக்கும். விளையாட்டுப் பந்தயங்கள், பேச்சு, கட்டுரைப் போட்டி எல்லாவற்றிலும் இவர்கள்தான் முன்னணியில் நிற்பார்கள். வசதியான குடும்பத்துக் குழந்தைகள். மூவருக்கும் வால் இல்லாத குறை ஒன்றுதான் பாக்கி! பள்ளியிலும் சரி, வீட்டிலும் சரி தாங்கமுடியாத விஷமம். ஆனால், மனித நேயமில்லாத எந்த ஒருசெயலையும் அவர்கள் செய்வதே இல்லை. நண்பர்கள் இவர்கள் மூவரையும் குறிக்க வைத்த செல்லப் பெயர்தான் 'சாத்பீட்கீத்!' யாராக இருந்தாலும் சரி, துன்பப்படுகிறார்கள் என்று தெரிந்தால் முதலில் உதவிக்கரம் நீட்டுவது சாத்பீட் கீத்தாகத்தான் இருக்கும். இவர்கள் இனி அடிக்கடி உங்களையெல்லாம் சந்தித்து திகைக்க வைத்து; சிந்திக்க வைத்து; சிரிக்க வைத்து; அதிர்ச்சி அடைய வைத்து மகிழ்விக்கப் போகிறார்கள்.







சின்னபாபு



வள்ளி வீட்டு வைரம்!

வகுப்பில் எப்பொழுதும் கலகலவென்று பேசிப் பழகும் வள்ளி சோக சித்திரமாக இருப்பது போல் கிதாவுக்குத் தோன்றியது.

"பீட்டர், வள்ளியைக் கவனிச்சியா? என்னவோ மாறுதலா இல்லே?"


"ஆமாம்! வழக்கமான கலகலப்பே இல்லையே!"

"என்னவோ அழுது வீங்கின மாதிரி எனக்கும் தோணுது" என்று கூறிய சாதிக் "அவ அக்காவுக்குத் திருமணம் நிச்சயமாயிருக்குன்னு போன வாரம் சொன்னா. கடைக்கு வா. நல்ல திருமண அழைப்பிதழாகப் பார்த்துத் தரேன். சலுகை விலையில் தரச் சொல்றேன். வேறு என்ன உதவி வேணுமானாலும் கேள்னு சொன்னேன். இப்படி அழுத முகத்தோட வந்திருக்காளே! என்ன ஆச்சுன்னு தெரியலையே!" என்றான்.

"ஏ சாட்பீட்கித்! என்ன தொண தொணப்பு அங்கே? வகுப்பில பாடத்தை கவனிங்க. பேச்சு, கதை, ஊர், அக்கப் போர் எல்லாத்தையும் இடைவேளைல வைச்சுக்குங்க" என்று ஆசிரியர் கண்டிக்கவும் மூவரும் பேசாமல் பாடத்தைக் கவனித்தனர்.

அந்த வகுப்பு முடிந்தது. இடைவேளை. டிபன் பாக்சைத் தூக்கிக் கொண்டு மாணவ மாணவியர் மரத்தடிக்கும், டிபன் அறைக்கும் ஓடினார்கள். வள்ளியை சாத் பீட்கித் முற்றுகை இட்டனர்.

"கித், எனக்கு வகுப்பில் பாடமே ஓடலே. அக்காவின் திருமணத்துக்காக வைர நெளி மோதிரம் ஏற்பாடு பண்ணியிருந்தாங்க. வைரம் எங்ககிட்டத்தான் இருந்தது. மோதிரம் மட்டும் பண்ணி எடுத்துக்கிட்டு வந்ததும் வைரத்தை எங்க வீட்டுலயே பதிச்சுக் கட்டித் தர ஏற்பாடு செய்திருந்தாங்க. நேற்று காலையே நெளிமோதிரம் வந்திடுத்து. இன்னிக்கு



நல்ல நாள். அதனால், இன்னிக்கு ஏழு மணிக்கு மேல் வைரம் கட்ட அம்மா வரச் சொல்லி இருந்தாங்க. இன்னிக்குக் காலையிலதான் அம்மா வைரத்தை பீரோக்குள்ளிருந்து மேஜை மேல் பொட்டலத்துடன் எடுத்து வைச்சாங்க. அந்தச் சமயம் பார்த்து போன் வந்தது. போய்ப் பேசிட்டுத் திரும்பி வந்து பார்த்தால், வைரத்தைக் காணோம்!"

சாட்பீட்கித், வள்ளி தொடரப் போவதை எதிர்பார்த்து ஆவலாகக் காத்திருந்தனர்.

"வேலைக்காரி தாயம்மாதான் அறையைப் பெருக்கி இருக்கிறாள். வேறு யாருமே புதுசா உள்ளே வரவும் இல்லே. வெளியே போகவும் இல்லே. வைரம் இருந்த பொட்டலத்தைத் தான்பெருக்கும் போது மேஜை மேல் பார்த்ததாக தாயம்மா கூறுகிறாள். தான் எடுக்கவில்லை என்று சத்தியம் பண்ணுகிறாள். அவள் முப்பது ஆண்டுகளுக்கு மேல் எங்கள் வீட்டில் வேலை பார்த்து வருபவள். அவள் மேல் சந்தேகம் வர நியாயமே இல்லை. ஆனாலும் இப்படி ஒரு நிலை ஏற்பட்ட பிறகு, அவள் வீட்டுக்கே போக விரும்பவில்லை. அம்மா அவளையும் சோதனை போட்டு விட்டாள்."

"பேசாம போலீஸிலே புகார் தந்து விடலாமே?" என்றான் பீட்டர்.

"அந்த வைரம், மாப்பிள்ளை வீட்டார் தந்தது. ரொம்பவும் ஆகி வந்த ராசியான வைரமாம். அதைக் காணவில்லை என்பது அவர்கள் காதுக்கு எட்டினால், வைரம் தொலைந்ததை அபசகுனமாக எண்ணிக் கொண்டு, இந்த சம்பந்தமே வேண்டாம் என்று கூறி விடுவார்களோ என்று அப்பாவும் அம்மாவும் பயப்படுகிறார்கள். அதனால்தான் போலீசில் புகார் பண்ணவில்லை."

"சரி போலீஸ் வேண்டாம். அடுத்த நடவடிக்கை என்ன?" என்றாள் கீதா.

"யாரோ குறிசொல்றவனிடம் கேட்கப் போறாங்களாம். அவனைத் தேடிப் போயிருக்காங்க. அதோட பிரைவேட் இன்டெலிஜன்சுக்கும் தெரிவிச்சிருக்காங்க."

"நாங்க மூணு பேரும் வந்து உங்க வீட்டைப் பார்க்க அனுமதிப்பாங்களா?" என்று கேட்டான் பீட்டர்.

"நான் சொல்றேன். அனுமதிப்பாங்க"



என்றாள் வள்ளி. அவளைத் தொடர்ந்து சாட்பீட்கித் மூவரும் கிளம்பினர். பீட்டரின் சைக்கிளில் கீதாவும், சாதிக்கின் சைக்கிளில் வள்ளியும் கேரியரில் உட்கார்ந்து கொண்டனர்.

வள்ளியின் வீடு சிறிய வீடுதான். புதிதாக அமைந்திருந்த குடியிருப்பு அது. வாசலிலேயே வள்ளியின் பெற்றோர் இருந்தனர். கூடவே கலங்கிய முகத்துடன் வள்ளியின் அக்கா. உள்ளே ஒரு வயதான கிழவி – அவள்தான் வேலைக்காரி தாயம்மாவாக இருக்க வேண்டும்.

வள்ளி, சாட்பீட்கித்தை அப்பாவுக்கு அறிமுகப்படுத்தினாள்.

"போன் பண்ணியிருக்கிறோம். பிரைவேட் இன்டெலிஜென்ஸ்காரர்கள் யாரும் இன்னும் வரவில்லை. வரும் நேரம் தான். எந்தப் பொருளையும் யாரும் தொடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். யாரையும் புதிதாக உள்ளே வர விடாதீர்கள். யாரும் வெளியே போகவும் வேண்டாம் என்று

கூறியிருக்கிறார்கள். அதுதான் தாயம்மாவைக் கூட வீட்டுக்கு அனுப்பலே. எதையும் தொடாமல் நீங்கள் பார்ப்பதை நான் தடுக்கவில்லை" என்றார் அப்பா.

மூவரும் கவனமாக உள்ளே போனார்கள். எதையும் தொடவில்லை.

"இதுதான் வைரத்தைப் பொட்டலத்துடன் வைத்த மேஜை."

"வைரம் எந்த அளவு இருக்கும்? பொட்டலம் எத்தனை பெரிசு இருக்கும்?" என்று கேட்டான் சாதிக்.

"வைரம் உடைத்த உளுத்தம் பருப்பு அளவுக்கு இருக்கும். பொட்டலம் மெல்லிய காத்தாடிக் காகிதத்தில், கட்டை விரல் அளவுக்கு இருக்கும்."

"காகிதம் என்ன கலர்?" - கீதா கேட்டாள்.

"நல்ல வாடாமல்லி மலரின் கலர்."

பீட்டர் தாயம்மாவை விசாரித்தான்.

"தம்பி. நான் கூட்டின குப்பையை இன்னும் வெளியே கூடக் கொட்டலைப்பா. இதோ பார்" - மூலையைக் காட்டினாள் தாயம்மா.

எரிந்த கொசுவத்திச் சாம்பல், கிழிக்கப்பட்ட தினக் காலண்டர்தாள், எல்லாம் நிறைந்த தூசுக் குப்பை. அதற்கு மேல் துடைப்பம் சாத்தி வைக்கப்பட்டிருந்தது.

கீதா, தாயம்மாவைப் பற்றி வள்ளியின் அம்மாவைத் தனியே அழைத்துக் கேட்டாள்.

"ரொம்ப நல்லவள். ஆனால் இப்போ இவள் பேரன் அடிக்கடி குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுகிறான். அதனால் பணப் பற்றாக்குறை. அடிக்கடி கடன் கேட்பாள். ஆனால் நம்பகமானவள்."

"இந்த அறையில் ஏதாவது புதிதாக மாற்றம் ஏதாவது தெரிகிறதா? அதை உங்களால் மட்டுமே கவனித்துச் சொல்ல முடியும்" என்று கேட்டான் பீட்டர்.

"இல்லையே! எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையே!" என்றனர் வள்ளியின் பெற்றோர். அதையே ஆமோதித்தனர் வள்ளியும் அக்கா சுசீலாவும்.

சாதிக்கும் பீட்டரும் ஒவ்வொரு பொருளாகப் பார்த்துக் கொண்டே வந்தனர். கீதாவும் பார்த்து வந்தாள்.

மூலையில் இருந்த குப்பையோடு சாத்தி வைக்கப்பட்டிருந்த தென்னந் துடைப்பத்தை மூவரும் ஒரே நேரத்தில் கவனித்தனர்.

துடைப்பத்தில், பிடிக்கும் இடத்தில் பழைய சணல் கயிறுக்கட்டு. அதற்கும் மேல் இரட்டை வண்ண மணிக்கயறுக் கட்டு!

"எதுக்கு இதில் ரெண்டு கட்டு?" - கீதாதான் கேட்டாள்.

"பழைய சணல் கயிறு நைந்து போச்சும்மா. கட்டு நெளிஞ்சது. ஏதோ ஒரு திருமண தாம்பூலப் பைல, மேலே சுருக்கிப் போட்டிருந்த மணிக் கயிறை எடுத்து நான்தாம்மா அதுக்கு மேலே போட்டு இறுக்கிக் கட்டினேன்" என்றாள் தாயம்மா.

தாயம்மாவின் குரலில் புதிதாக நடுக்கம் இருப்பதை மூவரும் உணர்ந்தனர்.

"எப்போ கட்டினீங்க?"

"இன்னிக்குக் காலைலதான்" - தாயம்மாவின் குரலில் ஏக நடுக்கம் இப்பொழுது!

"நாங்கள் அந்தத் துடைப்பத்தைப் பார்க்கலாமா அங்கிள்?" என்று கேட்டான் சாதிக்.

"தாராளமா பாருங்கள்!"


பீட்டர் அதை எடுத்துத்தர, கீதா மேஜை மேல் வைத்து மெதுவாக இரண்டு கட்டுகளையும் அவிழ்த்துப் பார்த்தாள். இரண்டு கட்டுகளுக்கும் இடையே கட்டை விரல் அளவு வாடாமல்லிப் பூவின் வண்ணத்தில், காத்தாடிக் காகி தப் பொட்டலம்!

"என்னை மன்னிச்சிடுங்க. பேரன் வாங்கி விட்ட கடனைத் தீர்க்க நான்தான் முதல் தடவையா திருடினேன். அகப்பட்டுக்கிட்டேன்" - தாயம்மா குளறியபடி மயக்கமடைந்தாள்.

திருமணத்தன்று சாப்பாட்டுக்கீத்தை உட்கார வைத்துத் தன் கையால் பரிமாறி நன்றிப்பெருக்கைக் காட்டினாள் வள்ளியின் அக்கா சுசீலா.

"ஒரே சட்டையை எத்தனை காலமா போட்டிருக்கே! சீக்கிரம் உரிச்சுத் தொலை!"

- பாளை. பசும்பொன்





★ 'காந்திக்கு ஒரு காட்சியகம்' கட்டுரை, ''மதுரை மீனாக்ஷி ஆலயத்தை தீண்டாதவர்களுக்குத் திறந்து வைத்தவர் காந்திதான்'' என்று பொருள் படும்படி உள்ளது. 1939ஆம் ஆண்டிலேயே மதுரை ஆலயம் தீண்டாதவர்களுக்கும் திறந்து வைக்கப்பட்டு விட்டது. இதற்குத் தலைமை ஏற்றவர் விடுதலை வீரர் மதுரை வைத்தியநாத அய்யர். இதற்குப் பிறகே 1946 ஆம் ஆண்டில் காந்தியடிகள் இந்த ஆலயத்திற்கு வருகை தந்தார். - எஸ் திருமலை, மேனேஜர், காந்தி மியூசியம்.

★ ''காந்திக்கு ஒரு காட்சியகம்'' கட்டுரை எழுதிய என் பெயரை தவறாகப் போட்டு விட்டீர்களே! - விஜயா கண்ணன், மதுரை.
(தவறுக்கு வருந்துகிறோம் - ஆர்.)

★ எங்கள் ஊரில் உள்ள காந்தி மியூசியம் இத்தனை சிறப்பானதா! எங்களுக்கே தெரியாதே. முதலில் அதைப் பார்த்து விட்டுத்தான் மறுவேலை! - பசுமலை சின்னத்தம்பி, கோடை கி. முத்துவேல், சொக்கிகுளம் வா. ராசாத்தி, நன்செய் இடையார் த. குணசேகரன்.

★ மரகதச் சிலை இதற்குள் முடிந்துவிட்டதே என்று ஏக்கமாக இருக்கிறது! - திருமங்கலம் தா. பாப்பம்மாள், சடைகாத்தான் நா. பெரியநாயகம், நன்செய் இடையார் குணா, விசலூர் வி.வி. கிருஷ்ணன், பொட்டலூரணி க. சங்கரநாராயணன், காவேரிப்பட்டணம் கே. சோமசேகர், ஆரணி ப. ஞானமூர்த்தி, மற்றும் பலர்.

★ 'விட்டுக் கொடுக்கா வித்தகர்!' நெ. சி. தெய்வசிகாமணியின் அருமை பெருமைகளை உணர வைத்தது! வித்தியாசமான கட்டுரை! - காசிமேடு தா. சூசைபாலன், திமிறி க. பட்டாபிராமன், நெல்வயல் தா. பழனியப்பன், குன்றத்தூர் எ. திரௌபதி, மாமண்டூர் கா. சின்னராஜு, கடலூர் கி. கணேஷ்ராம் மற்றும் பலர்.

★ ஆழியின் 'பறவைகளும் கூடுகளும்' அருமை! எத்தனை உழைப்பு என்பதை எண்ணும்போது வியப்பாக இருக்கிறது! - தில்லை மா. ரமேஷ், வேலூர் மி. கதிந்திரன், பாணாபட்டு கா. ராஜாமணி, விருத்தாசலம் வி. பிரபாகர், ஆரணி ப. சொக்கம்மாள், தேவனாங்குறிச்சி பா. வடிவேல், சக்காடுதாங்கல் ஜெ. நசீர்பாபு மற்றும் பலர்.

★ முயலை எப்படித் தூக்க வேண்டும்? - நல்ல அறிவியல் செய்திகளைத் தந்தது. முயல் பற்றி இத்தனை தகவல்களா? - தரங்கை பா. சேதுமாதவன், சிறுவயல், மா. சிவகாமி, தேனூர் பா. தெய்வநாயகி, சிங்காரப்பேட்டை கா. தீர்த்தபாலீஸ்வரன், பெரம்பலூர் எஸ். இளந்தென்றல் நண்பர்கள், டி.வி. நகர் ஏம்பலம், விருத்தாசலம் வி. பிரபாகர், ஆரணி பா. ஞானமூர்த்தி, ஆரணி ப. யோகநாயகி, மற்றும் பலர்.

★ புவனா தேடிய புதையல் 'ஹிட்ச்காக்' படம் மாதிரி ஒரே சஸ்பென்ஸ் சார்! - மாத்தூர் சா. சார்லஸ், சிவகாசி கா. கிருஷ்ணமூர்த்தி, புதூர் தா. ரவிச்சந்திரன், ஆரணி ப. பழனி நாட்டார், நன்செய் இடையார் குணா, ஆரணி ப. இன்பநாதன், மற்றும் பலர்.

★ நகைப்பொட்டலம் சூப்பர்; அருமை! - திண்டுக்கல் தஸ்தகீர், பாளையம்கோட்டை மா. திருமலை, காந்தி நகர் ஜெ. நசீர், நன்செய் இடையார் த. குணசேகரன் மற்றும் பலர்.

★ ஸ்ரீதரன் எழுதிய ''சாமி தின்ற லட்டு!'' அருமையான கதை சார். குழந்தைகளின் மன ஓட்டத்தைப் படம் போட்டுக் காட்டிவிட்டதே! - மேல் மருதூர் சா. கஜேந்திரன், பாட்டி காத்தி நா. சொக்கலிங்கம், காந்தி நகர் ஜெ. நசீர் மற்றும் பலர்.

★ திருக்குறள் நாடகம் 'நன்றியைக் காட்டு!' போட்டியை நடத்துபவர்கள் எல்லோரும் படிக்க வேண்டிய ஒன்று. எழுதியவர் பெயர் இல்லையே சார்! - கோட்டையூர் நா. சஞ்சீவி, பெரியபாளையம் தா. சின்னமணி, சாத்தூர் பா. பாத்திமா, ராணிப்பேட்டை தூ. இஸ்பாதுல்லா, சோழன்மாளிகை கு. கருணாநிதி, விருத்தாசலம் சா. பிரபாகர், மற்றும் பலர்.

★ ஹைடர் ஜக்குவுக்கு இப்பவே நல்வரவு சார்! - பள்ளிபுரம் கா. திருமலை, மாத்தூர் சந்திரமணி, பெரம்பலூர் எஸ். சேதுபதி, விருத்தாசலம் வி. பிரபாகர் நண்பர்கள், மற்றும் பலர்.

உயரமான புத்தகம்! உலகைக் காட்டும் புத்தகம்!

புத்தகங்கள் ஒரு நாட்டின் கலை, பண்பாடு, இலக்கியம், மக்களின் மனவளர்ச்சி ஆகியவற்றை மற்றவர்களுக்கு உணர்த்தும் கருவி. பண்டைய பாரதத்தில் குருகுலக் கல்வி முறை இருந்தது. சக்ரவர்த்திகளின் பிள்ளைகளுடன் கூட, வறுமை வாட்டும் குடும்பப் பிள்ளைகளும் ஒரே மாதிரி நடத்தப்பட்டு, குருவுக்குத் தொண்டு செய்து, பொறுப்புகளைப் பகிர்ந்து, கல்வியறிவு புகட்டப்பட்டனர். குருகுலக் கல்வி முடிந்ததும், மாணவர்கள் தங்கள் தகுதி பரம்பரைத் தொழில்களுக்கு ஏற்ப உலக அனுபவத்தைப் பெற்றுவர யாத்திரைக்கு அனுப்பப்பட்டனர். குரு வழங்கிய கல்வியையும், யாத்திரை கொடுத்த உலக அனுபவத்தையும் இன்று புத்தகங்கள் செய்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

அறிவியல் பெருக்கத்தின் பயனாக தொலைக்காட்சி, வீடியோக்கள் வந்துவிட்ட பிறகு படிக்கும் பழக்கம் பெருமளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது. உலகமெங்கும் இதுகுறித்து அறிஞர்கள் கவலை தெரிவித்துள்ளனர். படிப்பதைவிட பார்ப்பது எளிது; மனதில் நிலைத்து நிற்கக் கூடியது. இதைக் கொண்டு, பாமரர்களுக்குக் கூடப் பயனளிக்கக் கூடிய நிகழ்ச்சிகளைத் தரலாம். ஆனால், மற்றவர், தங்கள் கோணத்தில் தாங்கள் கண்டறிந்த இலக்கிய நயத்தைக் கூறியதைக் கேட்டு மகிழ்வது என்பது வேறு. தாங்களே படித்துப் புதிய புதிய கோணத்தில் அதன் இலக்கிய நயத்தை அனுபவிப்பது; உணர்ந்து மகிழ்வது என்பது வேறு. படிக்கும் பழக்கத்தால் மட்டுமே இதைப் பெற இயலும்.

தாமஸ் ஆல்வா எடிசன் என்னென்ன பொருள்களைக் கண்டுபிடித்தார் என்பதைத் தொலைக்காட்சி வினாடி-வினா தெரிவிக்கலாம். ஆனால், ஒவ்வொரு பொருளையும் அவர் கண்டுபிடிக்க என்ன பாடுபட்டார் என்பதை அவருடைய விரிவான வாழ்க்கை வரலாறு மட்டுமே விளங்க வைக்கும். வீடியோவோ, தொலைக்காட்சியோ எல்லாமே கதைச் சுருக்கம் போலத்தான். கதாசிரியரின் கோணத்தில் நாவலை வரி வரியாக அனுபவித்து மகிழவேண்டும் என்றால், அதைத்தானே படிப்பதன் மூலம் மட்டுமே பெற முடியும்?

முன்பெல்லாம் 'அட்லாஸ்' எனும் உலக நாடுகளின் வரைபடத் தொகுப்பு, புவிஇயலைப் பற்றிய தகவல்களை மட்டுமே கூறுவதாக இருந்தன. அச்சக் கலையின் வளர்ச்சி காரணமாக இந்தத் தொகுப்பு இப்பொழுது ஆர்வமாகப் படிக்கத் தூண்டும் வகையில் ஒரு மினி கலைக்களஞ்சியமாகவே வெளிவருகிறது.

படிக்கின்ற பழக்கத்தைப் பள்ளியில் பயிலும் போதே வளர்த்துக் கொள்ள வேண்டும். இதற்கு நூல் நிலையங்கள் பெரிதும் உதவும்.



'அட்டை'யில் அட்லாஸ் படிக்கும் சிறுமி பாவ்னா

இங்கே புத்தகங்களைப் படிப்பது சிரவண் கண்ணன், ஆர். தீபா

வண்ணப்படங்கள் : ராஜு நாராயண்

எங்கள் வீட்டுலே காய்ச்சது!

சீனி. விஜயராணி

கோபுவின் புத்தி குறுக்கு வழியில் வேலை செய்ய ஆரம்பித்தது.

'புதுசா வந்திருக்க புவனா டீச்சரை எப்படியாச்சும் காக்கா பிடிச்சாகணும். எதுக்கெடுத்தாலும் வகுப்பிலே நம்மைக் கேள்வி கேட்டு மட்டம் தட்டி தலை குனிய வைக்கிறாங்களே! என்ன செஞ்சு அவங்க கிட்ட நல்ல பிள்ளேன்னு பேர் வாங்குறது?'– டியூசன் கிளாஸ் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த கோபு, இதே சிந்தனையில் அந்தக் குறுகலான சந்துக்குள் நுழைந்தான். அப்போதுதான் அந்தக் குட்டையான முருங்கை மரம் கற்பகத் தருவாக அவனது கண்களுக்குத் தட்டுப்பட்டது.

குட்டையான காம்பவுண்ட் சுவருக்கு உள்ளே செழித்து நின்ற அந்த மரத்தின் பாதிக்கிளைகள் வீதிக்கு வெளியே விரிந்து நின்றன. ஒவ்வொரு கிளையிலும் நூற்றுக் கணக்கில் முருங்கைக் காய்கள் பருத்த பச்சைப் பாம்புகள் போலக் கைக்கெட்டும் உயரத்தில் தொங்கிக் கொண்டிருந்தன. அவற்றைப் பார்த்ததுமே கோபுவின் மனத்தில் மின்னல் கீற்றுப் போல பளிச்சிட்டு மறைந்தது ஒரு யோசனை.

'பத்துப் பதினஞ்சி காய்களைப் பறிச்சிட்டுப் போயி, எங்க தோட்டத்திலே காச்சது; எங்கம்மா கொடுத்தனுப்பிச்சாங்கன்னு பக்குவமா எடுத்துச் சொன்னா, டீச்சர் வேணாமுன்னா சொல்லிடுவாங்க?'



அந்தி மயங்குகிற நேரம். வீதி விளக்குகள் இன்னும் எரியத் தொடங்கவில்லை. ஒடுக்கமான அந்தச் சந்தின் இரு கோடிகளையும் ஒரு முறை தன் பார்வையால் அலசினான். ஆளரவமே இல்லை; முருங்கை மர வீட்டில் தெருக் கதவின் வெளிப்புறம் தொங்கிய பூட்டு வேறு அவனுக்குத் துணிச்சலைத் தந்தது. கண்ணிமைக்கும் நேரத்தில் பத்துப் பதினைந்து காய்கள் அவனது நீண்ட பைக்குள் அடைக்கலமாகி விட்டன. அதே சமயம் சற்றுத் தொலைவில் கைத்தடியை ஊன்றி நடந்து வரும் ஓர் உருவம் அவன் கண்களில் பட்டதுதான் தாமதம்; ஓட்டமும் நடையுமாக அந்த இடத்தைக் காலி செய்தான்.

அவன் கால்கள் புவனா டீச்சரின் வீட்டை நோக்கி வேகமாக நடைபோட்டன. ஆனால் அவன் மனத்திற்குள் புதிதாக ஏதோ உதறல் எடுக்கிறதே!

'அடப்பாவி! டீச்சருக்கே லஞ்சமா? அதுவும் கடைத்தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைக்கிறியே?'–

கோபுவின் மனச்சாட்சி மெல்ல இடக்குப் பண்ணியது. ஆனால் டீச்சரின் கருணைப் பார்வையை விலைக்கு வாங்கத் துணிந்து விட்ட அவன், அதையெல்லாம் சட்டை செய்யவே இல்லை.

"குட் ஈவினிங் மேடம்!"- வராண்டாவில் நின்று பணிவாகக் குரல் கொடுத்தான் கோபு. அடுத்த நிமிடமே வெளியே வந்த புவனா டீச்சர், அவனைப் பார்த்து அதிசயித்து நின்று விட்டார். "என்ன கோபு இந்நேரம்?" என்று அவர் கேட்டு முடிக்குமுன், அவன் ஏற்கனவே ஒத்திகை பார்த்து வைத்திருந்த அந்த நாடகக் காட்சியை அரங்கேற்ற ஆரம்பித்தான்.

"ஒன்னுமில்லீங்க டீச்சர்; டியூசன் கிளாசுக்குக் கிளம்பினேன். எங்கம்மா இதை ஒங்ககிட்டே தரச் சொல்லி கொடுத்தனுப்பிச்சாங்க. எங்க வீட்டு மரத்திலே காய்ச்சது. மறுக்காம வாங்கிக்கணும்"- பையிலிருந்து காய்களை எடுத்து பயபக்தியோடு நீட்டினான்.

"அடேயப்பா! இவ்வளவு நீளமான காய்களா? எனக்கு இத்தினி எதுக்குப்பா? ஆமா; இதுக்கு எவ்வளவு காசு கொடுக்கணும்...?"

அதற்குள் இடைமறித்தகோபு, "ஐயோ, காசா? எங்க தோட்டத்திலேயே காச்சது மிஸ். ஊருக்கெல்லாம் ஓசியாத் தறோம். ஓங்ககிட்டே காசு வாங்கிப் போனா, எங்கம்மா தோலை உறிச்சிடுவாங்க" என்று பதறிப் படபடத்தான்.

"ரொம்ப தேங்க்ஸ் கோபு!" என்று டீச்சர் விடை கொடுக்க, மகிழ்ச்சி தாங்கவில்லை அவனுக்கு. வாயெல்லாம் பல்லாக வணங்கிவிட்டு வெளியே வந்தான். இனிமேல் டீச்சரின் கடும்பார்வை தன் மீது விழாது என்ற கற்பனை அவனை அந்தரத்தில் பறக்க வைத்தது.

மறுநாள் மாலை; பள்ளி முடியப் போகிற நேரம். புவனா டீச்சரிடமிருந்து கோபுவுக்கு அழைப்பு வந்தது. பரவசத்தோடு பாய்ந்தோடினான் அவன்.

"கோபு, நேத்து நீ கொடுத்துட்டுப் போன காய்கள் ரொம்ப ரொம்ப ருசி. நெனச்சாலே வாயிலே நீர் ஊறுது. இன்னிக்கும் ஒங்கம்மாகிட்டே நான் கேட்டதாச் சொல்லி, அதே மரத்துக் காயிலே பத்து மட்டும் வாங்கிட்டு வரணும். காசு வேணுமானாலும் கொடுத்துடுறேன். மறந்துடாதேப்பா! ஆவலா எதிர்பார்ப்பேன்."



புவனா டீச்சரின் கட்டளையில் அன்பும் உரிமையும் தொனித்தாலும், அதிர்ந்துபோய் நின்று விட்டான் கோபு. அதைக் கண்டு கொள்ளாமலேயே டீச்சர் வேறு வேலையைக் கவனிக்கப் புறப்பட்டார்.

"இதென்னடா வம்பு? அதே மரத்துக் காய்கள் பத்து வேணுமாமே? இன்னக்கி எங்கே போறது? எதையோ நெனச்சி ஆரம்பிச்சிட்டு இப்போ இடுக்கியிலே மாட்டிக் கிட்டேனே!'' என்று அங்கலாய்க்க ஆரம்பித்தது அவன் மனம்.

டியூசன் வகுப்பில் அவன் கவனம் படிப்பில் ஒன்றவில்லை. முருங்கைக் காய்களும் புவனா டீச்சருமே அவன் மனக்கண் முன்னால் வந்து நின்றார்கள். நிலைமையை எப்படிச் சமாளிக்கப் போறோமோ?' என்ற சிந்தனை அவனை அரித்தெடுக்கலாயிற்று.



முதல் நாள் போலவே இருள் பரவும் நேரத்தில் பழைய முருங்கை மரத் தெருவுக்குள் கவலையோடு காலெடுத்து வைத்தான் கோபு. அங்கே தெரு விளக்கின் வெளிச்சம் பட்டப்பகலாகப் பரவிக் கிடக்கிறதே! அது கூட அவனுக்குப் பிரச்சனையாக இல்லை. முருங்கை மர வீட்டு வாசலில் கயிற்றுக் கட்டிலைப் போட்டுக் கொண்டு கையில் ஒரு தடியோடு உட்கார்ந்திருக்கும் ஒரு கிழவர் தான் அவனுக்குள் நடுக்கத்தை உண்டாக்கி விட்டார். குனிந்த தலை நிமிராமல் அவரைக் கடக்க முயன்றான். அதே நேரம் சொல்லி வைத்தது போல வீட்டுக்குள்ளிருந்து வந்த ஒரு பாட்டியின் வசவு அவன் காதுகளில் தெளிவாகவே விழுந்தது.

"களவாணிப் பயலுக; ஒரு நாளக்கி அகப்படாமலா போயிடுவானுக. கையும் களவுமாப் பிடிச்சி இந்த மரத்திலேயே கட்டிப் போடணும்!"

இதைக் கேட்டு அவன் மேனி வேர்த்து விறுவிறுத்துப் போய் விட்டது. தப்பித்தால் போதுமென்று வீடு நோக்கி ஓட்டமெடுத்தான். ஆனாலும் டீச்சரின் கட்டளையை நிறைவேற்ற முடியாத புதிய கவலை அவன் மனத்தை அலைக் கழிக்கத் தொடங்கி விட்டது!

அடுத்த நாள் காலை பள்ளிக் கூடம் சென்றதுமே கோபுவை எதிர்பார்த்து புவனா டீச்சர் வகுப்பு வாசலிலேயே நின்று கொண்டிருந்தார். தூரத்தில் வரும்போதே அவரைக் கவனித்து விட்ட கோபுவுக்கு நெஞ்சு 'டிக்டிக்'கென்று அடித்துக் கொண்டது. இக்கட்டான அந்தப் பிரச்னையை வளர்த்துக் கொண்டு போகாமல், முற்றுப் புள்ளி வைத்து விடத் துடித்தது அவன் மனம். தீர்வுக்கான வழியை யோசித்தபடி டீச்சரை நெருங்கினான்.

"என்ன கோபு, நான் சொல்லியனுப்பிச்ச மாதிரி முருங்கைக் காய் கொண்டு வராமே ஏமாத்திட்டே பாத்தியா?" என்று வருத்தம் தோய்ந்த குரலில் குறைப்பட்டுக் கொண்டார் டீச்சர்.

கோபுவின் மனத்தில் சட்டென்று ஒரு யோசனை. உடனே அதை வார்த்தைகளாகக் கொட்டினான்.

"மன்னிக்கணும் மேடம்; நேத்துக் காலையில் அடிச்ச சூறாவளிக் காத்திலே

எங்க தோட்டத்து முருங்கை மரம் வேரோட சாஞ்சிட்டது. அதனாலே தான்..."

"அடப்பாவமே! நல்ல ருசியான காய் காய்க்கிற மரமாச்சேப்பா..." என்று வருத்தத்தை வெளியிட்ட டீச்சர் சற்று யோசித்து விட்டு, "சரி கோபு, பரவாயில்லே. அந்த அருமையான மரம் வாரிசில்லாமே அத்துப் போயிடக்கூடாது. நீ இப்பவே ஓடிப்போயி, அந்த மரத்திலே நல்ல கிளையாப் பாத்து ஒன்று வெட்டிக் கிட்டு வாறே; அதை நம்ம ஸ்கூல் தோட்டத்திலே ஊன்றி வச்சிட்டா தழைத்துக் காய்க்கும் பாரு. கொண்டா உன் புத்தகப் பையை" என்று அவன் பையை வாங்கிக் கொண்டு வகுப்பிற்குள் போய் விட்டார்.

டீச்சரின் அந்தக் கட்டளையைச் சற்றும் எதிர் பாராத கோபு மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் சற்று நேரம் வகுப்பு வாசலில் செயலற்று நின்றான். பிறகு தளர்ந்த நடையோடு பள்ளிக்கு வெளியே வந்தவனுக்கு எங்காவது தனியாகப் போய் வாய்விட்டு அழ வேண்டும் போலிருந்தது.

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்துட்டேனே? டீச்சர் கேட்ட காய்களையே கொண்டு வரமுடியாமே விழிக்கிறப்போ, மரக்கிளைக்கு எங்கே போவேன்?' என்று புலம்பியது அவன் மனம்.

'டீச்சர் கிட்டே போயி நம் குற்றத்தைச் சொல்லி மன்னிப்புக் கேட்டால்....?'– அவனுக்குள் அந்த முடிவு தலை தூக்கிய அதே நேரத்தில், 'அவன் முதுகில் யாரோ தடவுவது போன்ற உணர்வு. திடுக்கிட்டு ஏறிட்டுப் பார்த்தான். முதல் நாள் சாயங்காலம் அந்த முருங்கை மர வீட்டு வாசலின் கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்திருந்த அதே பெரியவர்! கைத்தடியோடு அங்கே நின்று கொண்டிருக்கிறாரே? திகைத்துப் போய் விட்டான் கோபு.

"தம்பி என்னைத் தெரியுதா? முந்தா நாள் சாயங்காலம் நான் கோயிலுக்குப் போயிட்டு வாறப்போ, நீ என் வீட்டு மரத்திலே முருங்கைக் காயைப் பறிச்சிட்டுப் போறதைப் பாத்துட்டேன். உன் பின்னாடியே வந்து நீ உங்க டீச்சர் கிட்டே சொன்ன பொய்யை எல்லாம் மறைஞ்சி நின்னு கேட்டுக்கிட்டேன். நீ போனப்புறம் நான் டீச்சரைப் பாத்து உண்மையைச் சொன்னேன். அதைக் கேட்டு வருத்தப் பட்ட அவங்க, எப்படியாச்சும் உன்னைத் திருத்திடறதா எங்கிட்டே சொன்னாங்க. மறு நாளும் டீச்சர் உன்கிட்டே காய் கேட்டப்போ, உன்னாலே கொடுக்க முடிஞ்சதா? இப்பவும் டீச்சரைப் பாத்துட்டுத்தான் வாறேன். உங்க வீட்டு முருங்கை மரம் ஒடிஞ்சி விழுந்துட்டதா! இன்னக்கிப் புதுசா ஒரு பொய்யைச் சொன்னியாமே? ஏம்ப்பா இவ்வளவு கஷ்டப் படணும்? ஒரு பொய்யை மறைக்க எத்தனை பொய் சொல்ல வேண்டியிருக்கு பாத்தியா? அப்படியும் உன்னாலே சமாளிக்க முடியலியேப்பா?"– பெரியவர் மிகவும் பாசத்தோடு சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவர் கைகளைப் பிடித்துக் கொண்டு 'கோ'வென்று கதறி விட்டான் கோபு.

அவனை அன்போடு தடவிக் கொடுத்துத் தேற்றிய அவர், "அழாதே தம்பி; உன் குத்தத்தை உணர்ந்துட்டதை நெனைக்க ரொம்பவும் சந்தோஷமா இருக்குப்பா. போ; டீச்சரைப் பாத்து மன்னிப்புக் கேட்டுக்கோ'' என்று உருக்கமாகச் சொல்லி விட்டு அங்கிருந்து புறப்பட்டார்.


அழுது தீர்த்ததால் தன் மனச்சுமை குறைந்து போயிருப்பதை உணர்ந்தான் கோபு. தெளிந்த மனத்தோடு டீச்சரைத் தேடிக் கொண்டு பள்ளியை நோக்கி நடந்தான். பொய் என்ற அந்த வார்த்தையை நினைக்கும் போதே நெஞ்சைக் குமட்டுவது போலிருந்தது அவனுக்கு.

''எதுக்குடா தலைகீழா நின்னுக்கிட்டு குளிக்கிறே?''

''கால் காயத்துல தண்ணி படக்கூடாதுன்னு டாக்டர் சொல்லிருக்கார்டா!''

சீர்காழி வி.ரேவதி





நமக்கும்தான்!

இந்திய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நேரம். காந்திஜி அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவி, அங்கு தங்கியிருந்தார்.

சிந்துப் பிரதேசத்தில் ஒரு தலைவர். பண்டிட் விஷ்ணு சர்மா என்று பெயர். அவருக்கு ஓர் ஆசை. 'காந்திஜியை நேரில் சந்தித்து விட வேண்டும்; அவருடன் பேசி மகிழ வேண்டும்' என்பதுதான் அது.

விஷ்ணு சர்மாவுக்கு ஒரு நண்பர். அவர் பெயர் காகா காலேல்கர் என்பது. காந்திஜியுடன் சபர்மதி ஆசிரமத்திலேயே தங்கியிருந்தார்.

விஷ்ணு சர்மா காலேல்கருக்கு உடனே ஒரு கடிதம் எழுதி விட்டார்.

காலேல்கர் அந்தக் கடிதத்தைக் காந்திஜியிடம் காட்டினார். உடனே காந்திஜி, "தாராளமாக வரட்டுமே..." என்று பச்சைக் கொடி காட்டி விட்டார்.

அதுவரையில் விஷ்ணுசர்மா சபர்மதிக்கு வந்ததில்லை. காந்தியடிகளையும் பார்த்ததில்லை. இது காலேல்கருக்குத் தெரியும். எனவே, தேதியையும் ரயில் நேரத்தையும் குறிப்பிட்டு எழுதி, "அந்த ரயிலில் கிளம்பி வாருங்கள். நானே நேரில் வந்து உங்களை ஆசிரமத்துக்கு அழைத்துப் போகிறேன்..." என்று சர்மாக்குக் கடிதம் போட்டார்.

அந்தக் குறிப்பிட்ட நாள் வந்தது. காலேல்கர் ஸ்டேஷனுக்குப் போனார். அவர் குறிப்பிட்டிருந்த ரயில் தாமதமாக வந்து கொண்டிருந்தது. அங்கு போன பிறகுதான் காலேல்கருக்கு அது பற்றித் தெரியவந்தது. அதுவரையில், அருகில் இருந்த சில நண்பர்களைச் சந்திக்கப் போனார். பேச்சு சுவாரசியத்தில் வந்த வேலையை மறந்து விட்டார்!

அதற்குள், ரயில் வந்து விட்டது. விஷ்ணு சர்மா ரயிலடியில் காலேல்கரைத் தேடினார். கண்ணில்படவில்லை. காலதாமதமம். எனவே, காலேல்கர் திரும்பிப் போயிருப்பார் என்று நினைத்தார். தானே ஒரு குதிரை வண்டியைப் பிடித்துச் சபர்மதிக்குச் சென்றார்.

வண்டி ஆசிரம வாசலில் நின்றது. கறுத்த ஒல்லியான ஆசிரமவாசி ஒருவர் விஷ்ணு சர்மாவை வரவேற்றார். அவருடைய பெட்டி - படுக்கை சாமான்களை வண்டியிலிருந்து இறக்கி, உள்ளே சுமந்து சென்று வைத்து உதவினார். குடிக்கக் குளிர் நீர் தந்து உபசரித்த பிறகு கேட்டார். "முதலில் என்ன செய்கிறீர்கள்? உணவா...? குளியலா? இல்லை ஓய்வா...?"

விஷ்ணு சர்மாவுக்கு அவர் கேட்ட எதிலுமே நாட்டமில்லை. அவர் எண்ணம் முழுதும், 'காந்திஜியைச் சந்திக்க வேண்டும்' என்ற ஒரே நோக்கில்தான் இருந்தது. எனவே, "நண்பரே! நான் இந்த ஆசிரமத்தில் குளித்து உண்டு ஓய்வெடுப்பதெல்லாம், இங்கு வந்துள்ள குறிக்கோளை முடித்துக் கொண்ட பிறகுதான்..." என்றார்.

"குறிக்கோளா...? என்ன அது...?" ஆசிரம நபர்.

"வேறு எதுவாக இருக்க முடியும்? நான் இங்கு வந்துள்ளது, காந்திஜியைத் தரிசிக்கத்தானே...! முதலில் அதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள்..."

உடனே அந்த ஆசிரம நபர் உரக்கச் சிரித்தவாறு, "விஷ்ணு சர்மா, தங்கள் விருப்பம் அதுவானால், உங்களது அந்த நோக்கம் எப்போதோ நிறைவேறி விட்டது..." என்றார்.

அதே நேரத்தில் ரயிலடியிலிருந்து காலேல்கரும் வந்து விட்டார். வந்து கொண்டே அவர், "வாருங்கள் விஷ்ணு சர்மா.. இவர்தான் பாபுஜி... தெரியுமல்லவா...?" என்றார்.

விஷ்ணு சர்மாவிடம் ஒரே அதிர்ச்சி! ஆச்சர்யம்! 'என் பெட்டி படுக்கை சாமான்களைத் துளியும் கௌரவம் பாராட்டாமல் சுமந்து சென்று ஆசிரமத்துக்குள் வைத்த அந்த ஒல்லியான ஆசிரம நபர்தானா காந்திஜி...?'

அடுத்தகணம், விஷ்ணுசர்மா காந்திஜியின் பாதங்களில் விழுந்து வணங்கினார். அவரை எழுப்பி நிறுத்திய பாபுஜி, அவரை மார்போடு வாரி அணைத்துக் கொண்டார்.

ஆசிரமத்தின் முதல் பாடமாகிய ஆடம்பர மற்ற 'எளிய வாழ்க்கை' என்பதைக் காந்திஜியைப் பார்த்தே விஷ்ணு சர்மா, அன்று கற்றுக் கொண்டார்.

விஷ்ணு சர்மாவுக்கு மட்டுமல்ல... நமக்கும் இதுதானே முதல் பாடம்!

- ஜானகிமணாளன்

கேளுங்கள் சொல்லப்படும்

• **வானவில்லின் முழு உருவமும் அரைவட்டம்தானா? - கா. பவானந்தன், சிம்மக்கல்.**


! வானவில்லின் முழு உருவமும் முழு வட்டம்தான். நம் கண்களுக்கு இது அரை வட்டமாகத் தெரிகிறது அவ்வளவே. முழு வட்ட வானவில்லைப் பார்க்க வேண்டும் என்றால், மிக உயரத்தில் விமானத்தில் இருந்து காணலாம்.

• **விமானங்கள் பறக்கும் போது காற்றில் ஏற்படும் அதிர்வு அலைகளால் பூமியில் உள்ள கட்டடங்கள் பாதிக்கப்படுகின்றன என்பது உண்மையான வாதம் தானா? - இ. கல்லூர் ரஹ்மான், வந்தவாசி.**

! முற்றிலும் உண்மையே. இதன் காரணமாகவே உலகப் புகழ் பெற்ற அதிசயமான பைசா நகரத்து சாய்ந்த கோபுரத்திற்கு மேல் விமானங்கள் பறப்பதற்கு இத்தாலிய அரசு தடைவிதித்திருக்கிறது.

• **வெங்காயம் எந்த நாட்டில் தோன்றியது? - தா. பவானி, திருப்பூர் - 2.**

! பல நாடுகள் இதற்கு உரிமை கொண்டாடுகின்றன. இருப்பினும் இது இந்தியாவில் தோன்றியது அல்ல. எகிப்தில் பிரமிட் கட்டப்பட்ட காலத்தில், கட்டடப் பணிகளைச் செய்து வந்த அடிமைகளுக்கு உடல் வலிமைக்காக வெங்காயம் வழங்கப்பட்டதாம். வெங்காயத்தை எகிப்தில் தெய்வமாகவே வணங்கினார்கள். பிரமிட்டுகளின் காலம் கி.மு. 3000. எனவே எகிப்து தான் இதன் தாயகம்.



• **உலகத்தின் முதல் சோதனைக் குழாய் பாப்பாவின் பெயர் என்ன? - கா. அப்துல் கனி, திண்டுக்கல்.**

! சோதனைக் குழாய் என்ற டெஸ்ட் டியூப் குழந்தையின் பெயர் லூயி ஜாய் பிரௌன் (Louise Joy Brown).

• **ஒரு காலத்தில் கொள்ளைக்காரியாக இருந்த பூலான் தேவியின் சொந்தப் பெயரே பூலான் தேவிதானா? - தூ. செட்டி பாபு, செம்பாளயம்.**

! சொந்தப் பெயர் பூலான் தேவியே தான். ஆனால் பொது மக்கள் தசயு சுந்தரி (Dasayu Sundari) என்றும் காரணப் பெயரால் அழைக்கின்றனர். இதற்கு திருட்டுப் பெண் என்பது பொருளாகும்!

• **"கண்ணன் எங்கள் கண்ணனாம்" என்ற குழந்தைப் பாடலைக் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா கோகுலத்தில் தானே எழுதினார்? - சொ. முத்துராக்கு, சின்னாளபட்டி.**

! இல்லை. இந்தப் புகழ் பெற்ற பாடல் கோகுலம் இதழ் ஆரம்பிக்கப்படுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே 'பாலர் மலர்' என்ற சிறுவர் பத்திரிகையில் வெளிவந்து

தேயிலையின் தாவரப் பெயர் என்ன?

விட்டது. இது வெளிவந்த ஆண்டு 1944. அதாவது 51 ஆண்டுகளுக்கு முன்பு. ஆனால், இன்றும் என்றும் என்னென்றும் இது தமிழ் பேசும் குழந்தைகள் நாவில் மணத்திருக்கும்.

• செடிகளுக்குக் கூடவா ஊசி போடுவார்கள்! - ஹம்பிட் ரஸ்னா, பெரிய குப்பம்.

! மனிதர்களுக்கு நோய் ஏற்பட்டால் குணமாக ஊசிமூலம் மருந்து ஏற்றுகிறோம். இதே போல, தாவரங்களும் நோயுற்றால் அவைகளுக்கும் ஊசி மூலம் மருந்து ஏற்றி ஏன் குணமாக்க முடியாது என்பதில் தாவர ஆராய்ச்சியாளர்கள் தீவிரம் காட்டினார்கள். இதில் கேம்பிரிட்ஜைச் சேர்ந்த தாவர ஆராய்ச்சியாளரான டாக்டர் ரேமான் மத்யாஸ் வெற்றி பெற்றுள்ளார். இது மேலும் பரவலாக ஆராயப்பட்டு வருகிறது.

• தமிழ்ப் பத்திரிகை ஒன்றுக்கு முதன் முதலாக ஆசிரியர் பொறுப்பு வகித்த பெண்மணியின் பெயர் என்ன? பத்திரிகையின் பெயரையும் கூறவும்? - தா. ஷீலா ராஜரத்தினம்., சிவகாசி.

! வை.மு. கோதைநாயகி அம்மாள் என்ற பெண்மணி பல ஆண்டுகள் ''ஜகன் மோகினி'' என்ற மாதப் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து நடத்தியிருக்கிறார். இவரே தமிழ்ப் பத்திரிகையின் முதல் பெண் ஆசிரியர். காந்தி இயக்கத்தில் ஈடுபாடு கொண்ட இவர், தனது பத்திரிகையில் குழந்தைகளுக்கென ஒரு பகுதியையும் சேர்த்திருந்தார்.



• வருணா, அசி என்ற இரண்டு புகழ்பெற்ற நதிகள் நம் நாட்டில் ஓடுகின்றதாமே! இவை எங்கே ஓடுகின்றன? - மொ. கிருஷ்ணவேணி, சாத்தூர்.

! காசியின் இரண்டு பக்கமும் தான் இந்த நதிகள் ஓடுகின்றன. இதனாலேயே காசிக்கு இன்னொரு பெயரான "வாரணாசி" ஏற்பட்டது.



• கடல் நுரை என்று நாட்டு மருந்துக் கடைகளில் விற்கிறார்களே, இது எதனால் தயாரிக்கப்படுகிறது? - மா. தினபாஸ்கரன், பெரியதராபுரம்.

! கடல் நுரை என்று கடைகளில் கிடைக்கும் பண்டம் மனிதத் தயாரிப்பு அல்ல! செபீயா என்ற மீனின் ஓடுதான் அது. தவறான பெயர், எத்தனை குழப்பங்

களுக்கு இடமளிக்கிறது பார்த்தாயா?

• நம் நாட்டை ஏன் தாய் நாடு என்று அழைக்கிறோம்? தந்தையார் நாடு என்று அழைக்கக் கூடாதா? - கு. அந்தோணி ராம், தாமஸ்குப்பம்.

! தாராளமாக அழைக்கலாம். ஆனால் எந்த ஆண் மகனும் இதற்கு உரிமை கேட்டு வாதாடியதாகத் தெரியவில்லையே! இப்படி அழைத்த முதல் பெருமை பாரதியாருக்குத் தான். "எங்கள் த்ந்தையர்! நாடென்ற பேச்சினிலே'' என்று பாடியே விட்டார்! ஆனால் ஜெர்மனில் தந்தையர் நாடு என்றுதான் குறிப்பிடுகிறார்கள்.

• தேயிலையின் தாவரப் பெயர் என்ன? - கா. அடைக்கலம், தேவகோட்டை.

! தேயிலையின் தாவரப் பெயர் "Camellia Sinensis" என்பது.

• சட்டை (Shirts) தோன்றிய போதே அவைகளுக்குக் காலர் இருந்ததா? - து. குணசேகரபாண்டி, விருதுநகர்.

! இல்லை. ஆண்களின் சட்டைகள் முதன் முதலாக காலர் இல்லாமல்தான் இருந்தன. பெண்களின் ஜாக்கெட்டுகளுக்கு மட்டுமே காலர்கள் இருந்தன. பிறகுதான் காலர்கள் ஆண்களின் சட்டைக்கும் ஒட்டிக் கொண்டது. காலரை அறிமுகப் படுத்திய பெருமை இங்கிலாந்துக்கே.



• என் பள்ளித் தோழி ஒருத்தி, யாராவது பாடினால், தான் பாலே நடனம் ஆடுவதாகக் கூறினாள். தன் தந்தை நூர் கேலாவில் இருந்த போது, அங்கிருந்த ரஷ்ய பொறியாளர்களின் குடும்பங்களில் இருந்து பாலே நடனம் கற்றதாக இவள் கூறுகிறாள். ஆனால் என் ஆசிரியை இவளுடைய நடனத்தைப் பள்ளி விழாவில் சேர்க்க மறுத்துவிட்டார். காரணம், பாலே நடனத்திற்கு யாரும் பாடுவதில்லை என்கிறார். இது உண்மை தானா? - கா. விஷ்ணுப்பிரியா, காரைக்குடி.

! உங்கள் ஆசிரியை விஷயம் தெரிந்தவர். பாலே நடனத்திற்கு வாத்திய (கருவி) இசையும், அசைவுகளும்தான் உண்டு. பாடல் கிடையாது. அபிநயம் வாயிலாகத் தான் செய்தியை உணர்த்துவார்கள். இந்த அடிப்படையைக் கூட அறியாமலா உன் தோழி பாலே நடனத்தைக் கற்றாள்! பாலே நடனம் ஆட சிறப்பான தனியான மேடையும் வேண்டும்?

• வளர்பிறை, தேய்பிறை இரண்டிலும் மூன்றாம் பிறை வருமல்லவா? இதை எப்படிக் கண்டு பிடிப்பது? - மா. ஞான மூர்த்தி, செம்பளாக்கோவில்.

! வளர் பிறையில் காணப்படும், பிறை நுனிகள் இரண்டும் மேல் நோக்கி இருக்கும். தேய்பிறையில் இவை கீழ் நோக்கி இருக்கும். இது எல்லா நாள் பிறைகளுக்கும்

பொருந்தும்.

* தொண்டு அமைப்பான லயன்ஸ் கிளப்புக்கு, எப்படி இந்தப் பெயர் சூட்டப்பட்டது. இவைகளுக்கும் சிங்கங்களுக்கும் என்ன தொடர்பு? - தூ. கிருபாகரன், நாமக்கல்.


! லயன்ஸ் என்பதில் உள்ள ஐந்து ஆங்கில எழுத்துக்களும், ஐந்து சொற்களைக் குறிப்பவை. Liberty Intelligence Our Nations Safety என்பதே அது. இதில் உள்ள ஐந்து சொற்களின் முதன் எழுத்துக்களின் கூட்டே லயன்ஸ் கிளப் ஆகும். இதற்கும் சிங்கங்களுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. "அரிமா சங்கம்" என்ற தமிழாக்கமும், சில உறுப்பினர்கள் போட்டுக் கொள்ளும் சிங்கத்தின் சின்னமுமே இந்தக் குழப்பத்திற்குக் காரணம்.

* மாங்காயைக் குறிக்கும் மேங்கோ (Mango) என்ற சொல், லத்தீனில் இருந்து தோன்றியதா, இல்லை கிரேக்கச் சொல்லா? - கா. மதுரவல்லி, சிதம்பரம்.

! Mango என்ற மாங்காய்க்கு உரிய ஆங்கிலப் பெயர், தமிழ்ப் பெயரான மாங்காய் என்பதில் இருந்து தோன்றியதே. லத்தினோ, இல்லை கிரேக்கோ அல்ல.









* ஜுராசிக் பார்க், காந்தி போல், ஆங்கிலத்தில் எடுக்கப்பட்ட பல படங்கள் தமிழாக்கப்பட்டு ஓகோ என்று ஓடுவது போல், தமிழில் எடுக்கப்பட்ட எந்த ஒரு படமாவது, ஆங்கிலமாக்கப்பட்டு ஓகோ என்று ஓடியிருக்கிறதா? - தா. பாமிலா தனியத், பாளையம்கோட்டை.




! இதற்கு உரிய சரியான பதிலை திரைப்பட நிபுணர்களால் மட்டுமே தர இயலும். தமிழில் வந்த எந்த ஒரு படமும், இப்படி ஆங்கிலமாக்கப்பட்டு, சக்கை போடு, போட்டதாகத் தெரியவில்லை. ஆனால் 1960-ல் ஹாலிவுட்டில் தயாரிக்கப்பட்ட "The Magnificent Seven" என்ற ஆங்கிலப்படம், தயாரிப்பிலும், வசூலிலும் சக்கை போடு போட்டது. இது 1954-ல் வெளி வந்த 'The Seven Samurai' என்ற ஜப்பானியப் படத்தின் ஆங்கில வடிவம். தமிழுக்கோ அல்லது இந்திய மொழிகளுக்கோ இந்தச் சிறப்பு இன்னும் கிடைக்கவில்லை.


* கடிகாரங்களில் இப்பொழுது காணப்படும் நிமிட முள்ளும், விநாடி முள்ளும் கடிகாரம் கண்டு பிடிக்கும் போதே இருந்தனவா? - கு. முன்ஷிராம், மதுரை - 2.

! இல்லை. கடிகாரத்துடன் கண்டு பிடிக்கப்பட்டது முதலில் மணி நேர முள்தான். பிறகுதான் நிமிட முள்ளும், அதற்குப் பிறகுதான் விநாடி முள்ளும் தோன்றின.







கடைசி, முதல் கண்டுபிடியுங்கள்

போட்டி

இங்கே மொத்தம் இருபது படங்கள் இருக்கின்றன. இவைகளில் உள்ள பத்துப் படங்களின் கடைசி எழுத்து, மீதி பத்து படங்களில் உள்ளவைகளின் முதல் எழுத்து. இவைகளைக் கண்டுபிடித்து ஒரு தபால் கார்டில் எழுதி, முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முகவரிக் கூப்பனில்லாது வருபவை ஏற்கப்படமாட்டா. முடிவு தேதி 30.11.95. தபாலில் ஏற்படும் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்காது. அயல்நாட்டு வாசகர்கள் தங்கள் இந்திய தொடர்பு முகவரியைத் தர வேண்டும். ஒன்றுக்கு மேல் சரியான விடை இருந்தால் குலுக்கல் முறையிலேயே பரிசு முடிவு செய்யப்படும். ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.


11 11 11 11 11 11 11 11 11 11
11
11 ஆசிரியர்,
11 கோகுலம்,
11 47, ஜவாஹர்லால் நேரு
11 சாலை,
11 ஈக்காடுதாங்கல்,
11 சென்னை - 600 097.
11

வரவே கூடாது!

என் மனம் உள்ளுக்குள்ளேயே அழுதது.

போனவருஷம் ஹாஸ்டலிலிருந்து லீவுலே வந்தவுடனே எவ்வளவு ஜாலியா இருந்தது! தினமும் அப்பா சினிமா, டிராமான்னு கூட்டிகிட்டு போனார். அம்மாவோ, வித விதமா பலகாரம் செஞ்சி குடுத்தாங்க. ஆனா இந்த வருஷம் எல்லாமே தலை கீழா இருக்கே!

ஏண்டாப்பா ஹாஸ்டல்லேருந்து லீவுக்கு வீட்டுக்கு வந்தோம்னு கூடத் தோணுது! லீவுலே வந்ததிலிருந்து யாருமே என்னைக் கண்டுகிடறதே இல்லை! நானாகப்போய் "ஏம்பா, மேட்டூர் அணைல தண்ணி நிரம்பி ஓடுதாமே! போகலாமான்னு கேட்டேன். அப்பா கோபமா திட்டினார். அப்பா இப்படின்னா, அம்மா இதுக்குமேலே. "அம்மா, ஹாஸ்டல்ல அடையே பண்ண மாட்டாங்கம்மா. இங்கே பண்ணுங்கம்மான்னு கேட்டதுக்கு அம்மா என்ன பதில் சொன்னாங்க தெரியுமா? "அடையுமாச்சு வடையுமாச்சு. யாரால அரைக்க முடியுதுன்னு கடுகடுத்தாங்க. நாலுமாசமா ஹாஸ்டல்ல இருந்திட்டு வந்த பையனுக்கு சொல்ற பதிலா இது!



கொஞ்ச நேரம் எதிர்த்த வீடு சங்கரோடு விளையாடிட்டு வீட்டுக்கு வந்தேன். சங்கரோட அம்மாவும் எங்க அம்மாவும் பேசிக் கிட்டிருந்தாங்க. என்ன பேசறாங்கன்னு ஒட்டுக் கேட்டேன்.


"போன வருஷம் மூர்த்தி லீவுலே வந்தபோது ஏகதடபுடல் பண்ணீங்களே! இப்போ என்னாச்சு? எப்பப்பாரு அவனைத் திட்டிகிட்டேயிருக்கீங்க!" என்று சங்கரின் அம்மா என் அம்மாவைப் பார்த்துக் கேட்டாங்க.


"ஆமாக்கா. போன வருஷம் ஏகதடபுடல் பண்ணி அவனை லீவுலே ஜாலியா இருக்க வைச்சோம். லீவு முடிஞ்சி ஹாஸ்டல்ல கொண்டு போயிவிட்டப்ப, எனக்கும் மனசு ரொம்ப கலங்கிப் போச்சி. மூர்த்தியும் ஒரு மாசம் இங்கே ஜாலியா இருந்ததாலே ரொம்ப வீட்டு நினைப்பு வந்து அழுதுகிட்டேயிருந்தானாம். அவங்க ஆசிரியர் எங்களைக் கூப்பிட்டுச் சொன்னாங்க. அதனாலதான், இந்த வருஷம் அவன் லீவுலே வந்ததும் ஹாஸ்டலே பரவாயில்லைங்கற மாதிரி நினைப்பு வரணம்னு நானும், அவரும் மனசைக் கல்லாக்கிட்டு கடுமையா நடந்துக்கிறோம்."


அம்மா சொல்லச் சொல்ல என் தப்பு எனக்குப் புரிந்தது. இனிமே இதுமாதிரி தப்பா நினைக்கக் கூட மாட்டேன். நல்ல அம்மா நல்ல அப்பா!


- 'தேவி' கணேஷ்


வைர மோதிரம்!


சோழ நாட்டில் உள்ள ஒரு சிற்றூரை ராஜன் என்ற அரசன் ஆண்டு வந்தான்.
அவரிடம் இருந்த அமைச்சர் ஒருநாள் அரசரிடம்-
அரசே! எனக்கு அறிவு இருந்தும்..
அதற்குரிய மரியாதை தரப்படு- வதில்லை. போட்டிகளில் கலந்து கொள்ள என்னையும் அனுமதியுங்கள்!
1


அதைக் கேட்ட அரசர்
அமைச்சருக்கும் வாய்ப்பு தருவோம்!
சரி அமைச்சரே! உங்கள் திறமைக்கு நாளையே ஒரு போட்டி!
நாளை நாட்டில் உள்ள அறிவாளிகளை அரண்மனைக்கு வரச் சொல்லுங்கள்!
நான் கேட்கும் கேள்விகளுக்கு சரியாக பதில் அளிப்பவர்களுக்கு... "வைர மோதிரம்" பரிசு! நீங்களும் கலந்து கொள்ளலாம்


போட்டியன்று அறிவாளிகள் பலர் போட்டியில் கலந்து கொள்ள வந்தனர். அமைச்சரும் ஒருபுறம் இருந்தார்.
பரிசு எனக்குத் தான்..!
போட்டியைத் தொடங்கினார் அரசர்
"உலகில் சிறந்தது எது? இழந்தால் அது மீண்டும் கிடைக்காது!"
ஒருவர்-
அரசே! "பணம்..."
இல்லை "தங்கம்"..!


யாரும் சரியாகச் சொல்ல-வில்லை... அமைச்சரே உங்களுக்குத் தெரியுமா...
அமைச்சர் பதில்-
உலகில் சிறந்தது "உயிர்"...!
அரசர் இதை ஏற்க வில்லை. அப்போது கூட்டத்தில் இருந்த ஒரு சிறுவன்-
யாரும் சரியாகச் சொல்ல வில்லையே.
உலகில் சிறந்தது நேரம் தான். நேரத்தை இழந்து விட்டால் மீண்டும் கிடைக்காது!
சிறுவன் கூறியதைக் கேட்டு மகிழ்ந்தார் அரசர்.
?!
ஆமாம்.. சரியாக கூறினாய்! இந்தா வைர மோதிரம் பரிசு..



என்னப்பா பயன்?

கவிதா வீராகுவாமி

கோவிந்தன் ஒன்பதாம் வகுப்பு மாணவன். அவன் அப்பா தபால் நிலையத்தில் வேலை பார்த்து வந்தார். அவருக்கு மனதே சரியில்லை.

அன்று காலை கோவிந்தனின் வகுப்பு ஆசிரியரை அலுவலகம் வரும் வழியில் பார்த்தார்.

அப்பா, எப்பொழுது ஆசிரியரைப் பார்த்தாலும், "கோவிந்தன் எப்படிப் படிக்கிறான்?" என்று விசாரிப்பது வழக்கம்!

அன்றும் அப்படியே விசாரித்தார். ஆசிரியர் அளித்த பதில் அப்பாவைத் திகைக்க வைத்தது.

"கோவிந்தனின் போக்கு முன் மாதிரி இல்லே. வரவர தொண்ணூறு மார்க் வாங்கும் கோவிந்தன், போன மாதத் தேர்வில் இருபதும், முப்பதும் வாங்கியிருக்கிறான்! ஏன்னு கேட்டா... சரியான பதிலும் சொல்லலே. நீங்களே அவனை விசாரிங்க! உண்மையான காரணத்தைக் கண்டு பிடிச்சு, திருத்தப் பாருங்க! நல்லாப் படிக்கிற பையன். இப்படி ஆயிட்டானேன்னு எனக்கும் வருத்தமாத்தான் இருக்கு" என்றார் ஆசிரியர்.

அப்பா குழம்பிப் போகாமல் எப்படி இருப்பார்?

கோவிந்தன் நல்லா படிக்கிறவனாச்சே! எப்படி அவனுக்கு மார்க் குறைஞ்சது? ஏதாவது கெட்ட பையன்களோட நட்பா? இல்ல டீ.வி. பார்த்துப் பார்த்து படிப்பைப் கோட்டை விட்டுட்டானா? எது எப்படி இருந்தாலும் பையனையே விசாரித்து உண்மையை அறிய வேண்டும்! என்று முடிவு செய்து கொண்டார் அப்பா.

மாலை கோவிந்தனின் வரவை எதிர் பார்த்து அப்பா காத்திருந்தார். புத்தக மூட்டையுடன் வீட்டுக்குள் நுழைந்தான் கோவிந்தன்.

அவன் கை, கால் கழுவி, டிபன் சாப்பிட்டுவிட்டு வரட்டும் என்று பொறுமையுடன் காத்திருந்தார் அப்பா.

எல்லாம் முடித்து, கையில் கிரிக்கெட் மட்டையுடன் வெளியில் வந்தான் கோவிந்தன்.


அப்பா அவனை அழைத்துத் தன் பக்கத்தில் உட்காரச் சொன்னார்.

"காலையில் உங்க வகுப்பாசிரியரைப் பார்த்தேன்!"

அப்பா ஏதோ சொல்ல வருகிறார் என்பதைப் புரிந்து கொண்டு மௌனமாக இருந்தான் கோவிந்தன்.

அப்பா தொடர்ந்தார்.

"நீ இப்ப நல்லாவே படிக்கிறதில்லை



யாமே! மாதாந் திரத் தேர் வில் கூட ரொம்பக் குறைச் சலா மார்க் வாங்கி யிருக்கியாமே! ஆசிரியர் ரொம்ப வருத்தப் பட்டார். ஏன் திடீர்னு இப்படி? வகுப்பிலேயே முதலா வதாக வர்றவனாச்சே நீ? இப்படி மார்க் குறைஞ்சா என்ன அர்த்தம்? பிரச்னை எதுவா இருந்தாலும் சொல்லு? தீர்த்து வைக்கிறேன்."

கோவிந்தன் பதிலேதும் கூறாமல் எங்கேயோ பார்த்தபடி நின்றான்.

"கோவி, அப்பா கேட்கிறது காதில் விழுகிறதா? நீ மக்குப்பையனாக இருந்தால் நான் இதைக் கேட்கவே மாட்டேன். நீ கற்பூரம் மாதிரி. தீப் பொறி பட்டாக்கூட புடிச்சுக்குவே.



"கோவிந்தா! கல்விங்கறது வேலைக்காக மட்டுமே அல்ல! உலக விஷயங்களைப் பத்தி நாம தெரிஞ்சுக்க படிப்பு ரொம்ப ரொம்ப அவசியம். அதோட, மனிதனுக்கு தன்னம் பிக்கை, தைரியம் எல் லாத்தையும் படிப்புதான் கொடுக்கிறது. நம்ம எதிர்வீட்டு கோபால் சரியா படிக்காம, ஏதோ ஒரு மளிகைக் கடையில எடுபிடியா இருந் தானே... தெரியுமா? அந்த மளிகைக் கடை திவாலான உடனே, அவனுக்கு ஒரு வழியும் தெரியாம, தன்னம்பிக்கையை இழந்து ஊரை விட்டே ஓடிட்டான். ஆனா உன் அண்ணன், வேலை கிடைக்காட்டியும், கல்வி தந்த தன்னம்பிக்கையாலும் அத னால் ஏற்பட்ட தைரியத்தாலும் இப்ப தனியா சின்னதா ஒரு தொழில் கூடம் ஆரம்பிக்கப் போறான்! வருங்காலத்தில் எத்தனையோ பேருக்கு வேலை தந்து காப்பாத்தப் போறான்! நாட்டின் தொழில் வளத்தை உயர்த்தத் தன்னால் ஆன பங்கை அவன் செய்யப் போறான். அவன் ஆரம்பிக்கப் போகும் தொழில் கூடம் வளர்ந்து பெருகி இந்தத் திரு நாட்டின் பொருளாதாரம் வளர ஒரு சிறிதாவது உதவப் போகுது கோவிந்தா. படிப்பு தன்னம்பிக்கையை வளர்க்க உதவும். புதிய தொழில்களைத் துவங்க வழிகாட்டும். பண்பை வளர்க்கும். இதுதான் படிப்போட அருமை!"

உனக்கு என்ன கஷ்டம்? ஆசிரியர் நடத்தறது புரியலையா? அம்மா, படிக்க முடியாத அளவுக்கு வீட்டு வேலை தராங்களா? என்ன உனக்கு ஆச்சு ராஜா."

ஏதோ சொல்ல நினைத்தாலும், தயக்கத்தினால் "ஒண்ணுமில்லப்பா!" என்று மழுப்பினான் கோவிந்தன்.

"ஏதோ சொல்ல வர்றே! சொல்லுப்பா என்னன்னு?" என்று மேலும் வற்புறுத்தி, அன்பாகக் கேட்டார் அப்பா.

அதற்கு மேலும் பதில் சொல்லாமல் இருக்க முடியவில்லை கோவிந்தனால். மடை திறந்த வெள்ளம் போல் கொட்டினான்.


"நான் எதுக்குப்பா நல்லா படிக்கணும்; முதலாவதா வரணும்? ஏன் நிறைய மார்க் வாங்கணும்? அண்ணன் கஷ்டப்பட்டு, காலேஜ் எல்லாம் படிச்சாரு! என்ன பிரயோஜனம்? இந்த ஆறுமாசமா வேலை தேடி எப்படி அலையறாரு! எனக்கும் இதே நிலைமைதானே? நான் நல்லா படிச்சு, ரேங்குல வந்தா என்னப்பா பயன்?"

அப்பாவுக்கு, அவன் ஏன் படிக்க வில்லை என்பதற்குக் காரணம் புரிந்தது.

'கல்வி என்பது வேலைக்காக மட்டுமே' என்பது அந்த இளநெஞ்சில் எவ்வளவு ஆழமாகப் பதிந்து விட்டது!

கோவிந்தன் முகத்தில் புரிந்து கொண்ட திருப்தி நிறைந்தது.

"மன்னிச்சுருங்கப்பா. எனக்கு இதெல்லாம் தோணலே. இனிமே நான் பழையபடி நல்லா படிப்பேன். அடுத்த வருஷம் பத்தாவதில் மாநிலத்திலேயே முதலாவதா வர கடுமையா முயற்சி செய்யப் போறேன்பா!" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறினான். அப்பாடா என்று அப்பா மகிழ்ச்சிப் பெருமூச்சுவிட்டார்.



எழுத்துக் கூட்டி
உரக்கப் படிக்க
ஓர் ஈசாப் கதை

சும்மா

ஒரு கழுதை வயல்வெளியில் மேய்ந்து கொண்டிருந்தது. அருகே ஒரு சேவலும் இருந்தது. கழுதை மேயும்போது வெளியே வரும் புழு பூச்சிகளை சேவல் இரையாக்கிக் கொண்டிருந்தது.


பசியெடுத்த ஒரு சிங்கம், அந்தப் பக்கமாக இரை தேடி வந்தது. அதன் கண்களில், மேய்ந்து கொண் டிருந்த கழுதை பட்டு விட்டது. 'கொழுத்த கழுதை, நல்ல இரை' என்று சிங்கம், கழுதையின் மேல் பாயப் போனது.

சிங்கம் பாய முனையும் போது தான், சேவல் அதைப் பார்த்தது. பயத்தால் அதன் குரல் குலைந்தது. பயங்கரமாக; கர்ணகடூரமாக அது கூவியது.

சேவலின் விசித்திரமான கூவல், சிங்கத்தைத் திகைக்க வைத்தது. அதுவரை அப்படிப்பட்ட ஒரு விசித் திரமான கூவலை சிங்கம் கேட்டதே இல்லை. அதனால் அது சேவலை ஏதோ வினோதமான பறவை என்று எண்ணிக் கொண்டது; திகைத்தது; பயந்தது.

பயம் தெளியாத சேவல், மறுபடி அதே விசித்திரக் குரலில் திரும்பத் திரும்பக் கூவியது. அரண்டுபோன சிங்கம், கழுதையை ஒன்றும் செய் யாமல் விட்டு விட்டு ஓட்டம் பிடித்தது!

தன்னுடைய கம்பீரமான தோற் றத்தைப் பார்த்துத்தான், தன்னை



விடக்கூடாது!

எதுவும் பண்ணாது பயந்து போய் சிங்கம் ஓடுகிறது என்று கழுதை எண்ணிக் கொண்டது. அந்தப் பெருமையால் கர்வம் தலைக்கேறி விட்டது!

"அந்த சிங்கப் பயலை சும்மா விடக் கூடாது" என்று சிங்கத்தின் பின்னாலேயே ஓடியது.

"கழுதையாரே, சிங்கம், என்னுடை காட்டுத்தனமான கூவலைக் கேட்டுத்தான் அரண்டு ஓடுகிறது. சிங்கத்தைத் துரத்திக் கொண்டு போகாதீர்கள். ஆபத்தை வரவழைத்துக் கொண்டு அழிந்து போகாதீர்கள்" என்று கத்தியது சேவல்.

கழுதை, சேவலின் புத்திமதியைக் கேட்கவில்லை. "சிங்கப் பயலே, எங்கே போனாலும் விடமாட்டேன்! உன்னை ஒழித்துக் கட்டி விட்டுத் தான் மறுவேலை" என்று கத்திக் கொண்டே சிங்கத்தைத் தொடர்ந்து ஓடியது

சேவலின் கூவல் கேட்காத தொலைவுக்கு ஓடிப் போனதும் சிங்கம் திரும்பிப் பார்த்தது. பின்னாலேயே கத்திக் கொண்டு ஓடி வந்த கழுதையை இரை யாக்கிக் கொண்டது.

"கழுதையாரே, கர்வம் கண்களை மறைக்க உங்கள் முடிவை நீங்களே தேடிக் கொண்டீர்களே!" என்று நண்பனுக்காக வருந்தியது சேவல்.

முட்டாள்தனமான கர்வம் பெரிய ஆபத்தில் முடியும்.



• சா. வீணா

சாதனை செய்பவர்கள் எல்லாம் பெரியவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சிறுவரும் கூடத் தங்கள் அளவில் சாதனை புரிந்து வியக்க வைக்கக் கூடியவர்கள்தான். மாதிரிக்கு இதோ சில.....

சின்னச் சின்னச் சிறுவரின் அரிய பெரிய சாதனை!

பரிசை நன்கொடை தந்த சிறுமி!

தனது தனித்திறமையைப் பாராட்டி வழங்கப்பட்ட இரண்டாயிரம் ரூபாய் பரிசை, பத்தாவது (இப்பொழுது +I) வகுப்பு மாணவியான ச. வீணா, தான் படித்து வந்த மதுரை M.N.V. ஜெயராஜ் அன்னபாக்கம் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கே அறக்கட்டளை நிறுவக் கொடுத்து விட்டாள்! மதுரை காமராசர் பல்கலைக் கழகமும் Rotastex-95 ம் இணைந்து நடத்திய அறிவியல் கண்காட்சியில்தான், வீணாவின் அறிவியல் திறமைக்காக ரூபாய் இரண்டாயிரம் பரிசு வழங்கப் பட்டது. அறிவியல் திறமைக்காக முதல் பரிசு பெற்று எல்லோரது கவனத்தையும் கவர்ந்த வீணா, அந்த ரொக்கப் பரிசைத் தனது பள்ளிக்கே அன்பளிப்பாக வழங்கி எல்லோரையும் திகைக்கவைத்து விட்டாள்! வீணாவின் திறமைக்கு ஒரு பாராட்டு! அவளுடைய நல்ல மனத்துக்கு ஒரு பாராட்டு!



• ஆர். சுகன்யா மாவட்டத் தலைவருடன்

பள்ளிச் சிறுமிகள் பெற்ற புரஸ்கார் விருது!

சென்னையில் கலைத் தொண்டாற்றி வரும் தெலுங்கு அகாடமி சென்ற ஆண்டு இரு பள்ளிச் சிறுமிகளுக்குப் புரஸ்கார் விருது வழங்கிப் பாராட்டியுள்ளது. இவர்கள்தான் ஐஸ்வர்ய லக்ஷ்மி, தாரா மிருதுளா. சென்னை செட்டிநாடு வித்யாரம்ப பள்ளி மாணவிகள். புகழ் பெற்ற இசைக் கலைஞர் வைகை ஞானஸ்கந்தனிடம் பயிற்சி பெற்ற இவர்கள் ஏழாவது வயதிலேயே மேடை ஏறி விட்டார்கள். ஏராளமாக மேடைக் கச்சேரிகள் செய்து வரும் இவர்கள் மலேஷியாவுக்கும் சென்று பாடி, பாராட்டுப் பெற்று வந்திருக்கிறார்கள். அப்பாவும், அம்மாவும் டாக்டர்கள் என்றாலும் இவர்கள் விரும்புவது இசையையே. இசை உலகில் இவர்கள் பெயர் கோபாலபுரம் சகோதரிகள். இவர்கள் சாதனை படைக்கும் நாள் நெருங்கி வருகிறது.

ஒன்பது வயதில் மேடை ஏறியவன்!

வயலின் கற்க நெடுந் தொலைவு பயணம் செய்து அசத்தியவர்கள் வரிசையில் பேட்டை சுக. பாவலனுக்குத் தனியான இடம் உண்டு. திருநன்னாரைச் சேர்ந்த விழிதியூரில் உள்ள இந்தப்



• ஐஸ்வர்யலக்ஷ்மி, தாரா மிருதுளா

பதிமூன்று வயதுச் சிறுவன், வயலின் கற்பதில் உள்ள ஆர்வம் காரணமாக தினமும் 70 கி.மீ. பயணம் செய்கிறான்! இப்படி வாரத்தில் 3 நாட்கள். மற்ற நாட்களில் வீட்டிலேயே அசுரப் பயிற்சி. இது வீண் போகவில்லை. ஒன்பது வயதிலேயே மேடை ஏறிவிட்ட இந்தப் பாவலன், ஏராளமாகக் கச்சேரிகள் செய்து அசத்தி வருகிறான். மத்திய அரசும் இந்த இளைய கலைஞனைப் பாராட்டியிருக்கிறது. இந்த இளம் கலைஞனுக்கு மேடைக் கச்சேரிகளில் சுருதி போடுபவன் இவனிடம் வயலின் பயிலும் இவனது தங்கை சுகநிலா. வகுப்பிலும் முதல் நிலையில் இருக்கும் பாவலன் (நிலாவும்) இசை உலகில் தனி முத்திரை பதிக்கப் போகும் காலம் வெகு தொலைவில் இல்லை!

• சுக. பாவலன், சுகநிலா



பதினோறு வயது ஆசிரியை!

எந்த ஒரு நிகழ்ச்சியானாலும் பொது மக்களுடைய கவனத்தை ஈர்க்கவும், அவர்களை வரவழைத்து ஒன்று கூட வைக்கவும் இனிமையான பாடல்களைப் பாடுவது அவசியமாகி விட்டது. நிகழ்ச்சியின் நோக்கத்தைப் பற்றி சந்தம் நிறைந்த பாடல், மனம் கவரும் மெட்டு, இனிய குரல் வளம் எல்லாம் நிறைந்து விட்டால் நிகழ்ச்சிக்கு மக்கள் தாங்களே விரும்பி வருவார்கள். இந்த 'எல்லாம்' நிறைந்த சிறுமிதான் ஆர். சுகன்யா. பெரியார் மாவட்டம் காங்கேயம் வட்டத்தில் உள்ள 'நத்தக் காடையூரை'ச் சேர்ந்தவர். அறிவொளி இயக்க நிகழ்ச்சிகளில் இவரது அறிவொளிப் பாடல்கள் கண்டிப்பாக இருக்கும். காங்கேயம் கார்மல் மகளிர் உயர் நிலை பள்ளியின் ஆறாம் வகுப்பு மாணவியான இவர், தானே அறிவொளி இயக்க வகுப்புகளை நடத்த அனுமதி பெற்றுள்ளார் என்பது வியப்பான உண்மை. எல்லோரது பாராட்டுகளையும் பெற்றுள்ள இந்த இளங்குயிலின் தேன் குரல் தமிழ் நாட்டின் எல்லா மாவட்ட அளவிலான அறிவொளி நிகழ்ச்சிகளிலும் ஒலிக்கப் போவதை விரைவில் எதிர் பார்க்கலாம்!

• ஸ்ரீதர்



5 கார், 50 கிலோ, 500 ஓடுகள்!

தரையில் கையை நீட்டிப் படுத்திருந்த அந்த 8 ஆம் வகுப்புச் சிறுவனின் உள்ளங்கையில் ஐந்து அம்பாசிடர் கார்களின் சக்கரங்கள் அடுத்தடுத்து ஏறி இறங்கின. அவன் நெஞ்சின் மீது 50 கிலோ எடையுள்ள கருங்கல் வைக்கப்பட்டது. அவனுடைய மாஸ்டர் அதை இரும்புச் சுத்தியால் அடித்து அடித்து நொறுக்கினார். 500 ஓடுகளை சிறுவன் தன் கைமுட்டியால் அடித்து நொறுக்கினான். இத்தனை பெருமைக்கும் காரணமான அந்தச் சிறுவன் எட்டாம் வகுப்பு மாணவனான ஸ்ரீதர். ஊர் மாயவரம். பரிசுகளும் பாராட்டும் குவிந்தன. கறுப்பு பெல்ட் பெற்ற ஸ்ரீதர், தன் மாஸ்டர் ராஜவேலுக்கு அகில இந்திய அளவில் பெருமை தேடித் தரும் நாள் விரைவில் வரப் போகிறது!

கேட்கட்டுமா டாக்டர்?

எம்.கே. வேங்கவேல், சேலம்.

? **பற்கள் பலம் பெற என்ன வகை காய்கறிகளைச் சாப்பிட வேண்டும், டாக்டர்?**

! பற்கள் பலம் பெறுவதற்கு கால்சியம், பாஸ்பரஸ் என்ற தாதுக்கள் அவசியம். இவை பால், தயிர், நெய், வெண்ணெய், பால்கோவா, பசலைக்கீரை, அவரைக்காய், டர்னிப், காலிபிளவர் இலைகள், வெங்காயம், மீன், முட்டை, இறைச்சி போன்றவைகளில் நிறைந்துள்ளன. இவற்றை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொண்டால் பற்கள் பலம் பெறும்.

● *ஜி.ஜி. கிருஷ்ணன், விசலூர் - I.*

? **காய்ச்சல் உள்ளவர்கள் இளநீர் குடிப்பதால் காய்ச்சலின் தாக்கத்தைக் குறைக்க முடியுமா, டாக்டர்?**

! முடியும். காய்ச்சலின் போது உடம்பில் ஏற்படும் அதீத வெப்பத்தால் உடம்பில் உள்ள திரவங்களும் அயனிகளும் விரிவடைந்து வியர்வை மூலம் வெளியேறுகின்றன. அதனால்தான் காய்ச்சல் உள்ளவர்களுக்குக் களைப்பு ஏற்படுகிறது. இந்தச் சமயத்தில் இளநீர் குடித்தால் களைப்பும் தீரும். காய்ச்சலும் குறையும். எப்படித் தெரியுமா? இளநீரில் நிறைய அயனிகள் (தாதுக்கள்) உள்ளன. இவை உடம்பிலிருந்து வெளியேறிய அயனிகளை ஈடுசெய்கின்றன. மேலும், இளநீர் உடம்புக்குள் சென்றதும் உடம்பின் திரவநிலை அளவு சற்று அதிகரிக்கிறது. இதனால் உடம்பின் வெப்பம் பரவலாக்கப்படுகிறது. இதன் விளைவாகக் காய்ச்சல் குறைகிறது.

க. முருகேசன், அந்தமான்.

? **டி.வி.யை அதிகமாகப் பார்த்தால் கணக்கில் ஆர்வம் குறையும் என்று நான் ஒரு புத்தகத்தில் படித்தேன். இது உண்மையா, டாக்டர்?**

! உண்மையில்லை, தம்பி! டி.வி.யை அதிகமாகப் பார்த்தால் பார்வை குறையலாம். கணக்கில் ஆர்வம் குறைய வாய்ப்பில்லையே...!

● *கு. ஜெயேந்திரகுமார், தத்தம்.*


? **என் மாமாவுக்கு சாதாரண இருமல், சளி, காய்ச்சலுக்காக டாக்டரிடம் சென்ற போது, 'டெட்ராசைக்ளின்' மாத்திரைகளை எழுதிக் கொடுத்தார். பிளேக் நோய்க்குத் தரப்படும் இந்த மாத்திரைகளை சாதாரணக் காய்ச்சலுக்கும் பயன்படுத்தலாமா, டாக்டர்?**

! பயன்படுத்தலாம், தம்பி. தவறில்லை. 'டெட்ராசைக்ளின்' என்பது ஒரு நுண்ணுயிர்க் கொல்லி மருந்து (ANTIBIOTIC). இது பலவித பாக்டீரியா கிருமிகளை அழிக்கக்கூடியது. சாதாரண இருமல், சளியை உண்டாக்குகின்ற பாக்டீரியாக்களையும் இது ஒழிக்கும்; பிளேக் நோயை உண்டாக்குகின்ற பாக்டீரியாக்களையும் இது அழிக்கும். எனவே, இரண்டுக்குமே இந்த மாத்திரைகளைப் பயன்படுத்த மருத்துவர்கள் பரிந்துரை செய்வார்கள். இதனால் கெடுதல் ஒன்றும் இல்லை. பயப்பட வேண்டாம், குமார்!

● *எஸ். நாகராஜன், மேலப்பாதி.*

? **இரத்ததானம் செய்ய விரும்புகிறவர்கள் தங்களுடைய ஊர்களில் 'இரத்த வங்கி' இல்லாத போது என்ன செய்வது?**

நல்ல கேள்வி, நாகராஜன்! இரத்தவங்கி இல்லாத சமயங்களில், இரத்ததானம் செய்ய விரும்புகிறவர்கள் தங்களுக்குத் தெரிந்த மருத்து





குண்டைக் குறைக்க என்ன வழி?

வர்களிடமோ அல்லது அரசாங்க மருத்துவ மனையிலோ தங்கள் பெயர், விலாசம், இரத்த வகை ஆகியவற்றைப் பதிவுசெய்து கொள்ளலாம். அல்லது அடிக்கடி இரத்ததான முகாம்களை நடத்துகின்ற ரோட்டரிச் சங்கம், அரிமா சங்கம், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பொது நலச் சேவை மையங்களில் பெயரைப் பதிவு செய்து கொள்ளலாம். இவர்கள் இரத்தம் தேவைப்படும் போது இரத்ததானம் செய்ய விரும்புகிறவர்களை நேரில் அல்லது தொலை பேசியில் அழைத்து இரத்தம் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

பி. கல்யாணசுந்தரம், கிண்டி.

? எனக்கு பல்லில் ஓட்டை விழுந்து விட்டது. மற்ற பற்களிலும் அது பரவுகிறது. இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள், ப்ளீஸ்!

! உடனே ஒரு பல் மருத்துவரைப் பார்க்க வேண்டும். பல்லில் விழுந்துள்ள ஓட்டை சொத்தைப் பல்லுக்கு அறிகுறி. அதை ஒருவித சிமெண்ட்டால் அடைத்து விட முடியுமா என்று முயற்சிக்க வேண்டும். இயலாவிட்டால், ஓட்டை விழுந்த பல்லை அகற்றி விட வேண்டும். அப்போதுதான் அது மற்ற பற்களுக்குப் பரவாது. சரி, கல்யாணசுந்தரம்... பற்களை சுத்தமாகப் பராமரித்தால் பற்களில் ஓட்டை விழுவதை எளிதில் தவிர்த்து விடலாமே! இனிமேல், செய்வாயா?

● *எஸ். கதிர்வேல், வீரபாண்டி.*


? உடல் குண்டாக இருப்பதைக் குறைக்க என்ன வழி?

! உடல் குண்டாக இருப்பதைக் குறைக்க உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். குறிப்பாக கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளை (உ.ம்) நெய், வெண்ணெய், எண்ணெய்ப் பலகாரங்கள், முட்டை (இறைச்சி) தவிர்க்க வேண்டும். தினமும் தவறாமல் உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும். நடத்தல், ஓடுதல், சைக்கிள் ஓட்டுதல், நீந்துதல், ஸ்கிப்பிங் ஆடுதல் ஆகியவை நல்ல பயிற்சிகள். இந்தப் பயிற்சிகளின் போது எல்லா உடல்தசைகளும் அசைகின்றன. அப்போது தோலுக்கு அடியில் உள்ள கொழுப்புத் தசை கரைகிறது. இதனால் உடல் எடை குறைகிறது. குண்டாக இருக்கும் உடல் இளைத்து விடுகிறது.

டாக்டர். கு. கணேசன்


வெட்டுக்கிளி

ஆழி




உயிரினங்களில், 'கணுக்காலிகள்' என்னும் பிரிவைச் சேர்ந்தது வெட்டுக்கிளி. வெட்டுக்கிளிக்குக் கணுக்களாகப் பிரிவுபட்ட மூன்று ஜோடிக் கால்கள் உண்டு. இவற்றில் பின்ஜோடிக் கால்கள் எல்லாவற்றையும் விட நன்கு வளர்ச்சி பெற்றவை. இவையே நீண்ட வலிமையான கால்கள். இவற்றால் வெட்டுக்கிளி, தரையிலிருந்து எம்பி நெடுந்தூரம் தாவிக் குதிக்கிறது.


வெட்டுக்கிளி எல்லாவிதமான தாவரங்களையும் தின்றுவிடும். பொருள்களைப் பிடிப்பதற்கு முன்னங் கால்களைப் பயன்படுத்துகிறது. அதன் உமிழ்நீர் இரையை விழுங்குவதற்கு மட்டுமல்லாது, ஜீரணமாவதற்கும் உதவியாக இருக்கிறது.



வெட்டுக்கிளிக்கு இரண்டு பெரிய கூட்டுக் கண்கள் உண்டு. இவற்றால் அது அதிகப் பரப்பளவைப் பார்க்க முடியும். வெட்டுக்கிளிக்குப் பல நிறங்களின் வேறுபாடுகளும் நன்கு தெரியும்.



வெட்டுக்கிளியின் 'காதுகள்' அதன் அடிவயிற்றுக்குக் கீழேதான் இருக்கின்றன. ஒரு பறவை தரையில் நடந்தால்கூட, அந்த ஓசை, வெட்டுக்கிளிக்குத் துல்லியமாகக் கேட்கும்.





வெட்டுக்கிளிகளில் இரண்டு வகைகள் இருக்கின்றன.



பழுப்பு நிறமும், குட்டையான உணர் கொம்பும் உள்ள 'லோகஸ்ட்'.


பச்சை நிறமும், நீளமான உணர் கொம்பும் உள்ள 'கிராஸ்ஹோப்பர்'.






கோடை காலத்தில், பெண் வெட்டுக்கிளி, தன் பின்வயிற்றின் நுனியால் தரையைக் குடைந்து, அதில் முட்டையிடுகிறது. அடுத்த ஆண்டு இளவேனிற் காலத்தில் முட்டைகளிலிருந்து லார்வாப் பூச்சிகள் வெளிவருகின்றன. இறக்கையில்லாத இவற்றால் பறக்க முடியாது. தத்தித் தத்திச் செல்லுகின்றன. கூட்டுப்புழு நிலையை அடையாமலேயே இந்தப் பூச்சிகள் 5 முறை தோலுரித்து, இறக்கை முளைத்து முதிர்ந்த பூச்சிகளாக மாறுகின்றன.

வெட்டுக்கிளியின் இரத்தம் தெளிவான வெள்ளை நிறம்!




வெட்டுக்கிளிக்கு, 'ஸ்டார்லிங்' என்னும் கருமைனாப் பறவைகள் பரம எதிரி. ஒரு தடவை, உஸ்பெகிஸ்தானில் ஏராளமான வெட்டுக்கிளிகள் பயிர்களை அழித்த போது, சுமார் 20,000 ஸ்டார்லிங் பறவைகளைவிட்டு 100 டன்களுக்கு மேலான வெட்டுக்கிளிகளைத் தின்று தீர்க்கச் செய்தார்கள்!






பச்சை நிற வெட்டுக்கிளி, தன் எதிரிகளைக் கண்டுவிட்டால், சட்டென்று தன் முன்னங்கால்களையும் தலையையும் ஊன்றி, பின்பகுதியை மேலே தூக்கிக் கொண்டு, தலை கீழாகப் புற்களோடு புற்களாக நின்று தப்பித்துவிடும். அதன் எதிரிகள்: பறவைகள், மூஞ்சூறுகள், சுண்டெலிகள், தேனீக்கள், வண்டுகள்.

வெட்டுக்கிளிகளின் கூட்டத்திற்கு 'ஸ்வாம்' என்று பெயர். வெட்டுக்கிளிகள் லட்சக் கணக்கில் கூட்டமாகச் சேர்ந்துவிட்டால் பயங்கரம் தான். ஒரு கோடி வெட்டுக்கிளிகள் ஒன்று சேர்ந்து கிளம்பிவிட்டால், ஒரு நாளில் சுமார் 2 லட்சம் டன் உணவுப் பயிர்களை அழித்துவிடும்! சில ஆண்டுகளுக்கு முன்பு எதியோப்பியா நாட்டில், வெட்டுக்கிளிகள் 10 லட்சம் மக்களுக்குத் தேவையான உணவுத் தானியங்களைத் தின்று அழித்து விட்டன!







ஒன்று சேர்ந்து போகும்போது, வெட்டுக்கிளிகள் தரைமட்டத்திலிருந்து சில கி.மீ. உயரத்திற்கு மேல் பறக்கின்றன. அப்போது அவற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீட்டர்கள். அவை பறந்து செல்லும்போது சூரிய வெளிச்சம் மறைக்கப்பட்டு, மேகமூட்டம் போல் ஆகிவிடும்!

இந்த வெட்டுக்கிளிகளின் படையெடுப்பு மிகவும் பயங்கரமாக இருந்த ஆண்டு 1889. அவை 3200 கி.மீ.தூரம் குறுக்கே செங்கடலைக் கடந்து சென்றன. அந்தக் கூட்டத்தில் இருந்த வெட்டுக்கிளிகளின் எண்ணிக்கை சுமார் 25000 கோடி என்று கருதப்பட்டது!


வெட்டுக்கிளிக் கூட்டம் ஒரு நாளில் 80 கி.மீ.தூரம் கூடப் பறந்துபோகும்! அட்லாண்டிக் பெருங்கடலை அவை ஐந்தே நாட்களில் கடந்ததாகப் புள்ளி விவரம் இருக்கிறது!




பச்சைநிற வெட்டுக்கிளிகள், பாலைவனத்தைக் கடக்கும்போது, இடத்திற்கேற்றபடி, அவற்றின் நிறம் பழுப்பாக மாறிவிடுகிறது!




ஜூலை மாதத்தில் ராஜஸ்தானிலும் குஜராத்திலும் வெட்டுக்கிளிகளின் தாக்குதல் அதிகம். உலகில் 65 நாடுகளில் வெட்டுக்கிளிகளின் தாக்குதல்கள் இருக்கின்றன.



ஜெர்மனியைச் சேர்ந்த 'கான்ஸ்டன்' பல்கலைக் கழக விஞ்ஞானிகள், வெட்டுக்கிளியின் நரம்பு மண்டலம் எவ்வாறு செயல்படுகிறது, அது ஒரு விநாடிக்கு எத்தனைத் தடவைகள் சிறகடிக்கிறது என்பதை நுணுக்கமாக ஆராய்வதற்காக 6 செ.மீ. நீளமுள்ள ஒரு வெட்டுக்கிளியின் முதுகில் 0.4 கிராம் எடையுள்ள ஒரு 'டிரான்ஸ்மிட்டரை ஒட்ட வைத்தார்கள். இதில் உள்ள மிகச்சிறிய ஆன்டெனா மூலம் அதன் அசைவுகள் உணரப்பட்டு, காற்றின் மூலம் கம்ப்யூட்டர் ரிசீவர்களில் பதிவாகும்.



உயிரினங்களில், அதிக உயரம் தாண்டக்கூடிய சக்தி, வெட்டுக்கிளிக்குத்தான் உண்டு. அது தன் உடலின் நீளத்தைப்போல் 500 மடங்கு உயரம் தாண்டும். அதே விகிதத்தில் மனிதன் தாண்ட வேண்டுமானால், அவன் 825 மீட்டர் உயரம் தாண்ட வேண்டும்!



பொய்க்கு பேனா?

மாரியப்பனைத் திகைப்புடன் பார்த்தனர் நண்பர்கள்.

''டேய், ரெயின் ஃபாதர்! என்னடா இன்னைக்குச் சீருடை எல்லாம் ஒரே பள பளப்பா ஜொலிக்குதே!'' என்றான் ஆனந்தன்.

"பட்டுத் துணியா?" என்று தொட்டுப் பார்த்துக் கேட்டான் முத்துமணி.

"ஆமாம்! ஃபாரின் சில்க்! நம்ம நாட்டுப் பட்டுக்கு இவ்வளவு பள பளப்பு ஏது? இது சிங்கப்பூர் பட்டு" என்றான் மாரியப்பன், பெருமையோடு.

''நல்லாத்தான் இருக்கு. ஆனால், பள்ளிச் சீருடை எல்லாருக்கும் ஒரே மாதிரித் துணியிலே இருந்தால் தானே நல்லது? ஒரு பையன் சில்க், இன்னொருவன் கதர், மற்றொருவன் கைத்தறி, வேறு ஒரு பையன் பாலியஸ்டர்... இப்படி ரகம் ரகமா இருந்தால், அது சீராயிருக்குமா?" என்றான் முத்துமணி.

"நீ ஒரு பொறாமைக்காரன்டா. இருக்கிறவன் போட்டுக்கிட்டிருக்கான். நீ ஏன் வயிறு எரியறே!" என்று அவனைக் காய்ந்தான் ஆனந்தன்.

தன் உடைகளைப் பார்த்து அவர்கள் அவ்வாறு குழம்பிக் கொள்வதும், சண்டை போட்டுக் கொள்வதும் மாரியப்பனுக்கு மிகவும் பிடித்திருந்தது. அதை வெளிப்படையாகவே சொன்னான்.

"எனக்குத் தெரியும்டா. இப்படியெல்லாம் பேசுவீங்கன்னு. அடிச்சிக்காதீங்கடா. நான் உங்க மூனு பேருக்கும் ஆளுக்கு ஒரு பேனா தர்றேன்'' என்று சொல்லிக் கொண்டே தன் பையைத் திறந்து மூன்று புதிய பேனாக்களை எடுத்து அவர்களுக்குக் கொடுத்தான்.

"டேய் எங்களுக்கே வாடா? சும்மா சொல்றியா...? சும்மாவே கொடுக்கறியா?'' என்றான் கேசவன்.

"வெளிநாட்டுப் பேனாவாடா. ஜப்பான்னு போட்டிருக்கேடா!" என்று கேட்டான் ஆனந்தன்.

"எவ்வளவு அழகா, கவர்ச்சியாயிருக்குடா! விலை என்ன இருக்கும்?" என்று சீண்டினான் முத்துமணி.

"அன்பளிப்பு நான் கொடுக்கிறேன். என்ன விலையாயிருந்தால் உங்களுக்கென்ன! ஆனால் ஒன்னு, நாளைக்குத் தேர்வு இருக்கு இல்லே. நீங்க மூனு பேரும் இந்தப் புத்தம் புது பேனாவாலேதான் பரீட்சை எழுதணும்" என்றான் மாரியப்பன். மூவரும் தலையாட்டினர்.

அப்போது காசி வகுப்புக்குள் நுழைந்தான். மற்றும் சிலரும், தங்கள் இருக்கைகளில் வந்து அமர்ந்தார்கள். வகுப்பு தொடங்க, பத்து நிமிடம் இருந்தது.

"என்னடா ஆச்சு, உன் யூனிஃபார்ம்?"

பூவை அமுதன்

என்று கேட்டுக் கொண்டே காசியை நெருங்கினான் கேசவன்.

''கிழிஞ்சி போயிருக்கும். இல்லே... தோய்ச்சுப் போட்டிருப்பான். ஈரம் காஞ்சிருக்காது'' என்று கிண்டல் செய்தான் மாரி.

''இன்னைக்கு நீ மாட்டிக்கிட்டே. அபராதம் கட்டணும். ஆசிரியர் விடுவாரா?'' என்று அவனுக்குப் பயம் ஊட்டுவதைப் போல் சொல்லிக் கொண்டே காசியின் தலையில் வைத்துக் கலைத்து விட்டான் முத்துமணி.

''ஒண்ணுமில்லே...'' – காசி மேலே பேசுவதற்குள் முந்திக் கொண்டு சொன்னான் மாரி. ''வேற யூனிபார்ம் ஒண்ணும் இல்லேங்கிறியா?''

''அது இல்லை. எனக்கு இன்னைக்குப் பிறந்தநாள். அதனாலே...''

''அபராதம் கட்ட வந்திருக்கே... பிறந்த நாளும் அதுவுமா? பணம் வச்சிருக்க மாட்டியே, பாவம் நீ?'' என்று பரிகசித்தான் ஆனந்தன்.

''பிறந்த நாள் அன்னிக்கு மட்டும் புது டிரஸ் போட்டுக்கிட்டு வரலாமுன்னு அனுமதிச்சிருக்காங்களே!'' என்று பரிதாபமாக அவர்களைப் பார்த்தான் காசி. ஒரு வேளை தான்தான் தவறாக எண்ணிக் கொண்டோமோ என்று அவனுக்குச் சந்தேகமே வந்து விட்டது.

''ஓ.. இதுதான் உன் பிறந்த நாள் புத்தாடையா? சாதாரண துணி மாதிரிதானே தெரியுது...?'' என்றான் கேசவன்.

''உன் அப்பாவுக்குத் தைத்ததா உனக்குத் தைச்சதா? 'தொளதொளன்னு இருக்கே?'' என்று சிரித்தான் மாரியப்பன்.

காசி மௌனமாகவே இருந்தான் மனத்துக்குள் அழுதபடி.

''ஆமாம்... என் பிறந்த நாளன்னிக்கு, நான் எல்லோருக்கும் கேக், சாக்லெட் எல்லாம் கொடுத்தேனே.. நீ என்ன கொண்டு வந்திருக்கே?'' என்று கேட்டான் மாரியப்பன்.

அவன் அப்படிக் கேட்டவுடனேயே காசியின் முகம் மலர்ந்து விட்டது. பெருமையோடு தன் பையில் கையை விட்டுக் கொண்டே சொன்னான், ''வகுப்பிலே எல்லாருக்கும் பால் பாயின்ட் பேனா தரப் போறேன். இதுக்காகவே நான் கொஞ்சம் கொஞ்சமா பணம் சேர்த்து வந்தேன்.''


காசி, கைகொள்ளாத அளவு பால் பாயிண்ட் பேனாக்களைப் பையிலிருந்து எடுத்துக் காட்டினான்.

''எல்லாம் ஒரே கலராயிருக்கே! எங்கே பிடிச்சே? ஒண்ணு என்ன... எட்டணாவா? ஒரு ரூபாயா? இல்லே ரூபாய்க்கு மூணா?''

மாரியைத் தொடர்ந்து கேசவன் சீண்டினான், ''எங்கே பிளாட்பாரத்திலா வாங்கினே?''

காசியின் முகம் சுருங்கி விட்டது. பள்ளி மணி ஒலிக்கவே இருக்கைக்குச்





சென்று அமர்ந்தனர்.

"நீயும் உன் பிறந்த நாள் பரிசும்! இதைப் போய்க் கொண்டு வந்திருக்கியே பெருமையா? நான் பாரு... நண்பர்கள் மூணு பேருக்கும் ஜப்பான் பேனா கொடுத்திருக்கேன். நாளைக்கு ஜம்முன்னு அதிலேதான் பரீட்சை எழுதப் போறாங்க" என்று காசியின் காதருகே கத்தி விட்டுத்தான், தன் இடத்துக்குப் போய் அமர்ந்தான் மாரியப்பன். தலையைக் குனிந்து கொண்டான் காசி.

மறுநாள், மாரி தந்த பேனாவை மறவாமல் மையிட்டு நிரப்பி எடுத்துக் கொண்டு தேர்வு எழுத வந்தார்கள் மூவரும்.

பிறந்த நாளில் எளிய பரிசாகக் காசி தந்த பால் பாயின்ட் பேனாவையும் சிலர் கொண்டு வந்திருந்தார்கள்.

கேசவன் தன் சட்டைப் பையிலே இரண்டு எழுதுகோல்களையுமே வைத்திருந்தான். அதைப் பார்த்ததுமே மாரியப்பனுக்குச் சிரிப்பு வந்து விட்டது.

"என்னடா கேசவா! குதிரை பக்கத்திலே கழுதை நிற்கிற மாதிரியிருக்கே உன் பாக்கெட்டிலே!" என்று கேலி செய்தான் மாரி.

கேசவனுக்குப் புரிந்ததோ, இல்லையோ! அவன் பக்கத்திலிருந்த காசி அதைச் சீக்கிரமே புரிந்து கொண்டான்.

"புத்திசாலித்தனமா நான் கொடுத்த புதுப்பேனாவிலே, எழுது! கண்டதிலே எழுத ஆரம்பிச்சிக் கையில் மையடி வேணாம்; நேரத்தையும் வீணாக்க வேணாம்!"


எச்சரிக்கை செய்வதைப் போல் சொல்லி விட்டு, எரிச்சலாகக் காசியைப் பார்த்தான் மாரி.

கால் மணி நேரம் கூட ஆகியிருக்காது. ஆனந்தன் அடிக்கடி பேனா பிடித்த கையை உதறிக் கொண்டிருந்தான். கேசவன் பேனா நிப்பின் முனையை விரலால் தேய்த்து மை வருகிறதா என்று பார்ப்பதும், பின்பக்கம் திரும்பி மாரியைப் பார்ப்பதுமாக இருந்தான். அவன் முகம் கடுப்பாக இருந்தது.

முத்துமணி டெஸ்க்கில் மையைக் கொஞ்சமாகக் கொட்டி, அதைத் தொட்டுத் தொட்டு எழுதிக் கொண்டிருந்தான். இருந்தும் சரியாக எழுத வராமல் சலித்துக் கொண்டிருந்தான்.

மாரியப்பன் தன் புதிய பேனாவின் முனையை டஸ்க்கில் இலேசாக ஊன்றி இப்படியும் அப்படியும் வளைத்துக் கொண்டிருந்தான். திடீரென்று அதன் முனை ஒடிந்து விட்டது. உடைந்த முனை வழியாகப் பேனாவிலிருந்து மை வழிந்து, விடைத்தாளில் கொட்டி விட் டது.

உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் சுற்றுமுற்றும் பார்த்தான். யாரும் அவ



"உங்க மகன் ஏன் அழுகிறான்?"

"அவனுக்கு மிக்சர் மருந்து வேண்டாமாம். அல்வா மருந்துதான் வேணுமாம்!

— கு. அருணாசலம்

னைக் கவனிப்பதாகத் தெரியவில்லை. தலையை நிமிர்த்தாமலே ஓரக் கண்ணால் நண்பர்களைப் பார்த்தான்.

அந்த மூன்று நண்பர்களுமே, வேக வேகமாக எழுதிக் கொண்டிருந்தார்கள். அவர்களால் மட்டும் எப்படி எழுத முடிகிறது?

மீண்டும் திரும்பித் திரும்பிப் பார்த்தான். அவர்கள் விரல்களின் இடையே இருந்தவை காசி பிறந்த நாள் பரிசாகத் தந்த பால்பாயின்ட் பேனாக்கள்தாம்!

வெட்கம், வெறுப்பு, இரண்டும் சேர்ந்து, அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது. ஆசிரியர் அவனைக் கவனித்து விட்டார். அருகே வந்தார்.

"நிப்பை ஒடித்து விட்டாயே! வேறு பேனாவில் எழுது" என்றார்.

"என்னிடம் வேறு எதுவும் இல்லை சார்!" என்றான் வேதனையோடு.

"பயம் இருக்கா உனக்கு! பரீட்சைக்கு எப்பவுமே ரெண்டு மூணு பேனா கொண்டு வரணும்." என்று கூறிக் கொண்டே அந்தப் பேனாவை வாங்கிப் பார்த்தார்.

"அடடே! ஜப்பான்னு போட்டிருந்தால் வாங்கிடறதா? இது போலியாச்சே! இப்படித்தான் நிறைய ஏமாத்தறாங்க, ஏமாறுறாங்க! யார்கிட்டேயாவது கேட்டு வேற பேனாவிலே எழுதி முடி."

அப்போது "சார்!" என்று குரல் கொடுத்தான் காசி.

"இதை மாரிக்குத் தரலாமா சார்?" என்று தன் பால்பாயின்ட் பேனாவைப் பிடித்து உயர்த்திக் காட்டினான்.

ஆசிரியர் இருக்கையை விட்டு எழுந்து வந்து அந்த எழுதுகோலை வாங்கிப் பார்த்தார்.

"நம்ம நாட்டுப் பொருள். குறைஞ்ச விலைதான். ஆனால் நல்லா எழுதுமே! எளிய பொருள்தான். ஆனால் டூப்ளிகேட் இல்லே! போலிதான் வேலையைக் காட்டும்" என்று சொல்லிக் கொண்டே அதை மாரியப்பன் முன் நீட்டினார் ஆசிரியர்.

மாரி காசியை நன்றியோடு பார்த்து விட்டு, அதை வாங்கிக் கொண்டு விடைகளை எழுத உட்கார்ந்தான்.

தேர்வு எழுதி முடித்து விட்டு, வகுப்புக்கு வெளியே வந்து காசிக்காகக் காத்திருந்தான் மாரி. அவன் கண்கள் அப்போதும் கலங்கியிருந்தன.

தன்னுடைய பால்பாயின்ட் பேனாவை நீட்டிக் கொண்டே மாரி, ஏதோ சொல்ல வாயெடுக்கும் முன்பே, காசி முந்திக் கொண்டான்.

"எதுவும் சொல்ல வேண்டாம். விலை குறைவா இருக்கிறதெல்லாம் மட்டமான பொருளும் இல்லே. அழகாயிருக்கிறதெல்லாம் உண்மையான பொருளும் இல்லே. நம்மை நாமே ஏமாத்திக்கக் கூடாது. அவ்வளவுதான்!"

தன் முன் கைகளை நீட்டிய மாரியப்பனின் கைகளை அன்போடு பற்றிக் கொண்டு புன்னகைத்தான் காசி. அந்தக் காட்சியைக் கண்டு ஆச்சரியத்தில் விழுந்தார்கள் ஆனந்தன், கேசவன், முத்துமணி மூவரும்!

பாரதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : வி. ராஜேந்திரன்.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 60/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 400/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 30/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 100/-; விமானத் தபால் ரூ. 200/-.